நன்றி - நூலகத்திட்டம்

SARINIHAR

සරිනිහර්

# சரிநிகர்

வாரஇதழ்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ்-201, செப்.17-23, 2000 விலை ரூபா 12.00





சந்திரிகா
தேர்தலுக்காக யுத்தம்!

ரணில்
ஏதாவது பொய் சொல்லி...



டக்ளஸ்
ஆட்டம் காணும் இருப்பு!



சித்தார்த்தன்
கிடைத்தவரை இலாபம்!



பெருமாள்
வெறுங்கையோடு களத்தில்!



சுரேஸ்
பாதை மாறுகிறது!



நன்றி - நூலகத்திட்டம்



# இருளும் யாழ்ப்பாணம்!

குருடன் யாழ் வசித்துப் பெற்ற யாழ்ப்பாணம் அதனால் அது இருண்டு விடும்போன்று தோன்று-கிறது.

போர் மூன்று தசாப்தங்களய் தொடர்கின்ற நிலையில் எப்படி வெளிச்சமாய் இருக்க முடியும்? இறுதியாக இப்பொழுது ஆனை-யிறவு, அரியாலை, சண்டைகளைத் தொடர்ந்து அடுத்த கட்டகம் தொடங்கலாம் என்று மக்கள் முழிபிதுங்கி தமது பொருட்களுடன் அலைவது உச்சமாகிவிட்டது.

பூனையும் குட்டிகளும், மாதிரி யாழ். மக்களும் அவரது உடமை-களும், சிலகாலம், அமைதியாய் நல்லூரர் பகுதிகளில் விழுந்து ஷெல்களால் கல்வியங்காடு, நல்லூர் பகுதிகளில் விழுந்த ஷெல்களால் அமைதியிழக்கத் தொடங்கிவிட்டது. சில நாள் அமைதிக்கு காரணம் உயர்தரப் பரீட்சை மற்றும் யாழின் தேசிய விழாப்போன்ற நல்லூர் கந்தசாமி கோயில் உற்சவம் என்பது கருத்து.

இவை இரண்டும் முடிந்து விட்டன. இதற்காகவே விடுதலைப் புலிகள் அமைதி காத்தார்கள் என்பது யாழ்.வாசிகள் பலரது அபிப்பிரா-யம். இது அவ்வளவிற்குச் சரியா-னதாக இருக்கும் என்று சொல்ல முடியவில்லை. ஆனால், போர் வெடிக்குமட் என்றே தோன்று-கின்றது.

அண்மையில் குடத்தனை பகுதியில் ஒட்டப்பட்ட துண்டுப்-பிரசுரம் அப்பகுதி மக்களில் பலரை வெளியேற வைத்தது. யாழ். நகரப் பகுதிகளிலும், துண்டுப்பிரசுரம் ஒட்டப்பட்டதாக செய்தி உலாவியது. இத்துண்டுப்பிரசுரங்கள் வெளி-யேறும்படி அறிவுறுத்தின. கையால் எழுதப்பட்டு சின்னம் எதுவும் இல்லாதவை இவை என்றும் கூறப்படுகின்றது.

போர் எங்கு வெடிக்கும் என்று எவருக்கும் சரிழவரத் தெரியாது. இதனால் எப்பகுதிக்கு இடம்-பெயர்வது என்று தெரியாத காரணத்தால் முன்னர் இடம்பெயர்-ந்து சென்ற வலிகாமத்தின் உட்-பகுதிகளுக்கு தமது பொருட்களை அனுப்பி வைப்பதில் மக்கள் ஈடுபட்டிருக்கிறார்கள்.

இவை இவ்வாறு இருக்கையில் பாராளுமன்றத் தேர்தல் யாழில் சூடு பிடிக்கின்றது எனக்காட்ட சில கட்சிகள் பெரும் பாடுபடுகின்றன.

தெருச்சமரில் கைகூப்பியபடி வேட்பாளர்கள் தோன்றி-யிருக்கிறார்கள்.

துண்டுப்பிரசுரங்கள் வீதிகளில் மறித்து வழங்கப்படுகிறன்ற. வாங்காமல் போவபவர்கள் முறைக்-கபடுகின்றனர். பிரச்சினையை தீர்ப்பதற்காக எந்த வாக்குறுதியும் இல்லை.

தேர்தலலை எதிர்கொண்டு வாக்குவேட்டைக்காக வேலை வாய்ப்புக்கள் வழங்கும் பணி ஆரம்பித்துவிட்டது.

அண்மையில் இரு துறைகளில் வழங்கப்பட்ட வேுலைவாய்ப்புக்கள் அத்தகைய தன்மை கொண்டதாக தோற்றம் அளிக்கின்றன.

49 பேருக்கு அரச வங்கிகளில் வழங்கப்பட்ட பதவிகள் எவ்வித அரச வர்த்தமானி அறிவிப்பும், இன் றியும் போட்டிப்பரீட்சை இன்றியும் எவ்வாறு இவை வழங்கப்பட்டன என்பது வேலை தேடி அலையும் பலர்க்கு எரிச்சலையும் ஆச்சரியத்-தையும் உண்டு பண்ணியுள்ளது. உதயன் பத்திரிகையில் 49 பேரும் நேர்முகப் பரீட்சைக்கு அழைத்த விபரம் மட்டுமே காணப்பட்டது.

இது காதும் காதும் வைத்ததுபோல மிக இரகசியமாக ஆளுக்கு தலா இரண்டு இலட்சம் ரூபா வரை பெற்றுக்கொண்டு அரச உயர்மட்டம் மூலம் கட்யொன்றால் வழங்கப்பட்டதாகச் சொல்லப்-படுகின்றது.

இதனை நம்பும்படியாகவே உள்ளது. ஏனெனில், அரச வங்கி-களில் பதவி வெற்றிடம் அரச வர்த்தமானிகளில் கோரப்பட்டது. நிரப்பட்டபமை ஆகும். யாழ். உதயனில் சிலர் பகிரங்க துயரக் கடிதம் எழுதியமையும் காண முடிந்தது.

மற்றைய பதவிப் பிரச்சினை இ.போ.சவில் அண்மையில் நடத்துனர் பதவிக்காக 49 பேருக்கு எழுத்துப்பரீட்சை நேர்முகப் பரீட்சை வைத்து தெரிவு செய்து வைத்திய சான்றிதழுடன் வந்தால் வேலை-வாய்ப்பு என்ற நிலையில் அவசர அவசரமாக இதில் இல்லாத 25 பேருக்கு வேறுவிதமாக வேலை-வழங்கப்பட்டு இடம் நிரப்பப்பட்டு விட்டதாகத் தெரியவருகிறது. இவ்விதம் வேலைவாய்ப்பு வழங்-கியதை "வானம்பாடி" சேவையில் ஒருவர் மூச்சடைக்க மூச்சடைக்க பெயர் விபரம் சொன்னதை கேட்ட-போது உண்மையை உணரக் கூடியதாகவும் இருந்தது.

இவை சாதாரண பிரசைகள் பலரை எரிச்சலையடைய வைத்தி-ருக்கின்றன.

போர் ஒருபுறம், பொருளாதாரப் பிரச்சினை ஒருபுறம் இடம்பெயர்வு ஒருபுறம் என்றும் வாழும் மக்களுக்கு கட்சிகள் செய்யும் இப்பணிகள் பொருமத்தமானவையா?

வேலைவாய்ப்பின்மை நாளுக்கு நாள் யாழ்ப்பாணத்தில் அதிகரித்து செல்கையில் இருக்கும் வேலைகளும் பின் கதவினால் வழங்கப்படுவது, சாதாரணமாகவே நியாயமானதாக இல்லை. இப்போதோ பொறுக்குவதற்காக இவை பயன்படுத்தப்படுகின்றன. தேர்தல் ஜனநாயகப்ம் அற்புதமாக இல்லையா?

"அவர்கள்" வந்தால் எல்லாம் சரியாகும் என்று சிலர் புறுபுறுப்பது இங்குள்ள பலருக்கு சரியாகவே தோன்றுகின்றது.

இந்தக் காரணங்களினால் தான் யாழ்ப்பாணம் இருளுக்குள் செல்-கின்றது என்றுகூற முடிகின்றது. இதனிடையே கப்பல் போக்குவரத்துப் பயணச்சீட்டு யார் வழங்குவது என்ற அடிபிடி அதன். முடிவு தான் தெரிந்ததே.

மொத்தமாக யாழ் மக்களில் நிலை கவலைக்கு இடம் தான். தேர்தலில் யாருக்கும் நம்பிக்கை இல்லை. போர் அச்சத்தை தரப் பார்க்கின்றது

❒ முனிவன்


# மனித சமூகத்திற்கு எதிரான வன்முறை!

'செழியன் பேரின்பநாயகம்' அவர்களும் மனோகரன் பிள்ளை அவர்களும் துப்பாக்கி நபர்களால் படுகொலை செய்யப்பட்ட செய்தி இப்போது பழைய செய்தியாகி-விட்டது. பழம்பெரும் பத்திரிகை-யாளரும் எழுத்தாளருமான செழிய-னுடைய அரசியல் சார்புக்காக அவர் படுகொலை செய்யப்பட்டமை இன்னும் தொடரும் தனி நபர் பயங்கரவாதத்தின் இழிசெயலுக்கு கிடைத்த அண்மைய உதாரணம் எனலாம்.

இக்கொலை புலிகளால் தான் மேற்கொள்ளப்பட்டது என்று ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவிக்-கின்றன.

தேர்தலில் ஈடுபடுவதை ஆதரித்துக் கொண்டு ஒருவர் ஒரு குறிப்பிட்ட கட்சியில் சேரக்கூடாது என்று கூறும் அரசியல் அபத்த-மானது. அது ஒருவரின் அரசியல் உரிமையை மறுதலிக்கும் கண்டனத்துக்குரிய குற்றமாகும்.

தேர்தலை ஆதரிக்காவிட்டாலும் கூட, அதில் ஈடுபடுபவர்களை கொல்வது ஒருவரின் கருத்துச் சுதந்திரத்தை மறுக்கும் கண்ட-னத்துக்குரிய குற்றமாகும்.



மனிதரின் சிந்தனைகள் துப்பாக்கிகளின் பலத்தால் கட்டுப்-படுத்தப்படக் கூடியவை அல்ல.

அப்படியானால் துப்பாக்கி வைத்திருக்கிற ஒருவரால் முழுச் சமூகத்துக்குமே மரண தண்டனை வழங்க முடியும் அப்படிச் செய்வது நியாயம் என்ற நிலை தோன்றி விடும்.

புலிகள் இதைச் செய்திருந்-தாலும் சரி, வேறு யார் செய்திருந்-தாலும் சரி இது மனித சமூகத்திற்கும் அதன் வளர்ச்சிக்கும் எதிரான வன்முறை என்பதை மறந்து விட முடியாது.

இதைத் தொடர்பவர்களுக்கு மக்களின் அரசியல் விடுதலை அதிகாரம் பற்றி பேசும் யோக்கியதை இல்லாமல் போகிறது.இது இப்படித் தொடருமாயின் இவ்வாறான கொலைகளை எதிர்ப்பதற்காகவே வரலாறு தன்னுடைய இன்னொரு நூற்றாண்டை அநியாயமாக இழக்க நேரிடும்.

சம்பந்தப்பட்டவர்கள் இதுபற்றி நிதானமாகச் சிந்திக்க வேண்டும்.

கொல்லப்பட்ட பத்திரிகை-யாளர் செழியன் அவர்களின் குடும்பத்தினர்க்கு சரிநிகர் தனது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.



## தமிழ் இனி 2000 ஆற்றாமை.1

சென்னையில் கடந்த 1ம் 2ம் 3ம் திகதிகளில் நடைபெற்ற தமிழ் இனி மாநாடு பற்றிய சில சுவையான தகவல்களை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என்று நினைக்கின்றேன்.

மாநாடு ஆரம்பமாவதற்கு முன்தினம், சரிநிகரைச் சேர்ந்தவர்களை சந்திக்கவென குமுதம் பத்திரிகையிலிருந்து இரு பத்திரிகையாளர்கள் வந்திருந்தனர். தமிழ் இனி 2000 மாநாட்டை ஒரு 'கும்பமேளா' (நமது பாசையில் 'கும்மாளம்') என்று காரசாரமாக விமர்சிக்கும் ஒரு அறிக்கையின் கையெழுத்துப் பிரதியையும் அவர்கள் எடுத்து வந்திருந்தனர். அ. மார்க்ஸ் அவர்களால் எழுதப்பட்ட இவ்வறிக்கை மாநாட்டின் நோக்கம், அதன் ஒழுங்கமைப்பு, பேராளர்களை தெரிவுசெய்த முறைமை என்பவை பற்றியெல்லாம் கேள்வி எழுப்பியிருந்தது. குமுதத்தில் வெளியிடப்படுவதற்காக கொடுக்கப்பட்டதாக கூறப்பட்ட அந்த அறிக்கையின் கையெழுத்துப் பிரதியை எம்மிடம் தந்த அப்பத்திரிகையாளர்கள் 'மார்க்சின் இந்த அறிக்கை பற்றி ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா?' என்று கேட்டார்கள்.

இப்பத்திரிகையாளர்களில் ஒருவர் அ. மார்க்சின் புதல்வியான ஞானபாரதி, மற்றையவர் சங்கரராம சுப்பிரமணியன்.

'ஏன் கேட்கிறீர்கள்' என்று கேட்டேன். நான் கேட்டதற்கு காரணம் இருந்தது. சரிநிகரைப் பொறுத்தவரை அதற்கு ஒரு அறிக்கை கிடைக்குமானால், அந்த அறிக்கை உள்ளடக்கியுள்ள விடயங்கள் மக்களின் அக்கறைக்குரிய விடயங்கள் தான் என்று சரிநிகர் கருதுமானால், அதில் குறிப்பிடப்பட்டுள்ளவர்களிடம் அபிப்பிராயம் கேட்பது என்ற நடைமுறையை அது கடைபிடிப்பதில்லை. மாறாக, அதை வெளியிட்டுவிட்டு, அது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் பின் ஏதாவது அபிப்பிராயம் தெரிவித்தார்கள் என்றால் அவற்றையும் அதேயளவுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுப்பது தான் சரிநிகரின் வழமை. இதுவே நான் இக்கேள்வியை கேட்டதற்கான காரணம். இந்தக் காரணத்தையும் அப்பத்திரிகையாளர்களிடம் நான் விளக்கினேன்.

எனது கேள்விக்கு அவர்கள் பதில் சொல்லாமல் போகவே, 'குமுதம் இந்த மாநாடு பற்றி என்ன கருதுகிறது? அதற்கு மாநாடு பற்றி கேட்க ஏதாவது இருக்கிறதா?' என்றும் கேட்டேன்.

அதற்கு அவர்கள் பதில் சொல்லவில்லை. ஆனால், அவர்கள் என் முதலாவது கேள்விக்கு பதில் சொன்னார்கள். "மாநாடு நாளை நடக்கவிருப்பதால், இப்படி ஒரு அறிக்கை வந்திருக்கும் சூழலில் உங்கள் கருத்தை அறிய விரும்பினோம் என்றார்கள்".

'குமுதத்தில் பத்திரிகைத்துறை நடைமுறை இருதரப்புக் கருத்துக்களையும் கேட்டுப் பிரசுரிப்பது மட்டும் தானா? குமுதத்திற்கென அபிப்பிராயம் எதுவும் இல்லையா' என்றும் கேட்டேன்.

அதற்கும் அவர்கள் பதில் சொல்லவில்லை.

பிறகு, அ. மார்க்ஸ் அவர்களது அறிக்கை உங்களிடம் எழுத்துருவில் தரப்பட்டிருப்பதால், அதன் பிரதி ஒன்றை எங்களிடம் தரும்படியும் எமது கருத்தை நாமும் எழுத்திலேயே தருகிறோம் என்றும் கூறினேன். ஆனால், அதன் ஒரு பிரதியை எம்மிடம் தரும் அதிகாரம் தமக்கு இல்லையென்று அவர்கள் சொன்னார்கள். 'அப்படியானால் தாராளமாக பிரசுரியுங்கள். நாம் பின்னர் எமது பதிலை எழுதுகிறோம் என்றேன்.

ஆனால், ஆச்சரியப்படும் விதத்தில் மறுநாள் அந்த அறிக்கை துண்டுப் பிரசுரமாக்கப்பட்டு கூட்டத்திற்கு வந்திருந்தோரிடம் விநியோகிக்கப்பட்டது. குமுதத்தில் அது வெளியிடப்படவில்லை. பதிலாக நிறப்பிரிகை செம்படம்பர் இதழில் பின்னர் அது வெளியாகியிருந்தது.

மார்க்சின் இந்த அறிக்கை தொடர்பாக காலச்சுவடு பத்திரிகையை சேர்ந்த கவிஞர் மனுஷ்யபுத்திரனுடன் பேசினேன். அவர் சொன்னார். "நான் மிகவும் மதிக்கிற ஒரு மனிதர் அவர். அவர் நிறைய காத்திரமான விடயங்களை செய்திருக்கிறார். இந்த மாநாட்டில் கட்டுரை படிக்க கலந்து கொள்ளுமாறு அவரிடம் பல தடவை நான் கேட்டேன். கடிதத்தின் மேல் கடிதம் எழுதினேன். அவர் கலந்து கொள்ளவில்லை. அவர் கட்டாயம் கலந்து கொண்டிருக்க வேண்டிய ஒருவர். அவர் மறுத்தது பெரும் இழப்பு. இப்படி ஒரு அறிக்கையை அவர் வெளியிட்டது எனக்கு பெரும் கவலை அளிக்கிறது".

என்ன செய்வது? சிலருக்கு தமது முக்கியத்துவம் பலமும் எங்கே இருக்கிறது என்பது புரிவதில்லை. தமது ஆற்றலையும் பங்களிப்பையும், இந்தப் புரிதலின்மையால், அற்ப விடயங்களில் செலவு செய்து கொண்டிருக்கிறார்கள் என்று தோன்றியது.

## ஆற்றாமை.2

கே.எஸ். சிவகுமாரன் அவர்கள் தமிழ் இனி மாநாட்டில் கட்டுரை வாசிக்க, கலந்து கொள்ள நேரமில்லை என மறுத்திருந்த போதும் பின்னர் அங்கு வந்து கலந்து கொண்டார். 'இதழியலும் இலக்கியமும்' என்ற தலைப்பில் நடைபெற்ற அமர்வில் அவர் கருத்துரையாளராகவும் பங்கேற்றார்.

மார்க்சினால் எழுதப்பட்ட அறிக்கை பிரசுரமாக விநியோகிக்கப்பட்டது போலவே பேராளர்கள் மத்தியில் இன்னொரு பிரசுத்தை கே. எஸ். விநியோகித்தார்.

'சுய விபரக் கோவை' என்ற தலைப்பில் அச்சிடப்பட்ட இப்பிரசுரம் அலரது 'சுய விளம்பரக் கோவை' என்று பலராலும் கிண்டலாகப் பேசப்பட்டது. தனது கல்வி, தொழில், தான் எழுதியவை என்று ஒரு நீண்ட பட்டியலை இந்தச் சுயவிபரக் கோவையில் அவர் சேர்த்திருந்தார்.

மூத்த பத்திரிகையாளரும், எழுத்தாளருமான ஒருவர் இப்படி நடந்து கொண்டமை, அதிலும் தமிழ் நாட்டில் போய் இப்படிச் செய்தமை, இலங்கையிலிருந்து அங்கு சென்றிருந்த பல பேராளர்களுக்கும் தலைகுனிவையும், கூச்சத்தையும் ஏற்படுத்தியிருந்ததை அவர்கள் தெரிவித்த அபிப்பிராயங்களிலிருந்து தெரிந்துகொள்ளக் கூடியதாக இருந்தது.

தமது தகமைகளையும் தகுதியையும் கௌரவத்தையும் காத்துக் கொள்வது எப்படி என்று யாராவது ஒரு குறிப்பை இவர்களுக்காக எழுதினால் என்ன?

நுணலும் தன் வாயால் கெடும் என்பார்கள். கே.எஸ். தனது பிரசுரத்தால் கெட்டார், போங்கள்!

நன்றி - நூலகத்திட்டம்



## யாழ். யுத்தகள நிலை:

# இராணுவத்தின் யுத்த மனோ நிலையில் சிதறல்?

ஸ்ரீலங்காப் படைகள் குடாநாட்டில் இன்று எதிர்நோக்கும் இரு பிரச்சினைகள் இம்மாதம் மூன்றாம் திகதி நடைபெற்ற பெரும் படைநகர்வு முயற்சியில் வெளிப்பட்டன.

இதில் முதலாவது வழங்கலும், போக்குவரத்தும். இரண்டாவது சூட்டாதரவு (Fire support) குடாநாட்டில் தற்பொழுது சிறீலங்காப் படையினர் எதிர்கொள்ளும், போர்க்களங்கள் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு அளவிலும், செறிவிலும் பெரிதாய் உள்ளன. போர்க்களங்களின் இப்பரிமாணங்கள் விரிவடைய விரிவடைய அவற்றிற்கான வழங்கல் தேவைகளும், அதிகரிக்கும் என்பது நியதி. அத்துடன் களமுனைக்கான போக்குவரத்துச் சிக்கல்களும் கூடும். இதில் குறிப்பாகக் காயம் பட்டவர்களை களமுனையிலிருந்து பாதுகாப்பாக அகற்றி மருத்துவ உதவி கிடைத்திடக்கூடிய இடங்களுக்குக் கொண்டு செல்லுதல் என்பது அத்தியாவசியமானது. போரில் காயப்படும் படையினரை உடனுக்குடன் இவ்வாறு மருத்துவ வசதி கிடைக்கக்கூடிய இடங்களுக்கு எடுத்துச் செல்லாவிடின் அது போரில் ஈடுபட்டிருக்கும் ஏனையோரின் உளநிலையைப் பாதிக்கும். போரில் புண்பட்டால் மருத்துவ வசதியின்றிக் கட்டாயம் இறக்க வேண்டி வரும் என ஒரு படையினன் எண்ணுவானாயின் அவன் களத்தில் முன்னேறிச் சண்டையிட மாட்டான்.

இது இருபதாம் நூற்றாண்டில் போரின் தன்மையில் ஏற்பட்ட ஒரு முக்கிய மாற்றமாகும். இதனாலேயே 20ம் நூற்றாண்டில் மேற்கு நாட்டுப் படைகளின் ஒரு முக்கிய அங்கமாக மருத்துவ அணிகள் (Medical corps) செயல்படலாயின. அத்துடன் காயம் பட்டவர்களை களமுனையிலிருந்து வெளியெடுத்தல் என்பதும் ஒரு விசேட துறையாக வளர்ச்சி பெற்றது. (அமெரிக்கப் படைத்துறை சிறீலங்கா இராணுவத்திற்கு வழங்கும் பயிற்சிகளில் இந்தக் காயம் பட்டோரின் வெளியெடுப்பு என்பதும் ஒரு முக்கிய அங்கமாக உள்ளது.) பண்டைத் தமிழரின் போர்க்கள வழக்கங்களில் ஒன்றாக "புண் கிழித்து முடியும் மறம்" என்பது புறப்பொருள் வெண்பா மாலையில் கூறப்படுகிறது. பெரும் புண்பட்ட மறவர்கள் தமது புண்ணைக் கிழித்துத் தற்கொலை செய்து கொள்ளும் இவ்வழக்கு போரிடுதலின் இன்றியமையாத ஒரு அங்கமாக காயம்பட்டோரின் வெளியெடுப்பு மருத்துவ அணிகள் என்பன இல்லாத ஒரு காலத்தில் போர்க்களங்களின் நிலையை நமக்குக் காட்டுகின்றது.

அன்று புண் கிழித்து முடிதல் மறமாண்பு எனப் புறப்பொருள் வெண்பாமாலை போற்றுவதற்கும் இன்று ஒரு படையின் போரிடுதிறன் அதனுடைய மருத்துவ அணிகளின் சிறப்பிலும், காயப்பட்டோரை வெளியெடுக்கும் வலுவிலும் தங்கியிருக்க வேண்டியமைக்கும் விஞ்ஞானத்தின் வளர்ச்சியும் அதையொட்டிய சமூக எதிர்பார்ப்புகளுமே காரணமாகும்.

புலிகள் ஈழப்போரில் பெற்றுவரும் வெற்றிகளுக்கு அவர்களின் மருத்துவ அணிகளும், காயப்பட்டோரை வெளியெடுக்கும் திறனும், கோடிக்கணக்கான செலவில் அவர்கள் நிறுவியுள்ள நிலக்கீழ் மருத்துவமனைகளுமே காரணமெனில் மிகையாகாது.

யாழ்ப்பாணத்தின் முக்கிய மருத்துவ மனைகளையும் கிளிநொச்சி மருத்துவ மனையையும் கைப்பற்றிவிட்டால் புலிகளால் மரபுவழிப் போரில் ஈடபட முடியாது போய்விடும் என சிறீலங்காப் படைத்துறையினர் திடமாக நம்பிய ஒரு காலமும் இருந்தது.

இந்த வகையில் கடந்த 3ம்திகதி குடாநாட்டில் புலிகளுக்கும் சிறீலங்காப் படைகளுக்குமிடையில் நடைபெற்ற சண்டை நவீன உள்நாட்டுப் போர்களின் வரலாற்றில் ஒரு முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

அதாவது இரு முனைகளில், ஒப்பீட்டளவில் குறுகியதான ஒரு புவியியற் பரப்பில் எட்டு மணித்தியாலங்களே நடைபெற்ற ஒரு சண்டையில் ஒரு தரப்பில் மட்டும் 956 பேர் காயப்பட்டதென்பது உலகின் அண்மைக்கால போர் வரலாற்றில் இல்லாத ஒன்று.



இதில் 306 படையாட்கள் கடுங்காயங்களுக்கு உட்பட்டதாக சிறீலங்கா அரசு ஒத்துக் கொள்கிறது.

இங்கு நாம் சுட்டிக்காட்ட முற்படுவது என்னவெனில் இவ்வாறான ஒரு காயப்படுதல் எண்ணிக்கை பெருகிய போர்க் களங்களைச் சமாளிக்கக்கூடிய நிலையில் சிறீலங்கா அரசு இல்லையென்பதேயாகும். இதுவும் குடாநாட்டில் இனிவரப்போகும் போர்களின் வெற்றி தோல்விகளைத் தீர்மானிக்கும் காரணிகளில் ஒன்றாக அமையப் போகிறது.

குறுகிய நேர இடைவெளிக்குள் பெருந்தொகையான படையாட்கள் காயப்படக்கூடிய போர்க்களங்களை வான்வழியாக மட்டுமே உடன் வெளியெடுப்புச் செய்யக்கூடிய ஒரு இடத்தில் இனி எதிர்கொள்ள வேண்டிய இக்கட்டில் மாட்டிக்கொண்டுள்ளது சிறீலங்காப் படைத்துறை. (இதையது உணர்ந்துள்ளதோ இல்லையோ யானறியேன்.)

காயப்படுவோரின் தொகை குறுகிய நேர இடைவெளிக்குள் மிக அதிகமாகக் காணப்படுமாயின் அவர்களை வெளியெடுப்பதற்கான முயற்சிகளின் செறிவும் அதிகரிக்க வேண்டும். குடாநாட்டில் இது சிறீலங்கா வான்படையின் கையிலேயே தங்கியுள்ளது.

கடந்த 3ம்திகதி நடைபெற்ற சண்டையில் காயப்பட்ட படையாட்களை உடனுக்குடன் மருத்துவ உதவிக்கு வெளியெடுப்பதற்கென இரு உக்கிரேனிய அன்டொனோவ் 32 (AN32) விமானங்களே தொடர்ந்து இயங்க வேண்டியதாயிற்று. ஆனால் இவையிரண்டும் தொடர் பறக்கையால் கோளாறுகளுக்குள்ளாகி நின்று விட்டன. பின்னர் ஒரு Mi 17 உலங்கு வானூர்தி மூலம் கடுங்காயங்களுக்கு உள்ளானவர்களை மட்டுமாயினும் வெளியெடுக்க முற்பட்ட போது அதுவும் பழுதடைந்து விட்டது. இதன் பின்னர் அனுராதபுரத்திலிருந்து வேறு சில Mi 17 உலங்கு வானூர்திகள் வரவழைக்கப்பட்டு அவற்றில் கடுங்காயம் அடைந்தவர்கள் அனுப்பப்பட்டனர். இவற்றின் வருகைக்காக நீண்டநேரம் காத்திருக்க வேண்டியிருந்ததால் கடுங்காயங்களுக்குள்ளான 11 படையினர் இறந்து போய் விட்டனர். இது அங்கிருந்த ஏனைய படையினர் மத்தியில் கடும் விசனத்தை உண்டு பண்ணியுள்ளது. இதில் உள்ள பெரும் சிக்கல் என்னவெனில் போர்க்களங்கள் தொடர்ந்து உக்கிரமடைகையில் சிறீலங்கா வான்படையிடம் உள்ள Mi 17 மற்றும் Mi 24 வகை உலங்குவானூர்திகள் சண்டை பிடிக்கும் படைகளுக்குக் களமுனையில் சூட்டாதரவு வழங்குவதா அல்லது அதிகரித்துச் செல்லும் காயப் பட்டோரின் தொகையைச் சமாளிக்கச் செல்வதா என்கின்ற சிக்கலை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இச்சிக்கலைச் சமாளிக்கவே ஆறு மாதங்களின் முன்னர் மிகப்பெரும் பொருட்செலவில் இலங்கை அரசு C - 31 வகை (Hercules) படையாட்காவி வானூர்தியொன்றை வாங்கியது. இதில் ஒரு தடவையில் 100க்கு மேற்பட்ட படையினரை ஏற்றிச் செல்லலாம். ஆனால், இக்கொள்வனவை ஒழுங்குசெய்த ஏஜன்ட் பெருந்தொகையான பணத்தைச் சுருட்டிக் கொண்டது தான் மிச்சம். இந்த C-31 விமானத்தின் ஒரு புகை வெளியேற்றக் குழாயில் வெடிப்பிருப்பது கண்டுபிடிக்கப்பட்டதாலும் அவ்வுதிரிப்பாகத்தை வாங்குவதில் சிக்கலுள்ளதாலும் அது பறக்க முடியாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதில் நாம் கவனிக்கவேண்டிய விடயம் என்னவெனில், பலாலி இறங்கு தளத்தை மே மாதம் நடந்த சண்டையில் எறிகணை வீசிச்சேதப்படுத்தி இயங்க முடியாமற் செய்த புலிகள் இம்முறை அதை மீண்டும் செய்யக்கூடிய பீரங்கி வீச்சுத்திறன் இருந்தும் அதைச் செய்யவில்லையென்பதாகும்.

ஆனால், அவர்கள் மீண்டும் பலாலியைக் குறிவைக்கும் ஒரு சூழ்நிலை இனிவரும் போர்க்களங்களில் தோன்றுமேயானால் சிறீலங்கா அரசு அதைச் சமாளிக்கத் திண்டாடப் போகிறது என்பதில் ஐயமில்லை.

இச்சிக்கலுக்கு மாற்று நடவடிக்கையாக ஏன் சிறீலங்கா அரசு பெரிய மருத்துவ மனைகளை குடாநாட்டிலேயே இதுவரை கட்ட முயற்சிக்கவில்லை? பலாலியில் தற்போதுள்ள இராணுவ மருத்துவமனையில் சிறுகாயம்பட்ட நூற்றுக்கு மேற்படாத படையினரை மட்டுமே கவனிக்கக்கூடியதாகவுள்ளது. கொழும்பிலும் அனுராதபுரத்திலும் உள்ளதைப் போன்ற பெரும் மருத்துவ மனைகளை யாழ்ப்பாணத்தில் கட்டினால் ஒரு காலத்தில் அது புலிகளின் கைக்குப் போய்விடும் என்ற உட்பயத்தில் சிறீலங்கா அரசு உள்ளதோ என்று கூட நாம் யோசிக்கத் தோன்றுகின்றது.

> “ பலாலி இறங்கு தளத்தை மே மாதம் நடந்த சண்டையில் எறிகணை வீசிச்-சேதப்படுத்தி இயங்க முடியாமற் செய்த புலிகள் இம்முறை அதை மீண்டும் செய்யக்கூடிய பீரங்கி வீச்சுத்திறன் இருந்தும் அதைச் செய்யவில்லை. இதற்கான காரணம் என்ன? ”



● டி.சிவராம்

நன்றி - நூலகத்திட்டம்

# தேர்தல் கண்காணிப்புக்கு புத்த பிக்குகள்

## வரவேற்கின்றன சிங்களப் பத்திரிகைகள்

நடந்த வார இறுதியில் சிங்களப் பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட செய்திகள் அனைத்தினதும் பிரதான செய்தியாக எதிர்வரும் பொதுத்தேர்தல் குறித்தான சூடான அறிக்கையிடல்களை காணக் கிடைத்தது.

**1. "திவயின ஞாயிற்று வெளியீடு" (செப். 10)**

வன்முறைகள் அதிகாரிக்கும் என கருதப்படும் பிரதேங்களுக்கு அதிக வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள்

முதலாவது வெளிநாட்டு கண்காணிப்பு குழு வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு

**2. "இரிதா பெரமுண"**

உள்நாட்டு வெளிநாட்டு அழுத்தங்களினால் கள்ளவோட்டுக்கு வாய்ப்பில்லாத சூழ்நிலை.

**3. "இரிதா லங்காதீப"**

5000 அரச வாகனங்கள் தேர்தல் வேலைகளுக்கென உபயோகம். - கட்சிகள் பல ஆணையாளரிடம் முறைப்பாடு.

**4. "இரிதா லக்பிம"**

தேர்தலுக்கு முன் பின் கதவால் 10 பேர் நியமனம்

**5. "சிலுமின"**

பலதரப்பட்ட வன்முறைகளில் ஈடுபட்டு விட்டு அவற்றை பொ.ஐ.மு. மீது சுமத்த திட்டம்!

- தொடர்பூடகங்கள் மற்றும் கண்காணிப்பாளர்கள் உஷார் நிலையில்

வார இறுதி சிங்கள பத்திரிகைகளின் பிரதான தலைப்புச் செய்திகளில் "இரிதா பெரமுன" மற்றும் "இரிதா திவயின" பத்திரிகைகள் இரண்டும் ஒரேவிதமான செய்தியையே பிரசுரித்துள்ளது. இச்செய்திகள் இரண்டிலும் தேர்தல் வன்முறை சம்பவங்கள் மற்றும் வாக்கு வேட்டைகள் என்பனவற்றை தடுக்க உள்நாட்டு வெளிநாட்டு அமைப்புகள் தலையெடுத்துள்ளதாக குறிப்பிடப்படும்போதிலும் "இரிதா பெரமுண" பத்திரிகையில் சுட்டிக்காட்டத்தக்க வகையில், பிக்குகள் உட்பட பலர் வரலாறு காணாத வகையில் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட தயாராக உள்ளதால் எவராலும் துஷ்பிரயோகத்தினால் தேர்தலில் வெற்றிக்கொள்ள முடியாதென குறிப்பிடப்பட்டுள்ளது. "திவயின" பத்திரிகையில் பிரதான செய்தியாக, வடக்கு கிழக்கு மாகாணங்களில் தேர்தல் வன்முறை சம்பவங்களை தடுப்பது குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. இந்த இரண்டு செய்திகளிலும் காணக்கிடைக்கும் விசேட விடயமாக தேர்தல் வன்முறை செயற்பாடுகள் மற்றும் வாக்குவேட்டை என்பனவற்றை தடுக்க உள்நாட்டு - வெளிநாட்டு அமைப்புக்களினால் இயலும் என்ற முன்னேற்றகரமான செய்தி வெளியிடப்பட்டுள்ளது. நீதியானதும், சுதந்திரமானதும் தேர்தலுக்கு பெரும்பாலான வாக்காளர்களின் ஆதரவும், பொறுப்பும் தேவை என்பது குறித்து இந்த செய்திகள் இரண்டிலும் குறைந்த பட்ச அறிக்கையிடல் எதுவுமில்லை.


"லக்பிம" மற்றும் "லங்காதீப" பத்திரிகைகள் இரண்டினதும் தலைப்புச்செய்திகளில் பொ.ஐ.மு. அரசாங்கத்தினால் தேர்தலில் வெற்றிபெற அரச சொத்துக்கள் பயன்படுத்தப்படுவதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.




இந்த பத்திரிகைகள் நான்கையும் விட மிகவும் மாறுபாடான வழியைப் பின்பற்றும் சிலுமின பத்திரிகை தனது தலைப்புச்செய்தியில், பொ.ஐ.மு. அரசாங்கத்தை அவப்பெயருக்குட்படுத்தும் வகையில் பிரதான அரசியல் கட்சியொன்று தந்திரோபாயமான திட்டமொன்றை செயற்படுத்த தயாராக உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி பல வன்முறைகள் மேற்கொள்ளப்பட்டு அவை பொ.ஐ.முவினால் மேற்கொள்ளப்பட்டவையாக இலத்திரனியல் ஊடகங்களில் பிரச்சாரப்படுத்த அக்குறிப்பிட்ட அரசியல் கட்சி திட்டமிட்டுள்ளதாக செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த செய்தின் முக்கியமான விடயமாக இத்தந்திரோபாயத்திற்கு சில தேர்தல் கண்காணிப்பு குழுக்களும் ஊடக நிறுவனங்களும் கூட்டிணைந்துள்ளன என்பது முக்கியப்படுத்தப்பட்டுள்ளது.

முழுமையாக நோக்கினால்', சிலுமின பத்திரிகைய தவிர பிற வார இறுதி சிங்களப் பத்திரிகைகள் அனைத்தும் தமது தலைப்புச் செய்தியின் மூலம் பொ.ஐ.முவுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளது. தலைப்புச் செய்தியைத் தவிர இந்த பத்திரிகைகள் அனைத்தினதும் செய்திகள்/ கட்டுரைகள் மற்றும் ஆசிரியருக்கு கடிதம் ஆகிய உள்ளடக பக்க அமைப்புகளில் 85 சதவீதம் பொதுத்தேர்தல் பற்றிய விடயங்களை உள்ளடக்கியுள்ளன.

இவற்றை நுணுகி ஆராய்ந்தால் ஒரு விடயம் புலப்படும். அதாவது "சிலுமின" பத்திரிகை பொ.ஐ.முவுக்கு சார்பாக மற்றும் பிற எதிர்க்கட்சிகளுக்கு எதிராக தமது செய்திகளையும்,




கட்டுரைகளையும் பயன்படுத்தியுள்ளது. திவயின, லக்பிம, லங்காதீப மற்றும் பெரமுண ஆகிய பத்திரிகைகள் அனைத்தும் இதற்கு எதிரான கோணத்தில் நேரடியாக அல்லது மறைமுகமாக செய்திகளை பிரசுரிப்பதான காணக் கூடியதாகவுள்ளது. தேர்தலின் முன் அரசியல் கட்சிகள் மட்டுமன்றி, சிங்கள வார இறுதி பத்திரிகைகள் கூட தனது தனித்த அரசியல் விருப்புவெறுப்புகளுக்கேற்ப செயற்படுகின்ற அடையாளத்தை காணக் கூடியதாக உள்ளது.




வார இறுதி பிரதான சிங்கள பத்திரிகைகளில் பொதுவாக ஆர்வத்துடன் அறிக்கையிடப்பட்டுள்ள ஒரு செய்தி மூலம் வாசகர்களின் அதிக கவனத்தை பெற முயற்சிக்கப்பட்டுள்ளது. அச்செய்தி தேர்தல் கண்காணிப்புக்கு புத்தபிக்குகள் முன்வந்துள்ளனர் என்பதே. இந்த முடிவை ஆதரித்து லக்பிமவும், லங்காதீபவும், திவயினவும், பெரமுனவும் செய்தியையும் கட்டுரைகளையும் வெளியிட்டிருந்தன. புத்த பிக்குகள் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபடுவது பொருந்துமா? பொருந்தாதா? என்ற வினா கல்விமான்கள், அரசியல்வாதிகள், கட்சித் தலைவர்கள் ஆகியோரிடம் வினவப்பட்டு கருத்துக்களை வெளிப்படுத்தும் விசேட கட்டுரைகளில் 95 சதவீதமானவை இம்முடிவுக்கு சார்பானதாகவே உள்ளது. அத்துடன் எந்தவொரு அரசியல் கட்சிக்கும் சார்பின்றி பிக்குகள் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபடவேண்டும் என்பது பொதுவான கருத்தாகும் எனினும், சிஹல உறுமய கட்சியின் தேசிய அமைப்பாளர் சம்பிக்க ரணவக்க அவர்கள், புத்த பிக்குகள் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபடுவதை விட சிங்கள அரசொன்றை கட்டியெழுப்ப சிஹல உறுமயவுக்கு ஆதரவு தரவேண்டும் என கோரியுள்ளார். 1994ல் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு சக்திகள் அதிக செல்வாக்கு பெற்றிருந்தபோதிலும் இம்முறை இவற்றையெல்லாம் விட பிக்குகளின் செல்வாக்கு அதிகரித்துள்ளதாகவும், இந்நிலைமையை ஏற்படுத்தியது சிஹல உறுமய கட்சியாகும். இதனால் பிக்குகள் சிஹல உறுமயவுக்கு ஆதரவளிப்பது அவர்களது தேசிய கடமையென அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

லங்காதீப பத்திரிகையில் கும்பகர்ண எனும் பத்தி கட்டுரையில் "பிரபாவின் நிகழ்ச்சி நிரலும் யாழ்ப்பாண தேர்தலும் என்ற தலைப்பிலான ஆக்கத்தில் சுட்டிக் காட்டப்படவேண்டிய விடயம் ஒன்று காணப்படுகின்றது. சிஹல உறுமய அரசியல் கட்சிக்கு ஆதரவாக எழுதப்படும் அக்கட்டுரையில், யாழ்ப்பாணத்தில் சிஹல உறுமய போட்டியிடுவது இன பவித்திரத் தன்மையை நீரூபிக்க அன்றி சிங்கள மக்களின் குறியீட்டை வெளிக்காட்டவே என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு சமமான கருத்துக்களைக் கொண்ட கட்டுரையொன்று லக்பிம பத்திரிகையில் வெளியிடப்பட்டிருந்தது. அதில் யாழ்ப்பாணத்தில் வாக்காளர்கள் அல்லாத சிங்கள கூட்டமொன்று அதன் வரலாற்று உரிமையை அர்த்தப்படுத்துவதற்கே போட்டியிடுகின்றது என குறிப்பிடப்பட்டிருந்தது. சிஹல உறுமயவை தவிர ருகுணு மக்கள் கட்சியும் யாழில் போட்டியிடுகின்றது.

திவயின ஞாயிறு வெளியீட்டில் விசேட முக்கியத்துவத்துடன் "தேசிய சக்திகளை பலப்படுத்த இந்த தேர்தலை பயன்படுத்திக் கொள்வோம்" என்ற தலைப்பில் குணதாச அமரசேகரவுடனான பேட்டி பிரசரிக்கப்பட்டிருந்தது.

முழுமையாக நோக்கினால் வார இறுதி சிங்கள பத்திரிகைகள் அனைத்தும் இனத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட அரசியல் தொடர்பூடக பயன்பாட்டை இந்தத் தேர்தல் காலத்தில் காணப்படுவதனை சுட்டிக்காட்டலாம்.

பிக்கும் உரிமாக பின்பற்றும் அடையாளம்

பொதுத்தேர்தல் தொடர்பாக பிரசுரிக்கப்பட்டிருந்த செய்திகள் மற்றும் கட்டுரைகளில் 90 சதவீதமானவை இனத்துவ கோணத்தைக் கொண்டவை. இவை இறுதி தேர்தல் முடிவுகளில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தும் என தற்போது எதிர்வு கூறமுடியாது. வார இறுதி பத்திரிகைகளில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இத்தேர்தலில் செயற்படும் முறை முழுமையாக அறிக்கையிடப்பட்டிருந்தாலும் அவை முஸ்லிம் காங்கிரசுக்கு எதிரானதாகவே உள்ளது.

சிங்கள வாசகர்கள் மத்தியில் அரசியல் ரீதியாக முஸ்லிம் காங்கிரஸ் குறித்து விமர்சிப்பது என்பதற்கு பதில் இனத்துவ கோணத்தில் செய்திகள் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. இத் தேர்தல் இனங்களுக்கிடையே குழப்பத்தை ஏற்படுத்தவும், அதற்கு சிங்கள பத்திரிகைகள் தூபமிடுவதையும் தான் இன்று மேற்கொள்கின்றதா என்பது பிரச்சினைக்குரிய விடயமாகும்.

**— கே.சி.ஜே. ரத்நாயக்கா**


---

# சிங்களத்திற்கு எதிரான சக்தி

## சிஹல உறுமய

## பூமிபுத்ர கட்சி குற்றச்சாட்டு!

மக்கள் ஐக்கிய முன்னணி, சிஹல உறுமய, பூமிபுத்தர கட்சி ஆகிவற்றினால் ஒன்றிணைந்து ஒரு கூட்டு கட்சியை உருவாக்க முடியாமற் போனது குறித்து சிங்கள ஆங்கில செய்தி ஊடகங்கள் விசனங்கள் தெரிவிக்கப்படுகின்றன. இனவாத



ஹரிஸ்சந்திர விஜேதுங்க

கட்சிகளின் உயர்மட்டத்திலும், இக்கட்சிகளுக்கு சார்பானவர்கள் மட்டத்திலும் பேசப்படும் இவ்விடயம் குறித்து பல சிங்கள அரசியல் தலைவர்கள் தமது கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

பொதுவாக பௌத்த சிங்கள அரசை கட்டியெழுப்புவதனை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ள இக்கட்சிகள் ஒரு ஒருங்கிணைப்புக்கு வராமை சந்தர்ப்பவாத அரசியலையே வெளிப்படுத்துகின்றதெனலாம். இது குறித்து அரசியல் தலைவர்களுள் ஒருவரான குணதாச அமரசேகர கூறுகையில்,

'இது பற்றி நான் கவலைப்படவில்லை. ஏனெனில், இவற்றில் ஒரு கட்சிக்குக் கூட தேசியம் என்ற முத்திரையைத் தவிர தேசியம் குறித்த கருத்தியல் ஒன்றை, கோட்பாட்டு தத்துவத்தை கட்டியெழுப்ப இயலவில்லை என்றே எனக்கு தோன்றுகின்றது. இவ்வாறான அடிப்படை இன்றி கட்சிகளால் ஒன்றிணைய தான் முடியுமா? இதனால் இந்த பிரச்சினை குறித்து பெரிதாக அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. ஏனெனில், பொதுத்தேர்தலின் பின்னர் நாம் எண்ணிப் பார்க்காத அளவுக்கு அரசியல் சூழல் மாறும் எனலாம். பொ.ஐ.முவுக்கோ, ஐ.தே.கவுக்கோ நூற்றுக்கு அதிகமான ஆசனங்கள் கிடைக்கும் என கூறமுடியாது. இந்நிலைமையில் இந்தக் கட்சிகள் இரண்டும் உள்ளகப் பிளவுகளுக்கு முகம் கொடுக்க நேரிடும். அதற்கான அடையாளங்கள் இப்பொழுதே தெரிய வந்துவிட்டன. இந்த அடிப்படையில் தேசியக் கட்சிகள் ஒருபுறமும், தேசியமல்லாத கட்சிகள் இன்னொரு புறமும் பிரிய நேரிடும்.

இவ்வாறு குறிப்பிட்டுள்ள அவர் முரண்பாடான சூழலில் மக்கள் பிரதான கட்சிகளை கவனத்தில் கொள்ளாதிருக்க வேண்டும் என மேலும் தெரிவித்துள்ளார். இன்று மக்கள் பிரதான கட்சிகள் குறித்து வெறுப்படைந்துள்ள சூழ்நிலையில் கட்சிப் பிரதிநிதிகள் குரங்குகளைப் போல் கட்சிவிட்டு கட்சி தாவும் சூழ்நிலையில் கட்சிகளை பற்றி அக்கறை காட்டாது நபர்கள் பற்றியே அக்கறைக்காட்டுவது தான் உசிதமென மேலும் அவர் தெரித்துள்ளார்.

⇨06

நன்றி - நூலகத்திட்டம்




# கும்பிடுபவன் உள்ளவரை கோயில் இருக்கும்
# அடிமை இருக்கும் வரை எஜமான் இருப்பான்!

தேசிய விடுதலை, புரட்சி, ஆயுதப் போராட்டம், பாராளுமன்றப் பாதை என்பது போன்ற பதங்களை நீங்கள் பல தடவை கேட்டிருப்பீர்கள். கடந்த இரண்டு தசாப்த காலத்தில் முன்னெப்போதும் இல்லாதவாறு மிக அதிகமாகவே, உங்கள் காதுகள் புளித்துப் போகும் அளவுக்கு இவற்றைக் கேட்டிருப்பீர்கள். இந்த மந்திரச் சொற்களை ஒரு வித புல்லரிப்புடன் கேட்டுக் கொண்டி ருந்திருப்பீர்கள்.


அந்தோ பரிதாபம். இந்த வார்த்தைகளை உச்சரித்த வாய்கள் இன்று புள்ளடிக்காகவே உங்கள் முன் வந்து நிற்பதைக் காணும் போது உங்களுக்கு உங்களையே நம்ப முடியாத திகைப்பு ஏற்பட்டிருக்கும். தேர்தல் என்ற ஒன்றினை அரசாங்கங்கள் அறிவிக்கின்ற எல்லாக் காலங்களிலும் வெகு வேகமாகவும் இருந்த இடம் தெரியாமலும் இந்த வார்த்தைகள் மாயமாக மறைந்து விடுகின்றதன் விந்தை பற்றி உங்களுடைய ஞாபகசக்தி உங்களுக்கு நிச்சயம் நினைவூட்டியிருக்கும்.

பாராளுமன்றத்தின் கதிரைச் சுகத்திற்கும் அது வழங்குகிற அதிகார பலத்திற்கும், அதை வைத்து நடத்தக்கூடிய பிழைப்புக்கும் முன்னால் இந்தச் சொற்கள் - உங்களை ஒரு காலத்தில் எழுந்து நின்று உருவேற வைத்த இந்த மந்திரச் சொற்கள் - எவ்வளவு இலகுவாக மறைந்து விடுகின்றன பாருங்கள்.

இன்று, அரசாங்கம் பாராளுமன்றத் தேர்தலை அறிவித்தது தான் தாமதம் அனைத்து தமிழ்க் கட்சிகளும் கூட்டாக தமது பரிவாரங்களுடன் யாழ் குடாநாட்டில் போய் குதித்துள்ளன. பொ.ஐ.முவின் தேசியப் பட்டியலில் இடம் பெற்றுள்ள வரதராஜப் பெருமாள் முதல் தமிழ்க் காங்கிரஸ் வரை குடாநாட்டில் சகல தமிழ்க் கட்சிகளும் தமது பரிவாரங்களுடன் குதித்துள்ளன. செம்மணியில் புதைகுழிகள் தோண்டப்பட்டு அரச படைகளினால் புதைக்கப்பட்ட காணாமல் போனோர்களின் சடலங்கள் மீட்கப்பட்டது முதல், ஷெல்லடியாலும் குண்டு வீச்சாலும் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டும் இடம் பெயர்ந்தும் கொண்டிருந்த வேளையில் அங்கு போய் அந்த மக்களின் துன்பங்களுக்கு ஆறுதலாக ஒரு வார்த்தை கூட பேசுவதற்கு நேரமில்லாத இவர்கள் இப்போது அங்குபோய் தம்மைப் பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற வைக்குமாறு கோரத் தொடங்கி யிருக்கிறார்கள்.



டக்ளஸ்




வரதராஜப் பெருமாள்

தேசிய விடுதலை, ஈழவிடுதலை, தமிழின விடுதலை என்று கூறி ஆயுதமேந்தியவர்கள் அந்த ஆயுதங்கள் தேவையில்லை என்று அரசாங்கத்தின் துணைப்படை அந்தஸ்த்துடன் செயற்படத் தொடங்கிய பின் அந்தச் சொற்களையெல்லாம் பேசுவதை விட்டு விட்டார்கள். பாராளுமன்ற ஆசனங்களுக்காகவும், உள்ளூராட்சிப் பதவிகளுக் காகவும், மாரடித்த அவர்கள் அந்த ஆசனங்களைப் பெறுவதற்காக எடுத்த எடுக்கிற அக்கறையில் ஒரு மயிரளவையேனும் அம்மக்களின் துயர் துடைப்பதற்காக ஒன்று சேர்ந்து எடுத்ததில்லை. அதற்காக வாய்ப்புக் கிடைத்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தமக்குள் சண்டையிட்டுக் கொண்டதைத் தவிர அவர்கள் எதையும் உருப்படியாகச் செய்ததில்லை.

தமிழ் மக்களின் ஆயுதமேந்தாத ஒரேயொரு ஜனநாயகக் கட்சி என்ற பெருமையையே தனது இருப்புக்கான ஒரே காணரமாக கொண்டிருக்கும் த.வி.கூட்டணி கூட தமிழ் மக்களின் துயரத்தைத் துடைக்கும் எந்தவொரு கூட்டுச் செயலுக்கும் தன்னை உட்படுத்திக் கொண்டதில்லை.

ஆனால், இன்று அரசாங்கம் பாராளுமன்றத் தேர்தல் என்று அறிவித்ததோ இல்லையோ, அதில் பங்கேற்பதில் மட்டும் தீவிர ஒற்றுமையுடன் அவை ஒன்று சேர்ந்திருக்கின்றன. வடக்கிலே தேர்தல் பிரசாரத்தில் இவர்கள் தீவிரமாக இயங்குகிற ஒவ்வொரு நாளும் பாரிய பீரங்கி மற்றும் விமானத் தாக்குதல் நடவடிக்கைகள் நடந்து கொண்டிருக்கின்றன. பெருமளவில் மக்கள் இடம் பெயர்ந்து கொண்டிருக்கிறார்கள். சாவகச்சேரிப் பகுதிகளிலிருந்த பல குடிமக்களது வீடுவாசல்கள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன.



சுரேஷ் பிரேமச்சந்திரன்



ஆயினும், இவையெல்லாவற்றையும் விட அவர்களுக்கு தேர்தலில் வாக்கு கேட்பது மிகவும் முக்கியமான விடயமாகி விட்டுள்ளது. ஐம்பது நூறு வாக்குகள் பெற்றால் கூட பாராளுமன்ற ஆசனத்தைக் கைபற்றி விடலாம் என்கிற நப்பாசை இவர்களையெல்லாம் அங்கே குதிக்க வைத்திருக்கிறது.

யுத்த சூழல் காரணமாக நியாயமான தேர்தல் நடக்குமா? ஆயுதமேந்தியவர்கள் ஜனநாயக முறையில் தேர்தல் நடப்பதை அங்கீகரிப்பார்களா என்ற கேள்விகள் எல்லாம் அவர்களுக்கு முக்கியம் அல்ல. ஐம்பதோ, நூறோ வாக்குக் கிடைத்தாவது பாராளுமன்ற உறுப்பினராக வந்து விட்டால் சரி என்ற எண்ணமே அவர்களிடம் ஒரு வெறியாக வளர்ந்து விட்டிருக்கிறது.

கள்ளவோட்டு, ஆட்கடத்தல், பெட்டிகளில் மோசடி என்று எல்லாவிதமான தேர்தல் சம்பிரதாயங்களுடனும், துப்பாக்கிச்சூடு, கிரனைட் வீச்சு, கத்திக்குத்து என்ற சகல ஜனநாயக நடைமுறைகளினூடும் அரசாங்கம் சாதிக்கவுள்ள மாபெரும் ஜனநாயக சாதனைக்கு தாங்களும் உகந்த பங்காளிகள் தான் என்றபடி இவர்கள் களத்தில் குதித்திருக்கிறார்கள்.

இந்தப் பாராளுமன்றத் தேர்தல் தமிழ் முஸ்லிம் மக்களது அரசியல் உரிமை பற்றியோ, யுத்த நிறுத்தம் பற்றியோ அக்கறை காட்டுவதற்காக நடாத்தப்படவில்லை. ஆட்சியதிகாரத்திலுள்ள பொ.ஐ.மு. இன்னொரு பாராளுமன்றக் காலத்திற்கு தனது அதிகாரத்தைக் கொண்டிருப்பதற்காகவே அதைச் செய்கிறது. திட்டமிட்டபடி ஜனாதிபதி தேர்தலை முதலில் வைத்து அதன் மூலம் தேர்தலில் சகலவிதமான மோசடிகளையும் செய்வதற்குரிய முறையில் கையில் அதிகாரத்தை எடுத்துக்கொண்டு இந்தத் தேர்தலை அது நடாத்துக்கிறது. பல நூறு தேர்தல் வன்முறைகள் ஏற்கெனவே நடந்து முடிந்து விட்டன. தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன. யுத்தத்தை மேலும் தீவிரப்படுத்தி குடாநாட்டில் ஒரு இராணுவ வெற்றியைச் சாதிப்பதன் மூலமாக தேர்தலில் வெற்றி பெறுவதற்குரிய வாய்ப்பைப் பெறும் நோக்கத்துடன் தாக்குதல் நடவடிக்கைகளை அரசு நடாத்தி வருகிறது.

தமிழ் முஸ்லிம் மக்களது அரசியல் உரிமைகட்கும் இன்று நடக்கின்ற பாராளுமன்றத் தேர்தலுக்கும் என்ன சம்பந்தத்தை இந்தத் தமிழ்க் கட்சிகள் கண்டுள்ளன என்ற கேள்வியை யாராவது கேட்டால் அதற்குச் சரியான எந்தப் பதிலும் அவர்களிடம் இல்லை.

ஆக மொத்தத்தில் இந்த அனைத்து அரசியல் கட்சிகளும் சுயேட்சை வேட்பாளர்களும் அங்குள்ள மக்களுக்கு இந்தத் தேர்தலில் தாம் தீவிரமாக ஈடுபடுவதன் மூலமாக அறிவித்துள்ளதெல்லாம், அரசாங்கங்கள் யுத்தத்தை நடத்தினாலும் சரி, உங்களை கொன்றொழித்தலும் சரி, அரசியல் உரிமை, அரசியல் தீர்வு என்பதன் பேரால் காலத்தை இழுத்தடித்தாலும் சரி அவை ஜனநாயக பூர்வமாகவே செயற்படுகின்றன. அவை நியாயமாகவே நடந்து கொள்கின்றன. உங்களுக்கு இன்று நடக்கின்ற அனைத்துத் துயர்தரும் நிகழ்வுகளும் இன்றைய ஜனநாயக நெறிமுறையின் பாற்பட்ட விடயங்களே என்பது தான். மக்களுக்கு மட்டுமல்ல சர்வதேச சமூகத்திற்கும் கூட குடாநாட்டில், அரச படைகளின் 'சிவில் நிர்வாக' கட்டுப்பாட்டின் கீழ் அமைதியும் சமாதானமும் ஒரு தேர்தல் நடாத்தப்படுவதற்கான சூழலும் நிலவுகின்றன என்ற செய்தியை இதன் மூலம் அறிவிப்பது தான்.

> **“இந்த அனைத்து அரசியல் கட்சிகளும் சுயேட்சை வேட்பாளர்களும் அங்குள்ள மக்களுக்கு இந்தத் தேர்தலில் தாம் தீவிரமாக ஈடுபடுவதன் மூலமாக அறிவித்துள்ளதெல்லாம், அரசாங்கங்கள் யுத்தத்தை நடத்தினாலும் சரி, உங்களை கொன்றொழித்தலும் சரி, அரசியல் உரிமை, அரசியல் தீர்வு என்பதன் பேரால் காலத்தை இழத்தடித் தாலும் சரி அவை ஜனநாயக பூர்வமாகவே செயற்படுகின்றன. அவை நியாயமாகவே நடந்து கொள்கின்றன. உங்களுக்கு இன்று நடக்கின்ற அனைத்துத் துயர்தரும் நிகழ்வுகளும் இன்றைய ஜனநாயக நெறிமுறையின் பாற்பட்ட விடயங்களே என்பது தான். மக்களுக்கு மட்டுமல்ல சர்வதேச சமூகத்திற்கும் கூட குடாநாட்டில், அரச படைகளின் 'சிவில் நிர்வாக' கட்டுப்பாட்டின் கீழ் அமைதியும் சமாதானமும் ஒரு தேர்தல் நடாத்தப்படுவதற்கான சூழலும் நிலவுகின்றன என்ற செய்தியை இதன் மூலம் அறிவிப்பது தான்.”**

ஆக, மொத்தத்தில் இந்த நாட்டில் வாழ்கிற, குறிப்பாக யுத்த பூமியில் வாழ்கிற மக்களுக்கு எந்தவிதமான சுமுக நிலைமையுமற்ற சூழலும் இல்லை. அவர்கள் வாழ்க்கை அச்சுறுத்தலுக்குள் இல்லை. அவர்கள் வீடுவாசல்களிலில்லாவிட்டாலும் அகதிமுகாம்களில் இருந்தபடியே தமது ஜனநாயகக் கடமையை ஆற்ற முடியும். அந்த மாபெரும் ஜனநாயகக் கடமையை ஆற்றுவதன் மூலம் அவர்கள் தமது தலைவர்கள் பாராளுமன்றத்தில் விடுதலை பெற்றுத் தருவதற்காக யுத்தமிடக் கவசம் பூணச் செய்ய முடியும்.

கடந்த 50 வருடங்களாக இலங்கை வாழ் தமிழ் மக்கள் தமது வாக்குச்சீட்டினால் சாதித்ததெல்லாம் மாறி மாறி யாராவது ஒரு சில தரகர்களை பாராளுமன்றத்துக்கு அனுப்பி வைத்ததும், இருந்த வாழ்வையும் வளத்தையும் இழப்பதற்காக அவர்கள் தமக்குச் சேவை செய்ய வைத்ததையும் தான்.

இம்முறையும் அதையே செய்யும்படி கோருகிறார்கள். இந்தத் தலைவர்கள். இனி இழப்பதற்கு எதுவும் இல்லையென்ற நிலையிலும் வாக்குரிமை என்ற உரிமை ஒன்று இருக்கிறதே. அதை இழக்கும் வரை நாம் தொடர்ந்து தலைவர்களை பாராளுமன்றம் அனுப்பி வைக்க வேண்டுமா?

வேண்டும். வேண்டும். அப்போது தான் நாடிழந்து நகரிழந்து வீடிழந்து தெருவொன்றே தஞ்சமென்று வந்துவிட்ட மக்கள், அதையும் இழந்து கடலிலே குதிக்க முடியும்.

எல்லாவற்றையும் இழந்து விடுவது போல் சுகம் வேறென்ன இருக்கிறது? எல்லாவற்றையும் இழக்கும் மனம் போல் பெரிய மனம் என்ன இருக்கிறது?

இல்லாமல், நாம் யாருக்கும் வாக்களிக்கப் போவதில்லை. அயோக்கியர்கட்கு வாக்களித்து எமது பரம்பரை முழுவதுக்குமே துரோகம் செய்யும் ஒரு சமூகமாக நாம் மாறத் தயாரில்லை. புள்ளடி கேட்பவர்க்கு பொல்லடி தான் தருவோம் என்று எதிர்க்கும் அற்ப்த்தனமான முடிவை எடுக்க முடியுமா என்ன?

கும்பிடுபவன் உள்ளவரை கோயில் இருக்கும். அடிமை இருக்கும் வரை எஜமான் இருப்பான். மக்களிடம் இந்தப் பக்குவம் உள்ளவரை தலைவர்கள் இருப்பார்கள்.

அவர்களுக்கு வாழ்த்துக்கள்!

நன்றி - நூலகத்திட்டம்



# எங்க போற..?

வீட்டிலிருந்து கிளம்பி மூன்று கிலோ மீற்றர் தூரம் வரையிலும் சைக்கிளை மிதித்து அக்கா வீடு செல்ல முற்பட்டபோது, முயன்ற போது, முயற்சித்த போது...

"அட விசரா, அக்கா வீடு போன போது என்று எழுத வேண்டியது தானே அதற்கேன் இவ்வளவு ஆர்ப்பாட்டம் நீயென்ன எழுத்தில் "புதுமை" செய்ய முயற்சிக்கிறாயா?" (சபாஷ் சண்டை பிடிக்காவிட்டால் தமிழருக்கு மதிப்பேது) என்று கேட்பது என் காதில் விழுகிறது.

ஆனால், நான் ஒன்றும் புதுமை செய்யும் எழுத்தாளனல்ல. 56இல் நான் எழுத்தாளனாக உருவெடுத்திருந்தால் அக்கா வீடு போன போது என்று தான் எழுதி இருப்பேன்...

இப்போது கதை நடப்பது Y²Kயில். 56இல் எழுதியவர்கள் இரண்டாயிரமாம் வருஷம் சுருங்கி இப்படி இந்த பரிதாப நிலையை அடையுமென்று யோசித்து இருப்பார்களா? கற்பனை செய்து தான் இருப்பார்களா? நினைத்திருப்பார்களா? (வாசகர்கள் மன்னிப்பார்களாக!) எனவே நான் அக்கா வீடு போவதை இப்படித் தான் எழுத முடியும். போவது என்பது லேசுப்பட்ட விஷயமல்ல. அக்கா வீடு போவதும், அலரி மாளிகை போவதும் எனக்கு ஒன்று தான்.

சரி மறுபடி ஆரம்ப நிலைக்கே வருகின்றேன். நான் அக்கா வீடு போன... (சந்தோஷம் தானே) போது அந்தப் பச்சை உடுப்புப் போட்டிருந்த மனிதன் அங்கே அமைந்திருந்த சோதனைச் சாவடிப் பாசறையில் நின்று என்னைப் பார்த்துக் கேட்டான்.

என்ன கேட்டு இருப்பான்...? 'நலந்தானா நலந்தானா யாழ்ப்பாணத்துத் தமிழ் மகனே நலந்தானா' என்ன முழிக்கின்றீர்களா? கொஞ்சம் உங்களுடன் முசுப்பாத்தி அவ்வளவுதான்...

'என்ன இந்த நேரத்தில் முசுப்பாத்தியா? நாங்கள் இப்போது இருக்கும் நிலை உனக்குத் தெரியாதா? முசுப்பாத்தியாம் முசுப்பாத்தி.' உங்களுக்குக் கோபம் வருவது எனக்குப் புரிகிறது.

ஆனால், என்னைத் தயவு செய்து மன்னித்துக் கொள்ளுங்கள். காந்தி கூடச் சிரித்துக் கொண்டு தான் இந்தியாவுக்குச் 'சுதந்திரம்' வாங்கிக் கொடுத்தார் என்கிறார்கள். இப்போதும் படங்களில் சிரித்துக் கொண்டு தான் இருக்கிறார். ஹும்... என்ன செய்வது. சரி விசயத்துக்கு வருவோம்.

அவன் என்ன தான் கேட்டு இருப்பான்? அவன் இந்தப் பாசமிகு (நவீன வடிவம்) தம்பியைப் பார்த்துக் கேட்டான். 'எங்க போற?' சைக்கிளை விட்டுக் குதித்து நின்ற என்னிடம், அடையாள அட்டையை (குடும்ப அட்டை, பங்கீட்டு அட்டை எல்லாம் தரையில் ஊர்ந்து செல்லும் அட்டையை விடப் பெறுமதியானவை. அதிமுக்கியத்துவம் வாய்ந்தவை. சற்றுப் பிந்திக் கிடைத்த செய்தி: தமிழ் மக்கள் இவ்வாறு பல விதமான 'அட்டை'களுடன் மாரடிப்பதால், இவர்கள் மேல் அனுதாபம் கொண்ட உலக விஞ்ஞானிகள் சிலர், தமிழர்களின் தலைகளை எடுத்துவிட்டு, அதற்குப் பதிலாக ஒரேயொரு 'அட்டையை'ப் பொருத்தி வைக்கும் ஆராய்ச்சி முயற்சியில் வெற்றிகரமாக ஈடுபட்டு வருகிறார்களாம்.) வாங்கிப் பரிசோதனை செய்தபடி அவன் மீண்டும் என்னைக் கேட்டான். 'எங்க போற?' எனக்கு உடன் கோபம் வரவில்லை. பல்லைக் காட்டியபடி நின்றேன். வீட்டில் இது மாதிரிக் கேள்வி கேட்டு இருந்தால்... என்ன துள்ளுத் துள்ளி இருப்பேன்.

'சே ! முக்கிய அலுவலாய் வெளியால போகேக்க கேக்கிற கேள்வியைப் பார், சனியன்கள். இப்போது அசடு வழிய நிற்கின்றேன்.

'எங்க போற?'

அது சரி, நான் எங்கே போகிறேன்? என்னையே நான் கேட்டேன். சந்திரனுக்கா? செவ்வாய்க் கிரகத்துக்கா? வெள்ளை மாளிகைக்கா? இல்லவே இல்லை. நான் போவது என்ரை அக்கா வீட்டுக்கு. எனக்குச் சற்று எரிச்சல் வருகிறது. ஏன் இந்தக் கேள்வியினை எல்லா இடங்களிலும் கேட்கின்றார்கள். இங்கே வாழும் நாலு இலட்சம் மக்களும் இந்தக் கேள்வியை எதிர்நோக்கியபடி தான் வாழ்க்கை நடத்திக் கொண்டு இருக்கின்றார்கள்.

என்ன பொறுமை, என்ன பொறுமை. (என்னைப் போலத்தான்) தமிழ் மக்களைப் போல் பொறுமை காப்பதில் உலகினில் யார் இருக்கின்றார்கள்? இதோ இந்தப் பெரும்பான்மை இனப் பச்சை உடுப்புப் போட்ட மனிதன் முன், நான்(ங்கள்) கூனிக் குறுகி, நெஞ்சுருகி நிற்கின்றேன்(றோம்).

'எங்க போற?'

கேள்வி மறுபடி காதைக் குடைகிறது. கறையான் பூச்சியாய் உடலை அரிக்கிறது. இருந்தும் மூளையில் ஓர் திடீர் மின்னல்.

"அடேய் முட்டாள் தமிழ் மகனே ! எதற்கு இப்படி மூளையைப் போட்டுக் குழப்புகிறாய். நிதானமாய் யோசி. அந்த மனிதன் அப்படி என்ன தான் உன்னைப் பார்த்துக் கேட்டு விட்டான். உன் சொத்து, சுகம் எதையாவது தரும்படி கேட்டானா? என்ன கேட்டான்? எங்க போற? என்று மட்டும் தானே கேட்டான். அவன் யார் என்பதை நீ உணர்ந்து கொள். அவனோ பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவன். உன்னைவிட வலிமையில், பெருக்கத்தில் கூடியவன்.

சுருங்கச்சொன்னால், உனக்கு அண்ணன் மாதிரி.

என்ன அண்ணன் மாதிரி? உனக்கு விசரா? அவன் உனக்கு அண்ணனே தான். அவன் உனக்கு அண்ணன் என்றால், நீ அவனுக்குத் தம்பி. பார்த்தாயா நீயும், அவனும் சகோதரராகி விட்டீர்கள்.

என்ன தமிழ் மகனே ! பேய் முழி முழிக்கிறாய். இன்னும் கேள். (இதென்ன விக்கிரமாதித்தன் கதை மாதிரிப் போகின்றது.) ஒரு அண்ணனுக்குத் தன் தம்பியைக் கேள்வி கேட்கும் உரிமை இல்லையா? ஒருவன் மீது அன்பும், அக்கறையும் உள்ளவன் தானே அவனைப் பற்றி அக்கறையாய் விசாரிப்பான்.

அதனால் தான் "அவன்" உன்னைப் பார்த்து 'எங்க போற' எண்டு கேட்டான். சரியோ, இன்னும் இருக்கிறது கேள் மகனே.

இப்போது தமிழ் மக்கள் வீட்டில் யார் பொறுப்பாக இருக்கிறார்கள்? அப்பாமாரெல்லாம், ரீ. வி.,டெக் வாங்குவதற்குப் பணம் சேகரிக்க வெளிநாடு போய் விட்டார்கள்.

தங்களிடமிருந்து பிரிந்த கணவன்மாரோடு சேர்ந்து வாழத்தான் முடியவில்லை. கடைசி, இறுதிக் காலத்தைப் பேசியாவது தள்ளி விடுவோம் என நினைத்து, மனைவிமார்கள் எல்லாம் கொம்முனிக்கேஷன் போய் விடுகிறார்கள்.



அடுத்து, மிஞ்சி நிற்பது பிள்ளைகள் தான். பாவம் ! அவர்களும் தங்கள் பாட்டுக்கு, ஒன்றும் செய்யாமல் இருக்க முடியுமா? அவர்கள் தலையில் O. / L., A. / L. என்ற இரு பூதங்கள் உள்ளன. அவையிரண்டையும், அவர்கள் சூரசம்ஹாரம் செய்ய வேண்டும். என்ன செய்வது?

எங்க போற..?

அந்தக் காலமென்றால், மாதக்கணக்காய்த் தவம், பின் அத்தவத்தின் வலிமையால் இறைவனோ, இறைவியோ பக்தன் முன் முப்பது அடி தூரத்தில், மேல் நின்று (சினிமாப் படங்களில் இப்படித்தான் காட்டுவார்கள். இதை விட வேறு ஆதாரங்கள் இல்லை.) அவன் கேட்ட வரத்தை உடன் கொடுத்து விட்டு மறைந்து விடுவார். அதிக நேரம் நிற்பதில்லை. மேலும் ஏதாவது கேட்டுத் தொலைத்து விடுவானோ என்ற பயம் தான்.

இந்த Y2K இல் இப்படிச் செய்ய முடியாது. அப்படிச் செய்ய முற்பட்டாலும், கடவுள் வரம் கொடுப்பதற்கு இடையில் அனைத்துப் பரீட்சையும் நடந்து முடிந்து விடும். அடாடா ! இப்ப பரீட்சை அனுமதி அட்டை கூடப் பரீட்சை முடிந்த பின்னர் தானே வருகின்றது.

என்ன செய்வது, பிள்ளைகளின் எதிர்காலப் பாதையினை அமைத்துக் கொடுக்க ரியூட்டறிகளில் தான் சுக்கிராசாரியர்களும், துரோணர்களும் இருக்கின்றார்கள். இவர்களை விட்டால் எமது இளம் சமுதாயத்தின் கதி... நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை. பிறகென்ன, ஆலயம் தொழுவது சாலவும் நன்று. அது அன்று. இன்றோ ரியூட்டறி தொழுவது அதை விட நன்று. கொஞ்சம் பாருங்கள்.

அப்பா வெளியில். அம்மா வெளியில். பிள்ளைகள் வெளியில். அப்படியானால் வீட்டில் யார்? அவர்களைக் கேள்வி கேட்க ஒருவருமில்லை. தலைமைத்துவம் இல்லாத சமுதாயம் உருப்படுமா? சீர்கெட்டு அல்லவா போகும்.

இறைவன் பார்த்தான், சிரித்தான் சிந்தித்தான். எல்லாச் சந்திகளிலும் "மாமாக்கள்" வந்தார்கள்.

'எங்க போற?' என்று கேட்டார்கள். காலையில் கேட்டார்கள், மாலையில் கேட்டார்கள், இரவில் மாட்டிக் கொண்டவர்களிடம் கேட்டார்கள்.

'எங்க போற?'

கால நேரம் பாராது, தமிழ் மக்களின் அவசரம் பாராது கேள்வி கேட்டுத் துளைத்தார்கள். "என்னடா இது! எங்கையும் போக முடியாமல் கிடக்கு. எந்த நாள் பார்த்தாலும் எங்க போற? எங்க போற? முந்தியெண்டால் எங்கையும் போகலாம். யார் எங்களைக் கேள்வி கேட்கிறது? இனிமேல் தேவையில்லாமல் வெளிக்கிடக் கூடாது. மொத்தத்தில் சனங்கள் புலம்பித் தவித்தார்கள்.

இறைவன் மறுபடியும் சிரித்தான். முக்கிய வேலை இல்லாதவர்கள், வீடுகளில் முடங்கிக் கிடந்தனர். மற்றவர்கள் வெளியில் போனார்கள்.

"என்ன தமிழ் மகனே ! பார்த்தாயா எங்க போற என்ற கேள்வியின் மகத்துவத்தை. கடைசியாக இன்னுமொன்று இருக்கிறது மகனே ! இது முன்னர் சொன்னதை விட முக்கியமானது. 'எங்க போற?'


உண்மையில், தமிழ் மக்களே ! நீங்கள் எங்கு போகின்றீர்கள்? எதனை இலக்கு வைத்துப் போகின்றீர்கள்? போகும் பாதை தெளிவாக உள்ளதா? அதன் தூரம் என்ன மாதிரி? நீங்கள் இதைப் பற்றி யோசித்துப் பார்த்ததுண்டா? எல்லோருமே ஒரு இலக்கை அடையத்தான் போகின்றீர்களா அல்லது வெவ்வேறு இலக்குகளா?

நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக, நீங்கள் ஓடிக் கொண்டு தானே இருக்கின்றார்கள். இலக்கை அடைய முடிந்ததா? முடியவில்லையா? ஏன்? எல்லோரும் ஒன்று சேருங்கள் ! இல்லையேல்... எங்க போற?

எனக்கு உடம்பு புல்லரித்தது. அடடா ! என்ன தெளிவான சிந்தனை.

அக்கா வீடு போய்த் திரும்பி வரும் போது, தூரத்தில் பாரிய முழக்கங்களுடன் சண்டை தொடங்கியது தெரிந்தது. நான் வீடு திரும்ப, மனைவி வாசலில் கலக்கத்துடன், "வந்திட்டியளே. திரும்பவும் சண்டையெண்டால் நாங்கள் 'எங்க போற'து? கடவுளே எங்க போறது?

(யாவும் சிந்தனை)



## சிங்களத்திற்கு...

அதேவேளை சிஹல உறுமய கட்சியின் தலைவர் திலக்கருணாரத்ன இது பற்றி குறிப்பிடுகையில், "தினேஷ் குணவர்த்தனவின் 'மக்கள் ஐக்கிய முன்னணி' கட்சிகள் கூட்டணி சேர்வது பற்றிய கலந்துரையாடல்களில் விருப்புடன் பங்குபெறவில்லை. அவர்கள் அரசு மற்றும் ஜே.வி.பியுடன் கலந்துரையாடிவிட்டே எங்கள் கூட்டங்களில் கலந்து கொண்டனர். அவர்களது வாக்கு வங்கியும் சரிந்துவிட்ட நிலையில், அவர்களுடன் கூட்டுச்சேர நாம் பெரிதாக அக்கறை கொள்ளவில்லை. பூமிபுத்திரக் கட்சிக்கு தேவை இருந்தபோதிலும், கால அவகாசப் பிரச்சினையால் அதற்கான வாய்ப்பு குறைந்துவிட்டது. இருப்பினும் நாம் ஒருவருக்கொருவர் குறைகூறிக் கொண்டு சிங்கள வாக்குகளை பிரிப்பதை விட ஒரு இணக்கப்பாட்டுக்கு வர தற்போதும் முயற்சிக்கின்றோம். மேலும் நாம் ஆட்டுவிக்கப்படும் பொம்மைகளாக செயற்படுகின்றோம் என ஹரிஸ்சந்திர விஜேதுங்க அவர்கள் குறை கூறுகின்றார். சிஹல உறுமய கட்சியில் இருப்பவர்கள் ஒருபோதும் அவ்வாறானவர்கள் இல்லை.

எனினும், சிங்களத்திற்கு எதிரான பாரிய சக்தி சிங்கள உறுமயவாகும் என பூமிபுத்திர கட்சி இது குறித்து குற்றம் சுமத்துகின்றது. சிங்களே மகா சம்மத்த பூமிபுத்திர கட்சியும் சிங்களவர்களுக்கானது என அதன் தலைவர்கள் கூறிக் கொள்கின்றனர். சிஹல உறுமய கட்சியும் இவ்வாறான கொள்கையையே கொண்டுள்ளது. எனினும், எதிர்வரும் பொதுத்தேர்தலில் இவ்விரண்டு கட்சிகளினாலும் ஒன்றிணைந்து போட்டியிட இயலவில்லை. காரணம் பலதரப்பட்ட கருத்து மோதல்களாகும் என தெரிவிக்கப்படுகின்றது. இது குறித்து சிங்களே மகாசம்மத்த பூமிபுத்திர கட்சி தலைவர் ஹரிஸ்சந்திர விஜேதுங்க கூறியதாவது,

**சிஹல உறுமய கட்சியுடனான மோதல் பற்றி....**

அவர்களுக்குத் தான் பிரச்சினை. எமக்கல்ல. நாம் இந்த சந்தர்ப்பத்திலும் கூட பௌத்த அரசை கட்டியெழுப்புவதை குறித்தே செயலாற்றுகின்றோம்.

**அவ்வாறாயின். சிஹல உறுமயவுக்கு அவ்வாறான எண்ணமில்லையா?**

அவர்களது கொள்கை எண்ணம் பற்றி எனக்கென்ன தெரியும்? ஆயினும் இந்நாட்டில் உள்ள ஒரேயொரு சிங்கள பௌத்த கட்சி எமது கட்சியாகும்.

**அதாவது இரண்டு கட்சியாலும் ஒன்றுபட இயலாதா?**

ஏன் இல்லை. அவர்கள் தான் கட்டவிழ்த்துக்கொண்டு போனார்கள். ஏனெனில் அவர்கள் சிங்கள பௌத்த அரசுக்கு எதிரானவர்கள்.

**அப்படியாயின் சிஹல உறுமயவுக்கு எந்த அரசு வேண்டும்?**

சிஹல உறுமய கத்தோலிக்க தேவலாயத்தினால் நிர்வகிக்கப்படும் ஒரு கத்தோலிக்க இயக்கம். அது எப்படி சிங்கள பௌத்த அரசு பற்றி கதைக்கும்?

**ஆயினும் அக்கட்சியை சூழ பிக்குகள் பலர் ஒன்று திரண்டுள்ளனரே?**

இருக்கின்றார்கள். தான். தேவலாயத்துக்கு போகும் பிக்குகளும் இருக்கத்தானே செய்கிறார்கள். சிஹல உறுமயக்காரர்கள் காவியுடை தரித்து, தலதாவைக் காட்டிக் கொண்டு, வணங்கிக்கொண்டிருந்தாலும், பின்னணியில் இருப்பது தேவலாயம்.

**சரி. இன்னும் எத்தனை கால அவகாசத்திற்குள் சிங்கள பௌத்த அரசை ஸ்தாபிக்க போகின்றீர்கள்?**

இந்தக் கேள்வியை சிஹல உறுமயவிடம் தான் கேட்கவேண்டும். ஏனெனில் இதற்கு எதிரியே அவர்கள் தான்.

நன்றி - நூலகத்திட்டம்



# தப்பி ஓடும் இராணுவத்தினர்!

# கட்டாய ஆட்சேர்ப்பை நோக்கி அரசு?

பொ.ஐ.மு. அரசாங்கம் ஆட்சிபீடமேறி ஏழு வருடங்கள் பூர்த்தியாகியுள்ளன. அவர்கள் ஆட்சிக்கு வரும் போது இலங்கையின் இனப்பிரச்சினையானது ஐ.தே.கவின் வழிகாட்டலில் இராணுவம் மற்றும் புலிகளுக்கிடையில் யுத்தமாக மாறி 15 வருடங்கள் ஆகியிருந்தன. இவ் யுத்தம் மிகத்தெளிவாக இந்நாட்டு பொருளாதார, அரசியல், சமூக, ஒருமைப்பாட்டை குலைத்ததன் காரணமாக சிவில் சமூகம் பாரிய அழுத்தத்திற்குள்ளாகியுள்ளது. அதேபோல் பொ.ஐ.மு அதிகாரத்திற்கு வரும் முன் ஐ.தே.கட்சி நிர்வாகத்தில் ஜே. வி. பி. உள்ளிட்ட பிரபல சிங்கள அரசியல் குழுக்கள் மற்றும் அரசுக்கிடையில் ஏற்பட்ட அரசியல் போராட்டத்தில், அரசின் உத்தியோகபூர்வ இராணுவத்தினாலும், உத்தியோகபூர்வமற்ற ஆயுதமேந்திய குழுவினாலும் 60 ஆயிரத்துக்கு அதிகமான சிங்கள இளைஞர், யுவதிகள் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். இந்தப் பின்னணியில் வடக்கு வாழ் தமிழ் மக்களைப் போன்றே சிங்கள மக்களுக்கும் ஐ.தே.க. அரசாங்கத்தின் இராணுவச் செயற்பாடுகள் வெறுப்பை ஏற்படுத்தியதுடன் அரசின் இராணுவ அதிகாரிகள் பற்றி மோசமான எண்ணங்களை உருவாக்கியிருந்தன.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்போம் என்று மேற்குறித்த சூழ்நிலையில் தமது அரசியல் விஞ்ஞாபனத்தில் பொ. ஐ. மு. குறிப்பிட்டிருந்தது. பொ. ஐ. மு. 1994 தேர்தலில் வெற்றி பெற்றது. எனினும், 1995 ஏப்ரல் மாதமானது பொ.ஐ.மு அரசாங்கத்தின் இராணுவமும் மற்றும் புலிகளும் ஓயாத போரில் ஈடுபடுதலுடன் மீண்டும் யுத்தம் ஆரம்பமானது.

இனப்பிரச்சினையைத் தீர்க்க இராணுவத் தாக்குதலை ஆரம்பித்ததனை அரசாங்கம் 'சமாதானத்திற்கான யுத்தம்' என்று கூறியது. எனினும், இதன் அரசியல் யதார்த்தத்தை ஆராயும் போது இது தமது அதிகார மேலாதிக்கத்தைப் பரப்பும் மிகவும் பிரபலமான வரலாற்று ரீதியாக பயன்படுத்தப்படும் கீழ்த்தரமான யுத்த அரசியல் தந்திரோபாயமே அன்றி வேறில்லை என்பது தெளிவாகும்.


பொ. ஐ. மு. அரசாங்கம், 'ரிவிரெச 01', 'ரிவிரெச 02', 'சத்ஜய', 'ஜயசிக்குறு' ஆகிய இராணுவ நடவடிக்கைகளை அதிகாரப் பரவலாக்கல் யோசனை பற்றிக் கதைக்கும் பொழுதே மேற்கொண்டது. வெண்தாமரை இயக்கம், சமாதான யாத்திரை என்பன அரசாங்கத்தின் சமாதானத்திற்கான யுத்தத்தை முன்னெடுக்கும் பிரபலமான நிகழ்ச்சித் திட்டங்களாயின. அதேபோல் பொ.ஐ.மு. அரசாங்கத்தில் வருடாந்தம் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கும் நிதியைவிட அதிகமான தொகை யுத்தத்திற்கென ஒதுக்கப்பட்டது. இந்த யுத்தச் செலவு 1998ல் ரூ. 56,082 மில்லியனாகக் காணப்பட்டது.

யுத்த முயற்சியானது ஒருபுறம், நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு/ ஐக்கியத்திற்கு அச்சுறுத்தலான நாட்டுப் பிரிவினைக்கு எதிரானது என்றும், மறுபுறம் இந்நாட்டு சாதாரண தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாத்து அவர்களைப் 'புலிகளின் ஆக்கிரமிப்பிலிருந்து' விடுவிக்க எடுக்கப்படும் முயற்சி எனவும் அரசாங்க தரப்பில் கூறப்படுகின்றது.

புலிகள் இயக்கத்தை யுத்தத்தால் தோற்கடித்ததன் பின்னர் சமாதானம் குறித்த அரசியல் தீர்வுக்கு வருவதாக அதிகாரத்திற்கு வந்த பின் பொ. ஐ. மு. சமாதானம் பற்றியதான ஒரு பக்கச்சார்பான முடிவுக்கு வந்துள்ளது. அரசாங்கத்தின் விளக்கங்களின்படி வடக்கில் ஒரு தனி நபரின் அதிகாரம் பற்றிய அபிலாஷையை முறியடிக்க எடுக்கப்படும் ஒரு முயற்சியே இந்த யுத்தமாகும். இந்த அடிப்படையில் இனப்பிரச்சினையின் அரசியல் மூலோபாயங்களை மறைக்க அரசாங்கம் முயற்சிப்பதுடன், அதன் இயல்புகள் யாவும் திரிபுபடுத்தப்படுகின்றன. இவ்வாறு கடந்த ஆறு வருட காலத்தில் பொ. ஐ. முவின் சமாதானம் பற்றிய தொனிப்பொருள் யுத்தத்தினால் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

பொ. ஐ. மு. அரசாங்கம் பதவிக்கு வந்து மூன்றாண்டுகள் பூர்த்தியாவதை முன்னிட்டு 17. 08. 1997 அன்று ஜனாதிபதி அவர்கள் தொலைக்காட்சிக்கு வழங்கிய பேட்டியின் போது இளைஞர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையில், யுத்தத்தினை முடிவுக்குக் கொண்டுவர இளைஞர்கள் ஓராண்டு காலக் கட்டாய இராணுவப் பயிற்சியை விரும்புகிறார்களாயின் தானும் அதற்கு விருப்பம் தெரிவிப்பதாகக் குறிப்பிட்டிருந்தார். யுத்தத்தை நடாத்துவதிலும், இராணுவ அதிகாரத்தை முன்னெடுத்துச் செல்வதிலும் ஜனாதிபதி கொண்டுள்ள அபிப்பிராயம் இதன் மூலம் தெளிவாகின்றது. இந்த யுத்த-அரசியல் பின்னணியில் "அரச படைகள்" மீண்டும் சிங்களச் சமூகத்தின் ஆதரவைப் பெற்றுக் கொண்ட 'தேசத்தின் அதிமேதகு விடுவிப்பாளர்களாக' மாறியுள்ளன.

அரசாங்கம் 'தேசத்தின் விடுதலைக்காக', 'இனத்தின் அபிமானத்திற்காக' இராணுவத்தில் இணைந்துகொள்ளுமாறு இளைஞர்களுக்கு அழைப்பு விடுக்கின்றது. இராணுவத்தினர் இவ்வாறு மீண்டும் வீரர்களாகச் சிங்களச் சமூகத்தினர் மத்தியில் அழைத்து வரப்படும் செயலானது, சிங்கள இனவாத அமைப்புகளுடன் இணைந்து அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. படையினர் 'தேசிய வீரர்'களாகப் பெயர் சூட்டப்படுகின்றனர். ஜூன் மாதம் 7ம் திகதி முதன் முதலாக 'இராணுவ வீரர் தினம்' ஆக அரசாங்கத்தினால் குறிக்கப்பட்டது. வேலை வாய்ப்பின்மையால் துன்புறும் சிங்கள இளைஞர்களை அரசாங்கத்தின் படையில் இணைந்து கொள்ளுமாறு அரசு, அவர்களிடம் அரசியல் வேண்டுகோள் விடுக்கின்றது.



'எனது தந்தை இராணுவத்தில்', 'எனது கணவர் ஒரு இராணுவ வீரர்', 'எனது மகன் இராணுவத்தில் இருக்கின்றார்' என மனைவிமார், தாய்மார், புதல்விகள் இராணுவத்தில் இணைந்துள்ள தமது உறவினர்கள் குறித்து, மிகவும் பெருமையுடன் கூறப்படும் விடயங்கள் அடங்கிய கவர்ச்சிகரமான விளம்பரங்கள் பகிரங்க இடங்களில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இதனால் படையினரின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும், முழு நாடும் அவர்கள் குறித்துப் பெருமைப்படலாம் எனக் கூறப்படுகின்றது. அரசின் இலத்திரனியல் ஊடகங்கள் மூலம் பல தரப்பட்ட அறிக்கைகளும், விஷேட நிகழ்ச்சிகளும் ஒலி / ஒளிபரப்பப்பட்டு படையினரின் வீர சாகசங்கள் காட்சிப்படுத்தப்பட்டு 'நீங்களும் வீரப் படையினராக, நாட்டைக் காக்க ஒன்றிணையுங்கள்' என அழைப்பு விடுக்கப்படுகின்றது. இதன் மூலம் அரசாங்கத்திடம், யுத்தத்தை நடாத்திச் செல்லப் போதியளவு மனித வளம் இல்லை என்பதும், தேவையான அளவு மனித வளத்தைப் பெற்றுக் கொள்வதில் பாரிய நெருக்கடிக்கு அரச முகம் கொடுக்கின்றது என்பதும் தெளிவாகின்றது.

இராணுவத்தில் சேவையாற்றுவதற்கான வயது வரையறை 18 - 49 ஆகும். 1999ம் ஆண்டில் இவ்வயதைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் எண்ணிக்கை 1,99,196 ஆகும். இலங்கை இராணுவத்தில் சேவையாற்றுபவர்களின் எண்ணிக்கை 1லட்சத்து 10ஆயிரம் என இராணுவ உயரதிகாரியொருவர் அண்மையில் தெரிவித்திருந்தார்.

2000ம் ஆண்டு முற்பாகத்தில் 15 ஆயிரம் இளைஞர்களை, இராணுவத்தில் இணைந்து கொள்ளுமாறு அரசாங்கம் விடுத்த வேண்டுகோளுக்கு வெற்றிகரமான பிரதி பலன்கள் ஏற்படவில்லை. இதற்கென மாவட்ட மட்டத்தில், அரச இயந்திரத்தினூடாக இளைஞர்களைச் சேர்த்துக் கொள்ள முயற்சி எடுக்கப்பட்டது. அரச அதிகாரிகள் ஆட்சேர்ப்பு அதிகாரிகளாக மாற்றப்பட்டார்கள். ஒரு கிராம சேவகர் பிரிவில் குறைந்தது ஐந்து இளைஞர்களையாவது இராணுவத்தில் சேர்த்துத் தருமாறு சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.



உண்மை நிலைமையை எடுத்துக் கொண்டால், சிங்கள இளைஞர்கள் படையில் இணைந்து கொள்வது வீரத்திற்-

பாதுகாப்பதற்காகவோ அல்ல. தமது பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காகவே அவர்கள் படையில் இணைந்து கொள்கிறார்கள். இலங்கை இராணுவத்தால் அண்மையில் பிரசுரிக்கப்பட்ட துண்டுப் பிரசுரத்தில், இராணுவச் சிப்பாயாக இணைந்து கொள்ளக் குறைந்த கல்வித் தராதரமாக 08ம் வகுப்பு (ஆண்டு 09) சித்தி பெற்றிருத்தல் வேண்டும் என்பது குறிப்பிடப்பட்டிருந்தது.

வருமான ஏற்றத் தாழ்வில் மிகவும் உயர்ந்த இடத்தில் இருக்கும் மற்றும் வறுமை அதிகரிப்பில் உயர்வான இடத்தில் இருக்கும் இலங்கையில், பட்டதாரிக்குக் கூட ரூபா 3000.00 - ரூபா 4000.00 சம்பள அடிப்படையைக் கொண்ட வேலை ஒன்றில் இணைந்து கொள்வது மிகவும் கடினமான காரியமாகும். இந்நிலைமையில் இராணுவத்தில் இளைஞர்கள் இணைவது புதுமையானது அல்ல.

| இராணுவ வீரர் ஒருவருக்கான அடிப்படை ஊதியக் கொடுப்பனவுகள் | |
|---|---|
| இணைப்பு கொடுப்பனவுகள் | ரூ. 4080.00 |
| திருமணமானவர் இராணுவ முகாமில் தங்குவதற்கான கொடுப்பனவு | ரூ. 300.00 |
| சீருடையை பாவிப்பதற்கான கொடுப்பனவு | ரூ. 170.00 |
| கஷ்டப் பிரதேச கொடுப்பனவு | ரூ. 600.00 |
| யுத்த நடவடிக்கைகள் நடைபெறும் பிரதேசங்களுக்கு | ரூ. 2500.00 |
| உணவு முத்திரை கொடுப்பனவு | ரூ. 3196.20 |
| வீட்டு வாடகை கொடுப்பனவு (திருமணம் முடித்தோருக்கு) ரூ. 850.:- தொடக்கம்2500.:- வரை | |

ஆனால், தற்போது நிலைமை மாறிக் கொண்டு வருகின்றது. இதுவரை இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களின் எண்ணிக்கை 20ஆயிரம் என இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கும் அதேவேளை, சில இராணுவ உயர் அதிகாரிகள் இத்தொகை 37 ஆயிரம் எனக் குறிப்பிடுகின்றனர். இதன்படி பார்க்கும் போது குறைந்தது 30 ஆயிரம் பேர் தப்பியோடியுள்ளனர் என்பது தெளிவாகின்றது.

அரச தரப்பில் இளைஞர்கள், இராணுவத்தில் இருந்து தப்பியோடுவது என்பது மிகப் பெரிய பிரச்சினையாகும். இளைஞர்கள், இராணுவத்தில் இணைவதானது நாடு, இனம் என்பவற்றுக்காக மேற்கொள்ளப்படுகின்ற அதி உயர் தியாகமாக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் மூடத்தனமான பிரச்சாரங்கள் இதனால் தகர்த்தெறியப்படுகின்றன. அதேபோல யுத்தத்தை நடாத்திச் செல்லும் அரசின் குறிக்கோளும் மிக மோசமான நெருக்கடிக்குள்ளாகியுள்ளது. அரசாங்கம் ஒரு சிப்பாயைப் பயிற்றுவிக்க ரூபா ஒரு இலட்சத்திற்கு அண்மித்த தொகையையும், இராணுவ அதிகாரியைப் பயிற்றுவிக்க ரூபா 3 1/2 இலட்சத்திற்கு அண்மித்த தொகையையும் செலவு செய்வதாக இராணுவ அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இதன்படி இராணுவத்திலிருந்து தப்பியோடுவது, இராணுவச் சட்டத்தின் படி மிக மோசமான குற்றமாகும்.

அதேபோல், இராணுவத்திலிருந்து தப்பியோடுவதற்கு உதவுதல், ஆதர- தங்குவதற்கு இடமளித்தல் இராணுவச் சட்டத்தின் 138வது சரத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். அரசு இந்தச் சட்ட அடிப்படையைக் கிராம அதிகாரி மட்டத்தின் மூலம் பொது மக்களுக்குப் பரப்புகின்றது. எனினும் இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்கள் மீண்டும் கைது செய்யப்படும் நாடளாவிய ஒருங்கிணைந்த நிகழ்ச்சித் திட்டங்கள் தோல்வியிலேயே முடிந்துள்ளன.

கடந்த காலத்தில் இராணுவத்திலிருந்து தப்பியோடிய சிப்பாய்களின், அதிகாரிகளின் முகவரிகள் அடங்கிய பெயர்ப் பட்டியல் உதவியுடன், கிராம சேவகரின் அதிகாரப் பிரிவின் அடிப்படையில் தப்பியோடியவர்களைக் கைது செய்யும் முகமாக, இராணுவம் மற்றும் அரசாங்க அதிகாரிகள் ஒன்றிணைந்து பல சந்தர்ப்பங்களில் மேற்கொண்ட நடவடிக்கைகள் வெற்றியளிக்கவில்லை. பொலிஸ் மற்றும் இராணுவம் ஒன்றிணைந்து கிராம அதிகாரி மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரி உட்படக் கிராம மட்டத்தில் ஸ்தாபிக்கப்பட்ட சிவில் பாதுகாப்புக் குழுக்களினூடாக இந்தக் கைது செய்யப்படும் செயற்பாட்டை விரிவுபடுத்த தற்போது இராணுவத் தலைமை முயற்சிக்கின்றது.

தப்பியோடிய இராணுவ வீரர்களைக் கைது செய்ய அரச அதிகாரிகளின் உதவியைத் தருமாறு, கடந்த ஜூன் மாதம் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர், அரச நிர்வாகிகளிடம் கோரிக்கை விடுத்திருந்தார். இதன்படி அரச தலைமை நிர்வாகிகள் அனைத்து மாவட்டச் செயலாளர்களையும் அழைத்து, வடக்கு - கிழக்குத் தவிர்ந்த 18 மாவட்டங்களில் இது குறித்து விசேட செயற்றிட்டங்களை விரிவுபடுத்த ஆணை விடுத்துள்ளது. முதலாவதாக, அனைத்துப் பிரதேச செயலாளர்கள் மற்றும் சமுர்த்தி முகாமையாளர்கள் அழைக்கப்பட்டு, அரச நிர்வாக அமைச்சுடன் இணைந்து இராணுவ அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகளினால் மேற்கொள்ளப்படும் இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு உதவியளிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. இந்தக் கூட்டம் மிகவும் துரிதமாக, அவசரக் கூட்டமாக மாவட்டச் செயலாளரின் குறுகிய அறிவித்தலின் பிரகாரம் நடாத்தப்பட்டது. பிரதேச செயலாளர் மூலம் சமுர்த்தி முகாமையாளர்களினூடாகச் சமுர்த்தி அதிகாரிகள் அழைக்கப்பட்டு,

நர்மதா

⇨19

நன்றி - நூலகத்திட்டம்





## மட்டு: முறக் கொட்டாஞ்சேனை

# இராமகிருஷ்ணமிஷன் வித்தியாலயம் இராணுவத்தை வெளியேற்று!

உரிமைக்காகப் போராடும் ஒரு இனத்தின் போராட்ட சக்தியை அழிப்பதற்கு அவ் இனத்தின் கல்வி வசதிகளைப் பறித்து விடும் செய்கைகளையே, காலா காலமாக ஆக்கிரமிப்பாளர்கள் கையாண்டு வருகின்றார்கள்.

உலக வரலாற்றில் ஏகாதிபத்திய அடக்குமுறைகளுக்கு எதிராக ஒரு இனம் கிளர்ந்தெழும் போதிலெல்லாம், அந்த இனத்தின் போராட்ட வலுவைக் குறைப்பதற்கு அவ் இனத்திலுள்ள புத்திஜீவிகளை களையெடுப்பது, பாடசாலைகளை அழிப்பது, மாணவர்களை விரட்டுவது என்பதான பல நடைமுறைகளை எம்மால் சரித்திரத்தில் காணக் கூடியதாக உள்ளது.

இதேபோன்று சிறீலங்கா பேரினவாத அரசும், தமிழ் மக்களின் தாயகக் கோட்பாட்டை நசுக்குவதற்கு, தமிழர்களின் முக்கிய உடமையான கல்விச் செல்வத்தை சூறையாடும் செய்கைகளையே ஆரம்ப காலம் முதல் மேற்கொண்டு வருகின்றது.

யாழ். நூலக எரிப்பு, பல்கலைக் கழக தரப்படுத்தல், மாணவர் மீதான தாக்குதல்கள், பாடசாலைகள் மீது குண்டுவீச்சு என்று ஆரம்பித்து அண்மையில் இடம் பெற்ற மொறட்டுவ பல்கலைக்கழக தமிழ் மாணவர் மீதான இன வன்முறை வரை திட்டமிட்டு தமிழர் கல்வி மீது கைவைத்து வருவதை காணக்கூடியதாக உள்ளது.



இந்த வரிசையில் தமிழ் பாடசாலைகளில் இராணுவத்தை நிலை கொள்ள வைப்பதும், தமிழர் கல்வி மீதான கல்வி மீதான ஒருவகை ஆக்கிரமிப்பு என்று தான் கூறவேண்டும்.

இவ்வாறு மட்டக்களப்பு முறக்கொட்டாஞ்சேனையில் முகாம் அமைத்து இராணுவத்தினர் நிலைகொண்டிருக்கும் ஒரு பாடசாலை பற்றி தற்போது எழுப்பப்பட்டுள்ள சந்தேகம் பற்றியும், அப்பாடசாலையில் கல்வி கற்ற மாணவர்களின் கல்வி வீழ்ச்சி பற்றியும் சற்று விரிவாக ஆராய்ந்து பார்ப்பது இப்பொழுது அவசியமாகின்றது.

1990ம் ஆண்டு 2ம் கட்ட ஈழப்போர் ஆரம்பமானதைத் தொடர்ந்து இராணுவத்தினர் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பல பாடசாலைகளில் முகாம் அமைந்து நிலை கொண்டிருந்தனர்.

அந்த வகையில் மட்டக்களப்பு முறக்கொட்டாஞ்சேனை ராமகிருஷ்ணமிஷன் வித்தியாலயத்தையும் ஆக்கிரமித்து படைமுகாம் ஒன்றை அமைத்து இன்றுவரை நிலைகொண்டு வருகின்றனர்.

பாடசாலையில் இருந்து இராணுவத்தை வெளியேற்ற மேற்கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளும் தோல்வியில் முடிவடைய, 1991ம் ஆண்டு முதல் வேறு பகுதியில் உள்ள ஒரு தனியார் காணியில் இந்த பாடசாலை தற்காலிகமாக இயங்க ஆரம்பித்தது. இன்றுவரை உயர்தர வகுப்புக்கள் வரையுள்ள இந்த பாடசாலை தற்காலிகமாக அமைக்கப்பட்ட கொட்டில்களிலும், மர நிழல்களிலுமே நடைபெற்று வருகின்றது.

மாணவர்களுக்கு கல்வியின் மீதும், தாம் கல்வி கற்கும் பாடசாலையின் மீதும், இயல்பாகத் தோன்றக்கூடிய பக்தி, ஆர்வம், ஈடுபாடு என்று எதையுமே மழுங்கடிக்கக்கூடிய அனைத்து அம்சங்களையும் ஒருமித்துக் கொண்டுள்ள ஒரு பாடசாலை உண்டென்றால் அது தற்போது தற்காலிகமாக இயங்கிவரும் முறக்கொட்டாஞ்சேனை ராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயம் என்றே கூறவேண்டும்.

சுமார் 1000 மாணவ மாணவிகள் கல்வி கற்கும் இந்தப் பாடசாலையின் உயர்வகுப்பு படிக்கும் மாணவிகள் மற்றும் ஆசிரியைகள் தமது இயற்கை உபாதைகளுக்காக அயலில் உள்ளவர்களின் வீடுகளுக்கே செல்லவேண்டிய பரிதாப நிலை காணப்படுகின்றது.

இந்தப் பாடசாலைக்கு மலசலகூட வசதி இல்லை ஒரு நிரந்தரக் கட்டிடம் இல்லை. போதிய கதிரை, மேசை இல்லை. நல்ல கரும்பலகை இல்லை. மாணவர் அமருவதற்கு போதிய இடவசதி இல்லை. இப்படி பல 'இல்லை'களை தன்னுள் கொண்டுள்ள இப்பாடசாலைக்கு ஒரு நீண்ட வரலாறும் பெருமையும் மட்டுமே உண்டு.

சுமார் 75 ஆண்டுகளுக்கு முன்னர் மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்வி வளர்ச்சியை கருத்திற் கொண்டு ராமகிருஷ்ண மிஷனறியினரால் ஆரம்பிக்கப்பட்ட இரண்டு முக்கிய பாடசாலைகளுள், முறக்கொட்டாஞ்சேனை ராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயமும் ஒன்று.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் ஒரு முக்கிய பங்கை வகித்துவந்த இந்தப் பாடசாலை, கடந்த 1990ம் ஆண்டு முதல் ஒரு 'நடமாடும் பாடசாலையாக' இயங்கி வருகின்ற ஒரு சோகம் உண்மையிலேயே இப்பகுதி மாணவர்களின் கல்வியில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

உலக கல்வியின் தரமும் வடிவமும் எங்கோ உயரத்தில் சென்றுகொண்டிருக்கும் இன்றைய கம்பியூட்டர் யுகத்தில், ஒரு நூற்றாண்டு காலத்திற்கு பின் தங்கிய நிலையில் காணப்படும் இந்தப் பாடசாலையின் இன்றைய நிலைபற்றி முறக்கொட்டாஞ்சேனை மக்களிடம் கேட்டபோது, பல அதிர்ச்சி தரும் தகவல்கள் வெளிவந்தன.

கடந்த 1990ம் ஆண்டு 2ம் கட்ட ஈழப்போர் ஆரம்பமானபோது மட்டக்களப்பின் பல பகுதிகளும் புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் இருந்தன. புலிகளிடம் இருந்து மட்டக்களப்பை மீட்டெடுக்கும் நோக்கில், மட்டக்களப்பு - கொழும்பு பிரதான நெடுஞ்சாலை வழியாக முன்னேறிய இராணுவத்தினர், நெடுஞ்சாலையின் பல இடங்களில் முகாம் அமைத்து நிலைகொண்டிருந்தனர்.

முறக்கொட்டாஞ்சேனை ராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயத்திலும், இப்படியான ஒரு முகாம் நிறுவப்பட்டது. ஆரம்ப காலங்களில் இந்த முகாம் மனித உரிமை மீறல்களுக்கு இப்பகுதியில் பெயர் பெற்றிருந்தது.

சித்தாண்டி, மாவடிவேம்பு, வந்தாறுமூலை, களுவங்கேணி, சந்திவெளி போன்ற அயல் கிராமங்களில் பல சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு, ஆடுமாடுகள் போன்று அழைத்து வரப்பட்ட பல இளைஞர்களும், யுவதிகளும் இந்த ராமகிருஷ்ண மிஷன் பாடசாலை முகாமில் வைத்தே விசாரிக்கப்பட்டனர்.

விசாரணை என்ற பெயரில் சித்திரவதைகளும், துன்புறுத்தல்களும், படுகொலைகளும் இந்த முகாமில் வைத்தே மேற்கொள்ளப்பட்டன. இந்தக் காலப்பகுதிகளில் முறக்கொட்டாஞ்சேனை, சித்தாண்டிப் பிரதேசம், இந்தப் பாடசாலை இராணுவ முகாமாக நிர்வகிக்கப்பட்ட ஒரு 'திறந்தவெளிச் சிறைச்சாலை' போன்றே காணப்பட்டது.

1992ம் ஆண்டு பயிற்சி முடித்து புதிதாக வெளியேறிய ஸ்ரீலங்கா இராணுவத்தின் விசேட படைப்பிரிவு (Special Forces Regiment) இந்த முகாமிலேயே இணைக்கப்பட்டனர்.

Rapid Deployment Forces (R.D.F.) என்று முன்னர் அழைக்கப்பட்ட இந்த விஷேட படைப்பிரிவு மோட்டார் சைக்கிள்களில் வேகமாக விரைந்து அப்பகுதிகளில் திடீர் திடீர் என்று சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இப்படி இந்தப் படைப்பிரிவினரால் முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்ட பல இளைஞர்கள் பின்னர் காணாமல் போயுள்ளனர்.

இதேபோன்று தமிழ்க்குழுக்களின் உறுப்பினர்கள் சிலரும் இந்தப் பாடசாலை முகாமில் செயற்பட்டு, அப்பகுதியில் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்று சந்தேகிக்கப்பட்ட பல இளைஞர்களை முகாமிற்கு அழைத்துச் சென்று, அவர்கள் பற்றிய விபரம் பின்னர் வெளிவராதபடி செய்துள்ளனர்.

இராணுவத்தினருடன் சேர்ந்து இயங்கிய 'சபா' என்ற நபர் இப்பகுதியில் பலர் காணாமல் போவதற்கு காரணமாக இருந்து வந்திருக்கிறார் என்பதை கிராமத்தவர்களின் தகவல்களிலிருந்து அறிய முடிந்தது.

உதாரணமாக மட்டக்களப்பு ஆரையம்பதியை பிறப்பிடமாகவும், வாழைச்சேனையில் வசித்து வந்தவருமான தர்மலிங்கம் என்ற கிராம சேவை உத்தியோகஸ்தரை விசாரணைக்கென்று இந்தப் பாடசாலை முகாமிற்கு அழைத்து, பின்னர் அவர் கொலை செய்யப்பட்ட சம்பவம், மனித உரிமை அமைப்புக்களால் வெளிக்கொண்டு வரப்பட்டது.

திருமணம் முடித்து ஒரு மாதத்தில் காணாமல் போன தர்மலிங்கம் இந்த பாடசாலை முகாமில் இராணுவத்தினருக்குத் துணையாக ஆட்காட்டியாக செயற்பட்டுவந்த 'சபா' என்பவரால் விசாரணைக்காக அழைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இப்படியான பல சம்பவங்களைக் குறிப்பிட்டுக்கூறும் இப்பகுதி மக்கள் இவ்வாறு காணாமல் போனவர்களது மனிதப் புதைகுழிகள் இந்தப் பாடசாலை முகாமிற்குள் இருக்கக்கூடும் என்றும் சந்தேகிக்கின்றனர்.

இந்த முகாமில் மனித உரிமை மீறல்கள் நடைபெற்ற போது பொறுப்பாக இருந்த இராணுவ உத்தியோகஸ்தர்கள், தற்போது மாற்றலாகி கொழும்பு சென்று உயர்பதவிகளில் இருப்பதால், தற்போது இந்த முகாமில் நிலைகொண்டுள்ள படையினர் முகாமைவிட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டால் பழைய மனிதப்புதைகுழிகள் மக்களால் தோண்டப்படக்கூடும் என்ற அச்சத்திலேயே தொடர்ந்தும் இப்பாடசாலையில் இராணுவத்தை நிலைகொள்ள அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் என்றும், சந்தேகிக்கப்படுகின்றது.

மேற்படி கிராமத்து மக்களின் இந்தக் குற்றச்சாட்டுகள் பற்றிய சாத்தியம் ஒரு புறமிருக்க இந்தப் பாடசாலையில் இராணுவம் தொடர்ந்து நிலைகொண்டு இருப்பதால் அப்பகுதி மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுகின்றது என்பது பொதுவான ஒரு உண்மை.

இந்தப் பாடசாலை இராணுவ முகாமில் மறைந்துள்ளதாக கிராமத்து மக்களால் சந்தேகிக்கப்படும் மனிதப் புதைகுழிகளை வெளிக்கொண்டு வருவதற்கும், தடைசெய்யப்பட்டுள்ள இப்பிரதேச மாணவர்களின் கல்வி தொடர்வதற்கும், முதலில் பாடசாலையில் நிலைகொண்டுள்ள இராணுவத்தை வெளியேற்றுவது அவசியமாகும்.

மக்கள் எழுச்சி, வெகுஜனப் போராட்டம், மாணவர் போராட்டம் என்பன சரியான முறையில் நடத்தப்பட்டால், இப்பிரதேச மாணவரின் கல்விக்கு வழி கிடைக்கும் அதேவேளை, மறைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் சில மனித உரிமை மீறல் விடயங்களும் வெளிவரக்கூடும்.

**விகடகவி**

நன்றி - நூலகத்திட்டம்



# பயங்கரவாதத்தை அடக்க வந்த முதல் பிரிகேடியர்!

யாழ்ப்பாணத்தில பயங்கரவாதிகளைத் 'தேடிப்பிடித்து அழிப்பதற்கென" முழு அதிகாரங்கள் வழங்கி பிரிகேடியர் திஸ்ஸ வீரதுங்கவை ஜே.ஆர். ஜெயவர்த்தனா அனுப்பி வைத்திருந்தார்.

ஒரு வருடகாலத்துக்குள் இந்தப் பணியை நிறைவேற்றப்பட வேண்டுமென்று பணிக்கப்பட்டிருந்தது. ஜனவரி முதல் திகதி தொடக்கம், அவர் இப்பணிக்கு நியமிக்கப்பட்டிருந்தார். இரண்டு மூன்று தினங்கள் காலதாமதமாகவே பிரிகேடியர் வீரதுங்க யாழ்ப்பாணம் வந்தார்.

பிரிகேடியர் வீரதுங்க யாழ்ப்பாணத்தில் கால் வைப்பதற்கு முன்பாகவே இன்பம் என்ற இளைஞரும் அவரது மைத்துனர் செல்வரெத்தினம் என்ற இளைஞரும் நள்ளிரவில் அவர்களது வீட்டுக்குள் புகுந்து காவல் படையினரால் கடத்திச் செல்லப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டனர். நவாலியிலுள்ள அவர்களது வீட்டிலிருந்து கடத்திச் செல்லப்பட்ட அந்த இரு இளைஞர்களும் மறு நாட்காலையில் அல்லைப்பிட்டியில் வேலணைக்குச் செல்லும் வீதியில் சடலங்களாகக் கிடந்தனர்.

ஓராண்டுக்குள் பிரிகேடியர் வீரதுங்க பயங்கரவாதிகளைக் கண்டு பிடித்து அழித்தாரோ என்னவோ தெரியாது. ஆனால், அரச பயங்கரவாதம் வளர்ந்தது. தீவிரவாதமும் வளர்ந்தது. பிரிகேடியர் வீரதுங்க தாம் பழகியவர்களுடன் நட்புறவையும் நல்லுறவையும் வளர்க்க முயற்சித்தார்.

தமிழ் அரசியல் கட்சிகளுக்கிடையில் ஒற்றுமையையும் நல்லுறவையும் ஏற்படுத்துவதில் முதல் முயற்சியும் பெருமுயற்சியும் மேற்கொண்ட வல்வெட்டித்துறை நகர சபைத்-தலைவராக இருந்த ஞானமூர்த்தி தமிழ்க் கட்சிகளுக்கிடையில் கூட்டணியை உருவாக்குவதில் ஓரளவு வெற்றியும் பெற்றிருந்தார்.

பிரிகேடியர் வீரதுங்கவைச் சந்திப்பதற்காக யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் அமைந்திருந்த பிரிகேடியரின் அலுவலகத்துக்கு ஞானமூர்த்தி சென்றிருந்தார். பிரிகேடியரும் அவரைச் சந்தித்து நல்ல முறையில் பேசி வழியனுப்பியும் வைத்திருந்தார்.

ஆனால், "பிரிகேடியரைச் சந்திக்கச் சென்ற ஞானமூர்த்தி பழைய பூங்கவில் பாதுகாப்பு படையினரால் தாக்கப்பட்டு அவமானப்படுத்தப்பட்டார்" என்றொரு செய்தி "ஈழநாடு" பத்திரிகையின் முதல் பக்கத்தில் வெளிவந்து விட்டது.

இச்செய்தியைப் பார்த்ததுமே ஞானமூர்த்தி இச்செய்தியை மறுத்தும் தம்மை நல்லமுறையில் வரவேற்றுச் சந்தித்துப்பேசியதாகவும் ஒரு அவசரத் தந்திச் செய்தியை அனுப்பியிருந்தார்.

இத்தந்தி கிடைத்ததும் இந்த மறுப்புச் செய்தியையும் முதல் பக்கத்தில் பிரசுரிக்கும்படி இரவு வேலைக்கு வந்த மகாதேவாவிடம் கொடுத்து விட்டுப் போய் விட்டேன்.

மறுநாள் காலையில் பத்திரிகையைப் பார்த்தேன். மறுப்புச் செய்தி வெளியாகவில்லை. இதற்கிடையில் பிரிகேடியரிடம் இச்செய்தி பற்றி ஞானமூர்த்தி தெரிவித்து தாம் இச்செய்தியை மறுத்து அறிக்கை கொடுத்திருப்பதாகவும் அது அதே பத்திரிகையில் அதே முதல் பக்கத்தில் வெளிவருமென்றும் தெரிவித்திருக்கின்றார். செய்தி வெளிவரவில்லை! மறுநாளாவது வரும் என்று எதிர்பார்த்திருக்கிறார். மறுநாளாவது முதல் பக்கத்தில் போடும்படி நானும் மகாதேவாவிடம் கூறியிருந்தேன். இரண்டாவது நாளும் மறுப்புச் செய்தி வெளிவரவில்லை! எனக்கெதிராக நடந்த சதித்திட்டங்களில் இது ஒன்று என்று நான் அப்போது சந்தேகிக்கவில்லை. கூட்டணியை உருவாக்கிய ஞானமூர்த்திக்கெதிரான சதி என்றே நான் நினைத்திருந்தேன்.

மூன்றாவது நாளும் பத்திரிகையில் மறுப்புச் செய்தி வெளிவரவில்லை. இதற்குப் பதிலாக பிரிகேடியர் அலுவலகத்திலிருந்து எனக்கு எனது பெயரைக் கேட்டு இரகசியப் பொலிஸ் இன்ஸ்பெக்டரிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்திருந்தது!

தொலைபேசி அழைப்புக்குப் பதிலளித்தவர் மகாதேவா. அவர் என்ன கேட்டார், இதற்கு இவர் என்ன பதில் சொன்னார் என்பதெல்லாம் எனக்குத் தெரியாது. நான் மாலையில் எங்கெல்லாம் நிற்பேனோ அங்கெல்லாம் என்னைத் தேடித்திரிந்த மகாதேவா ஓரிடத்தில் என்னைக் கண்டார். இரகசியப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் உங்களுக்குத் தொலைபேசியில் பேசினார். உடனே உங்களை அவருடன் தொடர்பு கொள்ளட்டுமாம். இலக்கம் தந்திருக்கிறார். நீங்கள் உடனே வந்து தொடர்புகொள்ளுங்கள் என்றார். நான் அதைப் பார்த்துக் கொள்ளுகிறேன். நீங்கள் போங்கள் என்று மகாதேவாவிடம் சொன்னேன்.


"அவர் நம்பர் தந்திருக்கிறார். நான் உங்களைப் போகச் செய்கிறேன் என்று சொல்லி விட்டேன்" என்று மகாதேவா வற்புறுத்தினார். அவர் எப்படியும் வந்து சந்திப்பார். நான் பார்த்துக் கொள்கிறேன்' என்று மகாதேவாவை அனுப்பி விட்டேன்.

நான் தொலைபேசியில் தொடர்புகொண்டால் என்னை தமது இடத்துக்கு வரும்படி சொல்லுவார் என்று எனக்குத் தெரியும். நான் தொடர்பு கொள்ளவில்லை. நான் அலுவலகம் வந்தேன். மகாதேவாவும் அங்கு நின்றார் எதிர்பார்த்தது போலவே இரகசியப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் அலுவலகத்துக்கு என்னைத் தேடிவந்தார். சற்று நேரத்தில் மகாதேவா மறைந்து விட்டார்!

இன்ஸ்பெக்டர் ஞானமூர்த்தி சம்பந்தப்பட்ட செய்தி குறித்து ஏதோவெல்லாம் கேட்டார். மறுப்புச் செய்தியைப் பிரசுரிக்க யார் தவறியிருந்தாலும் நான் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுகிறேன்" என்று வாக்குமூலம் அளித்தேன். இன்ஸ்பெக்டர் போய் விட்டார்.

இவற்றையெல்லாம் இன்னொரு ஆள் ஒட்டுக் கேட்டுக்கொண்டிருந்தார். அவர் பெயர் ஆறுமுகசாமி. அச்சகப்பகுதி ஊழியர். மகாதேவாவிடமும் இயக்குநர் சிவானந்தனிடமும் இச்சம்பவம் ஒப்புவிக்கப்பட்டதை நான் பின்னர் அறிந்தேன்!

இந்தச் சம்பவம் நிகழ்ந்து சுமார் இருவாரங்களுக்குப் பின்னர் சில்லாலையில் பிரபல வைத்தியர் இன்னாசி தம்பியர் வீட்டில் ஒரு விருந்துபசாரம் சுகந்தன் இன்னாசி தம்பி என்னையும் இவ்விருந்துக்கு அழைத்திருந்தார். புகைப்படப்பிடிப்பாளர் சாமிநாதனையும் கூட்டிக் கொண்டு போயிருந்தேன். பிரிகேடியர் திஸ்ஸவீரதுங்க இன்னாசி தம்பியர் குடும்பத்தின் நண்பனாம். இவருக்குத் தான் இந்த விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. முகாந்திரம் ஈ.பி. இராசையா, உதவிப் பொலிஸ் மா அதிபர் பி. மகேந்திரன் மற்றும் முக்கிய பிரமுகர்களும் இவ்விருந்துபசாரத்தில் கலந்து கொண்டனர். உயர்ரக பானங்கள் முடிந்து இறைச்சியுடன் இடியப்பம் மற்றும் பலகாரங்கள் எல்லோரும் குஷி நிலையிலிருந்தோம். பலவற்றையும் பேசினோம். ஈ.பி. இராசையா முகம் சுளித்துக் கொண்டிருந்தார். மகேந்திரன் உற்சாகமாக இருக்கவில்லை!



பிரிகேடியர் வீரதுங்கவும் டென்சில் கொப்பேகடுவவும் எனது தட்டில் இடியப்பம் போட்டு நன்றாகச் சாப்பிட வேண்டுமென்று வற்புறுத்திக் கொண்டிருந்தனர். இதுதான் சந்தர்ப்பம் என்று என் மீது நீங்கள் காட்டும் அன்புக்கும் அக்கறைக்கும் நன்றி. ஆனால், என்னிடம் வாக்குமூலம் எடுப்பதற்கு சி.ஐ.டி இன்ஸ்பெக்டரை நீங்கள் தானே அனுப்பியிருந்தீர்கள்?" என்று கேட்டேன்.

"அதை மறந்து விடுங்கள்! நான் அதை எப்போதோ குப்பைக் கூடைக்குள் போட்டு விட்டேன்" என்று பிரிகேடியர் வீரதுங்கா 'டக்' கென்று பதிலளித்தார்.

இரவு பன்னிரெண்டு மணிக்குமேல் நானும் சாமிநாதனும் உதவிப் பொலிஸ்மா அதிபர் மகேந்திரனின் காரில் வீட்டில் வந்திறங்கினோம். நன்றாகச் சாப்பிட்டிருந்ததாலும், உடலிலும் உள்ளத்திலும் பாரம் வெகுவாக் குறைந்திருந்தது! கனதியெல்லாம் தண்ணீரோடு கரைந்து விட்டதோ!

பிரிகேடியர் வீரதுங்கா தமது ஓராண்டுக் காலப்பணியை முடித்துக் கொண்ட சமயத்தில் 1979 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ம் திகதி அவரைப் பேட்டி காணச் சென்றிருந்தேன். உதவிக்கு தம்பி அனந் பாலகிட்ணரையும் கூட்டிச் சென்றிருந்தேன். பிரிகேடியருடன் அருகே டென்சில் கொப்பேகடுவவும் இருந்தார். "பயங்கரவாதிகளைக் கண்டுபிடிக்கும் பணியை நீங்கள் நிறைவேற்றி விட்டீர்களா?" என்று கேட்டேன்.

"எங்கள் பணியை திருப்தி தரும் வகையில் நிறைவேற்றியிருக்கிறோம்." என்றார் பிரிகேடியர்.

"இன்பம் செல்வம் எப்படிக் கொலை செய்யப்பட்டார்கள்?"

"அந்தக் கொலைகள்., நான் பொறுப்பேற்று இங்கு வருவதற்கு முன்னரே நடந்து விட்டன" என்பதும் பிரிகேடியரின் பதில்.

"பயங்கரவாதிகளைக் கண்டுபிடித்தீர்களா" எனது கேள்வி.

இதற்கு "பயங்கரவாதிகள் என்று யாரும் முத்திரை குத்திக் கொண்டிருப்பதில்லையே" என்று டென்சில் கொப்பேகடுவ பதிலளித்தார்' பிரிகேடியர் தலையாட்டினார்.

1980 - ஆம் ஆண்டு முதல் திகதி 'ஈழநாடு' பத்திரிகையில் இப்பேட்டிச் செய்தி முதல் பக்கத் தலைப்புச் செய்தியாக வெளிவந்திருந்தது.

பத்திரிகை வெளிவந்த சமயம் பிரிகேடியர் கொழும்பில் இருந்தார்.

## அதிரடிப்படையின் அதிரடி!

கடந்த 09.09.2000 அன்று திருநெல்வேலிச் சந்தியால் விசேட அதிரடிப்படை வீரர்கள் ஜெட் வேகத்தில் தமது மோட்டார் சைக்கிளில் போய்க் கொண்டிருந்தனர். அப்போது இளைஞர் ஒருவர் இவர்களுடைய மோட்டார் சைக்கிளைக் கவனிக்காமல் குறுக்கே தனது மோட்டார் சைக்கிளை விட்டு விட்டார். விளைவு இளைஞர் கடுமையாகத் தாக்கப்பட்டதுடன் மோட்டார் சைக்கிளின் இரு ரயர்களும் குத்திக் கிழிக்கப்பட்டன.

## எங்களைப் பற்றித் தெரியுமா?

கழகத் தோழர்கள் அண்மையில் வலிகாமம் தெற்கு (சுன்னாகம்) பிரதேச சபை அலுவலகச் சுவர் மீது தமது சுவரொட்டியை ஒட்டி விட்டனர். இதனைக் கண்ணுற்ற சித்தியார் (வலிகாமம் தெற்கு பிரதேச சபைத் தலைவர்-(ஈ.பி.டி.பி) தனது சிற்றூழியரை அனுப்பி சுவரொட்டியைக் கிழிக்கச் சொன்னார். தாங்கள் ஒட்டிய சுவரொட்டி கிழிக்கப்படுவதைக் கண்ட கழகத் தோழர்கள் உடன் விரைந்து வந்தனர். ஏன் சுவரொட்டியைக் கிழிக்கிறாய் என சிற்றூழியரை மிரட்டினர். சித்தியார் வந்தார் Stick No Bills என்ற வாசகத்தைக் காட்டினார். கழகத் தோழர்களும் அப்படியானால் சரி. ஆனால், இந்த இடத்தில் ஈ.பி.டி.பி.யின் போஸ்டர் ஒட்டினால் பிறகு தான் தெரியும் எங்களைப் பற்றி என்று கூறிச் சென்று விட்டனர்.

## அஷ்ரப்பின் இனவாதமே காரணம்

வடக்கு முஸ்லிம் அகதிகளுக்கான அமைப்பு அமைப்பு (.M.R.O) இம்முறை யாழ் மாவட்டத் தேர்தலில் போட்டியிடுகிறது. இடம்பெயர்ந்த வடபகுதி முஸ்லிம்களின் பிரதிநிதித்துவத்தைக் காப்பாற்றவே தாம் தேர்தலில் போட்டியிடுவதாக இந்த அமைப்பின் தலைவர் மௌலவி எஸ்.சுபியான் தெரிவித்தார்.

தாம் ஒரு அரசியல் கலப்பற்ற அமைப்பு எனத் தெரிவித்த சுபியான் தமிழ் முஸ்லிம் உறவுகள் விரிசலடைவதற்குக் காரணம் அஷ்ரப்பின் இனவாத, பிரதேசவாதப் பேச்சுக்களே என்றார். வட பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்களுக்கென ஐ.நாவால் வழங்கப்பட்ட நானூறு கோடி ரூபா நிதியில் பெருமளவு பணம் அஷ்ரப்பால் கிழக்கு மாகாணத்திற்கே செலவிடப்பட்டது எனவும் தமக்கு கிள்ளித் தெளிக்கப்பட்டதாகவும் கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு நடாத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் எஸ்.சுபியான் தெரிவித்தார்.

## முஸ்லிம் காங்கிரஸின் பரிணாம வளர்ச்சியும் அதன் சொத்தான தேசிய ஐக்கிய முன்னணியும்!

இலங்கை முஸ்லிம் மக்களுக்கான தனியான அரசியல் கட்சியாகச் தோற்றம் தந்த முஸ்லிம் காங்கிரஸ் இன்று தேசிய ஐக்கிய முன்னணியாக பரிநிர்வாணம் அடைந்துள்ளதுடன் அதன் உச்சத்தனித்துவம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு உட்பட பத்து மாவட்டங்களில் அதன் வேட்புமனு நிராகரிக்கப்படாத வேளையில் வேட்பாளர்களில் பலர் தங்களைப் பற்றிய வேட்பாளர் அடையாளத்தை மறுத்துள்ளார்கள். சிலர் சுருக்கமாக "அவன் நானில்லை" என்று அமைச்சரையும் நோகாமல் தனக்கும் வலிக்காமல் தப்பித்துக் கொள்கின்றார்கள்.

இவர்களில் யாழ்ப்பாண மாவட்டத்தில் தேசிய ஐக்கிய முன்னணியின் வேட்பாளர் பட்டியலில் இடம்பெற்றுள்ள வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலா அவர்களும் ஒருவர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தே.ஐ.மு. வேட்பாளர் பட்டியலில் முன்னாள் பா.உ. செல்லையா ராசதுரை அவர்களும், வடக்கு கிழக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினரான கனகரத்தினம் விநாயகமூர்த்தியும் (பெர்ணான்டோ)வும் அடங்குவர். இதில் விநாயகமூர்த்தி தேசிய ஐக்கிய முன்னணியின் வேட்பாளர் தான் இல்லை என்று பின்வாங்கியிருக்கிறார். முன்னாள் பா.உ ராசதுரை அவர்களின் வேட்பாளர் நியமனம் போலியானது என பொதுசன முன்னணியின் வேட்பாளர் அகமது லெவ்வை மர்சூக் அவர்கள் மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருக்கிறார். விநாயகமூர்த்தி (பெர்ணான்டோ) கடந்த இரண்டு வருடங்களாக புனர்வாழ்வு துறைமுகங்கள் அமைச்சிடம் தொழில் ஒன்று கேட்டு நடையாய் நடந்தவருக்கு அஷ்ரஃப் வழங்கிய அற்புதமான தொழில் இதுவும் ஒரு தனித்துவம் தான்.

## மலையகத்தில் மோசடிக்குத் தயார்!

எதிர்வரும் பொதுத்தேர்தலில் மலையக மக்களின் வாக்குரிமையை பலவந்தமாக பறித்தெடுக்கும் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப் படுவதாகத் தெரியவருகின்றது.

அதன் முதல் கட்டமாக இனந்தெரியாத நபர்கள் மலையக தமிழ் வாக்காளர்களை அச்சுறுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஆறுமுகம் தொண்டமான் தலைமையிலான இ.தொ.கா., பொ.ஐ.மு. சின்னத்தின் கீழும் மலையக மக்கள் முன்னணி ஐ.தே.க. சின்னத்தின் கீழும் போட்டியிடுகின்றது.

தோட்டப்பகுதியில் தற்போது எழுந்துள்ள உக்கிர நிலைமைகளின் கீழ் ஆறுமுகம் தொண்டமானுடைய ஆதரவாளர்கள் ம.ம.மு. ஆதரவாளர்களுக்கு பலத்த அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்.

அரச, அமைச்சர் அதிகாரங்களைப் பயன்படுத்தி ஆறுமுகம் தொண்டமானின் ஆதரவாளர்கள் தோட்டப்பகுதிகளில் பெரும் வாக்கு மோசடிகளில் ஈடுபடத் தயாராகி வருகின்றனர் என்கிறது கிடைத்த தகவல் ஒன்று.

தேர்தல் தினத்திற்கு முதல்நாள் இரவு வாக்காளர்களை அச்சுறுத்தியும், மலையகத்தின் பெருவீதிகளில் தடைகளை உண்டுபண்ணியும் வாக்காளர்கள் அவர்களது வாக்குரிமையை இல்லாது செய்ய திட்டமிடப்பட்டு வருகிறது. இந்த நிலைமையை தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு மலையகத்தின் அரசியல் கட்சிகள் பல பொலிஸ் மா அதிபருக்கு முறைப்பாடு செய்துள்ளன.

நன்றி - நூலகத்திட்டம்



# ஆட்டிக்கிள் 19கண்டனம்!

நாட்டின் புதிய அரசாங்கத்தைத் தெரிவு செய்வதற்குரிய பொதுத் தேர்தலை மக்கள் எதிர் நோக்கியுள்ளார்கள். தேர்தல் களத்தில் 27 அரசியல் கட்சிகளும் 99 சுயேட்சைக் குழுக்களும் 5048 வேட்பாளர்களை போட்டிக்கு நிறுத்தியுள்ளன.கடந்த கால தேர்தல்களைவிட அதிக போட்டி நிலவுகின்ற தேர்தலாக இது கருதப்படுகின்றது.

சின்னச்சின்ன விடயங்களில் மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர்கள் எல்லாம் இன்று வேட்பாளர்களாக வேஷம் கட்டியிருக்கின்றார்கள். தமது தேவைகளைப் பூர்த்தி செய்வார்கள் என்று பாராளுமன்ற உறுப்பினர்களின் பின்னாலும், அரசியல் கட்சிகளின் பின்னாலும் ஓடிக் களைத்தவர்களும். அவர்களை எதிர்பார்த்து ஏமாற்றமடைந்த பலரும் இந்தத் தேர்தலில் தாங்களே போட்டியிட்டு தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டால் என்ன வகையில் தேர்தலில் பல்வேறு அமைப்புக்களையும் சேர்ந்தவர்கள் இந்தத் தேர்தலில் அரசியல் கட்சிகளின் பின்னாலும் சுயேச்சை குழக்களின் பின்னாலும் அணிவகுத்துள்ளார்கள்.

இலங்கையைப் பொறுத்த மட்டில் கருத்துச் சுதந்திரம் தாராளமாக இருக்க வேண்டிய இந்தத் தேர்தல் பிரசாரக் காலத்திலேயே கருத்துப் பரிமாற்றத்திற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்ற காரணத்திற்காக இந்தக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ள போதிலும், இன்று நாட்டின் பாதுகாப்பு என்பதே தலையாய பிரச்சினையாக இருக்கின்றது. இதற்கு எவ்வாறு தீர்வு காண்பது என்பது குறித்து நாளை நாட்டை ஆளப் போகின்ற, ஆட்சி நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான பாராளுமன்ற உறுப்பினர்களாகப் போகின்ற இப்போதைய் வேட்பாளர்களிடம் மக்கள் வினா எழுப்பாமல் இருக்க முடியுமா?

நாட்டின் பாதுகாப்பு இன்றைய வடக்கு கிழக்குப் பிரதேசத்தின் போர் முனை நடவடிக்கைகளிலேயே தங்கியுள்ளது. இதுகுறித்துப் பேசக்கூடாது, இதுகுறித்து பத்திரிகைகளில் எழுதக் கூடாது என்றால், எமது நாட்டின் ஜனநாயகத் தன்மை குறித்துப் பல்வேறுபட்ட சந்தேகங்கள் ஏற்படுவதை யாராலும் மறுக்க முடியாதல்லவா?

இது குறித்து எமது நாட்டின் அரசியல் தலைவர்கள் எவரும் அலட்டிக் கொண்டதாகத் தெரியவில்லை. நாட்டில் அவசரகாலச் சட்டம் அமுலில் உள்ளது. தேசிய பாதுகாப்பிற்கு ஊறுவிளைவிக்கும் என நம்பப்படுகின்ற விடயங்கள் குறித்து பத்திரிகைகளில் எழுத முடியாது. செய்திகள் வெளியிட முடியாது. இந்த நிலையில் தேர்தல் பிரசாரங்களை எவ்வாறு செய்வது?

ஜனநாயகத்தின் அடிப்படையான வாக்களிக்கும் சுதந்திரத்தை உருவாககுகின்ற வழி நடத்துகின்ற முக்கிய அம்சமான கருத்துச் சுதந்திரம் கட்டிப் போடப்பட்டுள்ளது. இந்த நிலையில், ஒரு ஜனநாயக நாட்டின் 4 ஆவது சக்தியாகிய பத்திரிகைகளும், செய்தியாளர்கள், பத்திரிகையாளர்கள் எவ்வாறு நாட்டை வழி நடத்தப் போகின்றார்கள் எனத் தெரியவில்லை.

இந்த நிலைமை குறித்து ஆர்ட்டிகிள் 19 என்ற அமைப்பு கவலை கொண்டுள்ளது. இதுகுறித்து கடந்த செவ்வாய்க்கிழமை அது அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. இலங்கையில் நடந்து கொண்டிருக்கின்ற தேர்தல் வன்முறைகள் குறித்து வன்மையாகக் கண்டித்துள்ள அந்த அமைப்பு, கருத்துச் சுதந்திரத்தின் மீது அரசாங்கம் விதித்துள்ள கட்டுப்பாடுகளை உடனடியாகத் தளர்த்த வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளது.

அடுத்த மாதம் நாட்டில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலையொட்டி இடம் பெற்று வருகின்ற கொலைகள், அடிதடிகள் என்பன நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதை அது தனது அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளது. இதே வேளையில் சமாதானத்துடன் கூடிய அரசியல் கருத்துப் பரிமாற்றம் விவாதங்களுக்கான வாய்ப்புக்களை அதிகரிக்கச் செய்யுமாறும் அது கோரியிருக்கின்றது.

லண்டன் மாநகரில் இருந்து செயற்படுகின்ற இந்த அமைப்பானது, இலங்கையில் அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப்பட்டுள்ள 3 அம்சங்கள் பொதுத் தேர்தலுக்கான பிரசாரத்தையும், சுதந்திரமான ஒரு தேர்தலையும் பாதிக்கப் போகின்றது என்று கவலை தெரிவித்துள்ளது.

தேர்தல் காலம் வரையில் நாட்டில் அவசரகாலச் சட்டத்தை அமுலில் வைத்திருக்கத் தீர்மானிக்கப்பட்டிருப்பது, அதிகாரிகளினால் நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் தரக் கூடிய விடயங்கள் என கருதப்படுகின்றவைகள் குறித்து பத்திரிகைகளில் எழுத முடியாதவாறு தடைகளை நீடித்திருப்பது, பத்திரிகை ஆசிரியராகிய லசந்த விக்கிரமதுங்கவுக்கு இம்மாதம் 5 ஆம் திகதி இலங்கையின் மேல் நீதிமன்றம் விதித்துள்ள ஒத்தி வைக்கப்பட்ட சிறைத்தண்டனை ஆகியவற்றை ஆர்ட்கிள் 19 தனது அறிக்கையில் எடுத்துக்காட்டியுள்ளது.

ஆர்ட்டிகிள் 19 நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளராகிய அன்றூ புடிபாட் (Andrew Puddephatt) இந்த விடயங்கள் குறித்து இலங்கை அரசாங்கம் உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமது அறிக்கையில் கோரியிருக்கின்றார்.

சமாதானமாகவும், சுதந்திரமாகவும் விரிந்த ஒரு பரப்பில் கருத்துப்பரிமாற்றங்கள் நிகழும் ஒரு சூழ்நிலையை தேர்தலை முன்னிட்டு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது அரசாங்கத்தின் தார்மீகக் கடமையாகும். இன்றைய எரியும் பிரச்சினையாக நாட்டில் உள்ள யுத்தச் செயற்பாடும் அதனோடு இயைந்த விடயம் குறித்தும் செய்திகள் வெளியிடுவதற்கோ, கருத்துக்களைத் தெரிவிப்பதற்கோ முடியாதவாறு நெருக்குதல்களைப் பிரயோகிப்பதும், இவ்வாறான ஜனநாயக சுதந்திரமானது பொருத்தமற்ற நடவடிக்கை அல்லது விரோதமான நடவடிக்கை எனக் கருதுகின்ற அரசியல்வாதிகள், பொது அதிகாரிகள் போன்றவர்களினால், ஊடகவியலாளர்கள் மீது சட்ட நடவடிக்கை என்ற அச்சுறுத்தலைப் பிரயோகிப்பதானது, அரசாங்கத்தின் இந்தத் தார்மீகக் கடமையை நிறைவேற்ற ஒருபோதும் உதவமாட்டாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச தரத்திலான கருத்துச் சுதந்திரப் பண்பாடு இலங்கையில் பேணப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள ஆர்டிகிள் 19, அரசியல் முரண்பாடுகளுக்கான மூலாதார விடயங்கள் குறித்து வெளிப்படையாக விவாதிக்கத்தக்க ஒரு சூழலை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்றும் கோரியுள்ளது.

இத்தகைய நிலையானது ஊடகங்களின் ஊடாகவே வெளிப்பட முடியும். ஊடகங்களே இதற்கான ஒரு களமாக அமைய முடியும். ஆகவே ஊடகங்கள் அரசியல் தலையீடுகள், மற்றும் தீங்கிழைக்கும் நோக்கம் கொண்ட எதிர்வினைகள் என்பவை குறித்துச் சிந்திக்காமல் சுதந்திரமாகச் செயற்படுவதற்கு வழிவகுக்க வேண்டும் என அது கேட்டுள்ளது.

பிரச்சினைகளை சரியாக இனம் கண்டு அவற்றைத் தீர்ப்பதற்குரிய வழிவகைகளில் செயற்படுகின்ற போக்கைக் கைவிட்டு பிரச்சினைகளில் இருந்து தூர விலகிச் செல்கின்ற அணுகுமுறைகளைக் கொண்ட நாட்டின் அரசியல் போக்கும், அரசாங்கமும் ஆர்டிகிள் 19 விடுத்துள்ள அறிக்கையை எந்த அளவிற்கு மதித்துச் செயற்படப் போகின்றன என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

- தர்மன்

# எமது பங்களிப்பை தடை செய்தது இந்த ஆயுதக் குழுக்களே!

**– ஆனந்தசங்கரி, த.வி.கூ.**

**1. இந்த தேர்தலில் பங்குபற்றுவதற்கு குறிப்பான காரணம் எதுவும் உண்டா?**

கடந்த காலத்தில் த.வி.கூ. தீர்மானங்கள் தமிழ் மக்கள் மத்தியில் ஏகோபித்து நிறைவேற்றக் கூடியதாயிருந்தது. ஒரு அமைதி-

## குடாநாட்டு

யான சூழலில் 1977ம் ஆண்டு 17 ஆசனங்களை நாம் கைப்பற்றினோம். அதன் பிறகு நியாயமான முறையில் தேர்தல் நடைபெறவில்லை. 1989ல் பெரும் மோசடியான ஒரு தேர்தல் நடைபெற்றது. 1994ம் ஆண்டு நாம் தேர்தல் நடத்த வேண்டாம் என அரசை வற்புறுத்தினோம். வழக்கும் போட்டோம். நீதிமன்றம் ஒரு நாட்டின் ஒரு பகுதிக்கு தேர்தல் நடத்தாமல் விட முடியாது என தீர்ப்பளித்தது. அதன் விளைவு 9 பேர் மிகச்சொற்ப வாக்குகளுடன் பாராளுமன்றம் சென்று முற்றுமுழுதாக அரசுடன் ஒத்துழைத்து தமிழர்களுக்கு எதிரான யுத்தத்தை சர்வதேச ரீதியில் நியாயப்படுத்தி வருகின்றனர்.

இது வரலாற்றில் ஏற்பட்ட பெருவிபத்து. இதன் விளைவுகள் மிகவும் பாரதூரமானவை. ஜனநாயக வழிக்குத் திரும்பியதாகக் கூறியக்கொண்டு 9 ஸ்தானங்களைக் கைப்பற்றிய குழு தமிழ் மக்களைப் பீதியடையச் செய்து விட்டது. தமிழ் மக்களை சுதந்திரமாக முடிவு எடுக்க முடியாத அளவுக்கு ஆக்கிவிட்டது. இக்குழுவைத் திருப்திப்படுத்த அரசும் இவர்களின் நியாயமற்ற கோரிக்கைகள் பலவற்றை நிறைவேற்றி வருகிறது.

உதாரணமாக நெடுந்தீவு மக்கள் அங்கு ஈ.பி.டி.பியின் அதிகாரத்துக்குட்பட்ட நடைப்பிணங்களாகவே நடமாடுகின்றனர். அங்கு பொலிஸ், இராணுவம், கடற்படை எதுவுமே கிடையாது. ஊர்காவற்றுறையில் ஈ.பி.டி.பி. முகாம் அமைத்து அப்பகுதி மக்களையும், பீதியடையச் செய்துவிட்டது.

அங்கு மக்கள் சுதந்திரமாக நடமாட முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டனர். அங்கு கடற்படையினர் இருந்தாலும், அவர்கள் ஈ.பி.டி.பிக்குப் பாதுகாப்பளிப்பதன்றி வேறு செயல் செய்வது இல்லை. இச்சூழலில் 51,000 வாக்காளர்களைக் கொண்ட ஒரு பிரதேசம் முழுக்க முழுக்க ஜனநாயக வழிக்குத் திரும்பியதாகக் கூறிக்கொள்ளும் ஒரு குழுவினரின் பூரண கட்டுப்பாட்டில் உள்ளது. இந்நிலை இந்நாட்டின் அரசியல் தலைவிதியையே நிர்ணயிக்கக் கூடியது. இவர்களிடமிருந்து எம்மக்களை மீட்டெடுக்க வேண்டிய புனிதமான கடப்பாடு எமக்குண்டு. இக்குழு எத்தகைய குற்றத்தையும் செய்து விட்டு நெடுந்தீவில் தலைமறைவாக வாய்ப்பு உண்டு. உதாரணமாக இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்ட விடயம் நீங்கள் அறிந்ததே. நாம் இலட்சிய நோக்குடையவர்கள் உலகநாடுகள் எமது நிலைப்பாட்டை ஏற்றுக் கொள்கின்றன. பாராளுமன்றத்தில் எமக்கு பலம் இருந்திருந்தால் தீர்வுத்திட்டத்தை மாற்றியிருப்போம். அரசின் நிலைப்பாட்டை நியாயப் படுத்த இவர்கள் உதவுகின்றனர்.

**2. இம்முறை கடந்த இரண்டு தசாப்தங்களுக்குள் எப்போதும் நடந்திராத விதத்தில் எல்லாத் தமிழ்க்கட்சிகளும் யாழ்ப்பாணத்தை குவியப்படுத்தித் தேர்தலில் குதித்திருக்கிறார்கள். இதற்கு குறிப்பாக என்ன காரணம் என்று கூறமுடியுமா?**

ஒரு சில வாக்குகளுடன் ஆசனம் கிடைக்குமென்று ஒரு சில கட்சிகள் நினைக்கின்றன. இன்னும் சிலர் தேசியப்பட்டியல் மூலம் சில ஆசனங்களைப் பெற்று விடலா-



ஆனந்தசங்கரி

மென்று நினைக்கிறார்கள். புளொட் போன்றவர்களின் ஆட்கடத்தல், கொலை, கொள்ளை போன்ற அடாவடித்தனங்கள் இனி எடுபடாது.

**3. ஒரு சுமுகமான தேர்தல் நடப்பதற்கான சூழ்நிலை இங்கு நிலவுகிறது என்று நீங்கள் கருதுகிறீர்களா?**

நிலவுகிறது என்று நான் சொல்ல மாட்டேன். அரசாங்கம் இன்றும் தமிழ்க்கட்சிகளிடமிருந்து ஆயுதங்களைக் களைவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. நடவடிக்கை எடுத்தாலும் முழுவதும் களையப்பட மாட்டாது

**4. இந்தத் தேர்தலில் தமிழ் கட்சிகள் பங்குகொள்வது வடக்கில் நிலைமைகள் சுமுகமாக உள்ளன என்ற அரசாங்கத்தின் நிலைப்பாட்டை உறுதிப்படுத்துவதாக அமையும் என்று பேசப்படுகிறதே. இது பற்றி என்ன சொல்கிறீர்கள்?**

அப்படிச் சொல்ல முடியாது. வன்னியில் போனமுறை தேர்தல் நடக்கவில்லை என்ன நடந்தது. நாங்கள் தேர்தலில் கணிசமான ஆசனங்களைக் கைப்பற்றி இவர்களுக்கு ஒரு பாடம் புகட்டுவோம்.

**5. வடக்கு கிழக்கு மாகாண சபைகட்கான தேர்தல் கடந்த 10 ஆண்டுகளாக நிலைமை சரியில்லை என்ற காணத்திற்காக நடாத்தப்படாமல் இருந்து வருகிறதே. இப்போது நிலைமை பாராளுமன்ற தேர்தல் விடயத்தில் மட்டும் எப்படி மாறிவிட்டது என்று கூற முடியும்?**

சட்டப்படி ஆறு வருடங்களில் பாராளுமன்றம் கலைக்கப்பட வேண்டும். பாராளுமன்றத் தேர்தல் முழு நாட்டிற்கும் நடத்தப்பட வேண்டும்.

**6. இந்தத் தேர்தலில் ஆயுதமேந்திய அரசியல் கட்சிகளும் ஆயுதம் ஏந்தாக் கட்சிகளும் பங்கேற்கின்றனவே. இந்த நிலைமை கட்சிகளிடையே ஒரு சமமற்ற நிலையை உருவாக்காதா? இது பற்றி என்ன சொல்கிறீர்கள்?**

எமது வேட்பாளர்கள் இரண்டு மூன்று பேர் நல்ல ஆற்றல் உள்ளவர்கள். பாராளுமன்றத்திலும் நல்ல பங்களிப்புச் செய்திருப்பார்கள். அவர்களை வர விடாமல் செய்தது இந்த ஆயுதக்குழுக்கள் தான். இவர்களுடைய மிரட்டல் தான் இருவரையும் பின்வாங்கச் செய்தது.

**7. இங்கே பலமான சண்டைகள் நடந்து கொண்டிருக்கும் ஒரு சூழலில், தேர்தல் வேலைகளில் ஈடுபடுவதால் உங்களுக்கு சிக்கல்கள் எதுவும் இல்லையா?**

மக்கள் இடம்பெயர்ந்து கொண்டிருக்கிறார்கள். வீதியில் லொறிகளிலும் உழவு இயந்திரங்களிலும் மக்கள் பொருட்களை ஏற்றிச் செல்வதைக் காணக் கூடியதாகவுள்ளது.சிக்கல் இருக்கிறது.

**8. பொதுமக்களது ஆதரவு அல்லது பங்களிப்பு எந்த அளவில் இருக்கிறது?**

மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.இன்றைய சூழ்நிலையில் 30 வீதமான மக்கள் வாக்களிப்பார்களா என்ற சந்தேகம் உள்ளது. இந்த இடத்தில் தீவுப்பகுதி வாக்குகளுக்குப் பெறுமதி கூட.

**9. விடுதலைப்புலிகள் இது தொடர்பாக என்ன நிலைப்பாட்டை எடுத்துள்ளார்கள் எடுப்பார்கள் என்று கருதுகிறர்கள்? இது உங்கள் செயல்பாட்டை பாதிப்பதாக இல்லையா?**

தொடர்ந்து ஆறு ஆண்டுகள் ஒரு குழுவின் ஆட்சி நடைபெறுகிறது. இது புலிகளுக்கும் தெரியும். இதனால் மக்களின் துன்பம் நீடிக்கிறது. இது நீடிப்பதை அவர்களும் விரும்பமாட்டார்கள்.

**“நெடுந்தீவு மக்கள் அங்கு ஈ.பி.டி.பியின் அதிகாரத்துக்குட்பட்ட நடைப் பிணங்களாகவே நடமாடுகின்றனர். அங்கு பொலிஸ், இராணுவம், கடற்படை எதுவுமே கிடையாது. ஊர்காவற்றுறையில் ஈ.பி.டி.பி. முகாம் அமைத்து அப்பகுதி மக்களையும், பீதியடையச் செய்துவிட்டது. அங்கு மக்கள் சுதந்திரமாக நடமாட முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டனர். அங்கு கடற்படையினர் இருந்தாலும், அவர்கள் ஈ.பி.டி.பிக்குப் பாதுகாப்பளிப்பதன்றி வேறு செயல் செய்வது இல்லை. இச்சூழலில் 51,000 வாக்காளர்களைக் கொண்ட ஒரு பிரதேசம் முழக்க முழக்க ஜனநாயக வழிக்குத் திரும்பியதாகக் கூறிக்கொள்ளும் ஒரு குழவினரின் பூரண கட்டுப்பாட்டில் உள்ளது. இந்நிலை இந்நாட்டின் அரசியல் தலைவிதியையே நிர்ணயிக்கக் கூடியது. இவர்களிடமிருந்து எம்மக்களை மீட்டெடுக்க வேண்டிய புனிதமான கடப்பாடு எமக்குண்டு.”**

நன்றி - நூலகத்திட்டம்



# தேர்தல் களம்!

## தமிழ்க்கட்சிகளின் நோக்கம் பொ.ஐ.முவுடனோ அல்லது ஐ.தே.கவுடனோ சேர்ந்துகொள்வதுதான்

— செந்தில், பு.ஜ.க.

**1. இந்த தேர்தலில் பங்குபற்றுவதற்று குறிப்பான காரணம் எதுவும் உண்டா?**

எமது நிலைப்பாடு அரசியல் விழிப்புணர்வுக்கான ஒரு சந்தர்ப்பம் இது என்பதாகும். மக்களின் ஆதரவுடன் ஒரு வெகுஜனப் போராட்டத்தை ஆரம்பிப்பது தான் குறிப்பான காரணம்.

**2. இம்முறை கடந்த இரண்டு தசாப்தங்களுக்குள் எப்போதும் நடந்திராத விதத்தில் எல்லாத் தமிழ்க்கட்சிகளும் யாழ்ப்பாணத்தை குவியப்படுத்தித் தேர்தலில் குதித்திருக்கிறார்கள். இதற்கு குறிப்பாக என்ன காரணம் என்று கூறமுடியுமா?**

தமிழ்க்கட்சிகளுக்குத் தமது இருப்பைப் பலப்படுத்த வேண்டிய தேவை உள்ளது. அதைக்காட்டி அரசுடன் பேரம் பேசுவதற்காக இவர்கள் கடந்த காலங்களிலும் இனியும் பாராளுமன்றம் போகத்தான் போகிறார்கள். இவர்கள் ஒரு தெளிவான நிலைப்பாட்டை முன்வைக்கவில்லை. பொதுஜன முன்னணியுடனோ, ஐக்கிய தேசியக் கட்சியுடனோ இணைந்து கொண்டு தமிழ் மக்களின் பிரதிநிதிகள் தாங்கள் தான் என்று காட்டுவதற்காக. இதற்கு அப்பால் ஒரு பாதை எடுப்பார்கள் என எதிர்பார்க்க முடியாது.

> "தமிழ்க்கட்சிகளுக்குத் தமது இருப்பைப் பலப்படுத்த வேண்டிய தேவை உள்ளது. அதைக்காட்டி அரசுடன் பேரம் பேசுவதற்காக இவர்கள் கடந்த காலங்களிலும் இனியும் பாராளுமன்றம் போகத்தான் போகிறார்கள். இவர்கள் ஒரு தெளிவான நிலைப்பாட்டை முன்வைக்கவில்லை. பொதுஜன முன்னணியுடனோ, ஐக்கிய தேசியக் கட்சியுடனோ இணைந்து கொண்டு தமிழ் மக்களின் பிரதிநிதிகள் தாங்கள் தான் என்று காட்டுவதற்காக."

**3. ஒரு சுமுகமான தேர்தல் நடப்பதற்கான சூழ்நிலை இங்கு நிலவுகிறது என்று நீங்கள் கருதுகிறீர்களா?**

அரசு தேர்தல் நடத்துவதில் உறுதியாகவுள்ளது. அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகள் ஒரு சுமுகமான சூழ்நிலையில் தேர்தல் நடைபெறுமா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது எனினும், தேர்தல் நடைபெறும். முற்றுமுழுதாக சுமுகமான சூழ்நிலையில் எதிர்பார்க்க முடியாது.

**4. இந்தத் தேர்தலில் தமிழ் கட்சிகள் பங்குகொள்வது வடக்கில் நிலைமைகள் சுமுகமாக உள்ளன என்ற அரசாங்கத்தின் நிலைப்பாட்டை உறுதிப்படுத்துவதாக அமையும் என்று பேசப்படுகிறதே. இது பற்றி என்ன சொல்கிறீர்கள்?**

இத்தேர்தலில் தமிழ்க்கட்சிகள் பங்குபற்றுவதால் அப்படி ஒரு சூழ்நிலை இருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏனைய தமிழ்க்கட்சிகள் புறக்கணித்திருந்தால் அதற்கு மேலாக நாம் தேர்தலில் பங்குபற்றியிருக்க மாட்டோம். இதனால் தேசிய சர்வதேச ரீதியில் அரசு பிரசாரம் செய்யும் என்பது உண்மை தான்.

**5. வடக்கு கிழக்கு மாகாண சபைகட்கான தேர்தல் கடந்த 10 ஆண்டுகளாக நிலைமை சரியில்லை என்ற காணத்திற்காக நடாத்தப்படாமல் இருந்து வருகிறதே. இப்போது நிலைமை பாராளுமன்ற தேர்தல் விடயத்தில் மட்டும் எப்படி மாறிவிட்டது என்று கூற முடியும்?**

நாம் தேர்தலில் போட்டியிடுவதில்லை என்று தீர்மானித்தாலும் யுத்தத்தின் மத்தியில் எல்லாம் நடைபெறுகின்றன. இயல்பு வாழ்க்கை உடன் திரும்ப மாட்டாது. அதனால் தான் நாம் தேர்தலில் பங்குபற்றுகிறோம். அரசு மாகாண சபைத் தேர்தலை நடாத்தாமல் விட்டது ஒரு பேரினவாத நோக்கில் தான். தனக்கு சாதகமான தேர்தலை நடத்துவதும் சாதகமற்றதை நடாத்தாமல் விடுவதும் அரசின் சந்தர்ப்பவாதம் தான். மாகாண சபைத் தேர்தலை நடத்தினால் அதிகாரத்தை தமிழர்களிடம் கையளிக்க வேண்டும். பாராளுமன்றத் தேர்தலை நடத்துவதன் மூலம் தனக்குச் சாதகமானவர்களை தனக்கு கை உயர்த்துபவர்களை மட்டும் தெரிவு செய்வதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்த முயற்சிக்கிறது.

**6. இந்தத் தேர்தலில் ஆயுதமேந்திய அரசியல் கட்சிகளும் ஆயுதம் ஏந்தாக் கட்சிகளும் பங்கேற்கின்றனவே. இந்த நிலைமை கட்சிகளிடையே ஒரு சமமற்ற நிலையை உருவாக்காதா? இது பற்றி என்ன சொல்கிறீர்கள்?**

யுத்த சூழலில் ஆயுதமேந்திய ஆயுத மற்ற கட்சிகளிடையே உள்ள முரண்பாட்டைத் தான் இது காட்டுகிறது. தேர்தலில் பங்குபற்றும் குழுக்கள் ஜனநாயகம் பேசினாலும் மக்களின் வாக்குகளை ஆதரவின் மூலம் பெறுவதைவிட ஆயுதபலத்தின் மூலம் பெறவே கட்சிகள் முயற்சிக்கின்றன. எமது கட்சியைப் பொறுத்தவரையில் மக்களின் ஆதரவை நம்பித்தான் நாம் தேர்தலில் நிற்கிறோம்.

**7. இங்கே பலமான சண்டைகள் நடந்து கொண்டிருக்கும் ஒரு சூழலில். தேர்தல் வேலைகளில் ஈடுபடுவதால் உங்களுக்கு சிக்கல்கள் எதுவும் இல்லையா?**

7.பலவித சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. யுத்த சவால்களை எதிர்நோக்கித்தான் கடந்த காலங்களில் நாம் எமது அரசியல் வேலைகளை முன்னெடுத்து வந்தோம். இன்று தேர்தல் களத்திலும் அதை சந்திக்க வேண்டியவர்களாகவுள்ளோம். யுத்தத்தின் பாதிப்புக்கள் மத்தியில் மக்களுடன் தொடர்புகொள்வதற்கு இது ஒரு சந்தர்ப்பம். அதனால் இதை நாம் பெரிய சிக்கல் என எடுக்கவில்லை.

**8. பொதுமக்களது ஆதரவு அல்லது பங்களிப்பு எந்த அளவில் இருக்கிறது?**

8.பலதரப்பட் மக்கள் மத்தியில் செல்லவும் மக்களின் அபிலாஷைகளை அறியவும் இது ஒரு சந்தர்ப்பம் நாம் முன்வைத்திருக்கும் கோரிக்கைகள் சரி என்பதை மக்கள் ஏற்றுக்கொள்வதுடன் ஆதரிக்கின்றனர். இச்சந்தர்ப்பத்தில் கடந்த கால அரசியலையும், இன்றைய அரசியலையும் உன்னிப்பாக அவதானிக்கக்கூடிய விழிப்புணர்வு மக்கள் மத்தியிலுண்டு.

**9. விடுதலைப்புலிகள் இது தொடர்பாக என்ன நிலைப்பாட்டை எடுத்துள்ளார்கள் எடுப்பார்கள் என்று கருதுகிறர்கள்? இது உங்கள் செயல்பாட்டை பாதிப்பதாக இல்லையா?**

இது பற்றி நாம் சொல்ல முடியாது. எமது நிலைப்பாடு புலிகளுக்கெதிரானதோ பாதகமானதோ என்று நாம் கருதவில்லை. எமது அரசியல் கோரிக்கைகள் தமிழ் மக்களின் போராட்டத்தை வெகுஜன ரீதியில் முன்னெடுப்பதற்கும் நாம் செயற்படுகிறோம்.

## புலிகளுக்குப் பயப்படாத த.வி.கூ. எமக்குப் பயப்படுவதாக கூறுவது சுயலாபப் பிரச்சாரமே!

— டக்ளஸ், ஈ.பி.டி.பி.

**1. இந்த தேர்தலில் பங்குபற்றுவதற்று குறிப்பான காரணம் எதுவும் உண்டா?**

அதிகாரம் இருந்தால் தான் மக்களுக்கு உதவ முடியும். அதிகாரம் இருந்தால் தான் பேரம் பேச முடியும். அரசியல் உரிமை பெற அதிகாரம் அவசியம். அதிகாரத்தை இரு வழியில் பெறலாம். ஒன்று ஆயுதவழி. மற்றையது ஜனநாயக வழி. ஈ.பி.டி.பியைப் பொறுத்த மட்டில் ஆயுதவழி சாத்தியமில்லை. ஜனநாயக வழி என்பது தேர்தலில் முக்கிய பங்கு வகிக்கிறது.


**2. இம்முறை கடந்த இரண்டு தசாப்தங்களுக்குள் எப்போதும் நடந்திராத விதத்தில் எல்லாத் தமிழ்க்கட்சிகளும் யாழ்ப்பாணத்தை குவியப்படுத்தித் தேர்தலில் குதித்திருக்கிறார்கள். இதற்கு குறிப்பாக என்ன காரணம் என்று கூறமுடியுமா?**

மக்கள் கூறுவதைத்தான் நாம் சொல்ல முடியும். திருவிழாவுக்குக்கடை திறப்பதைப் போல் தமிழ்க்கட்சிகளும் கடை திறந்து அரசியல் வியாபாரம் நடத்துகின்றன. அகில இலங்கைத் தமிழ் காங்கிரசின் முன்னாள் தலைவர் குமார் பொன்னம்பலம் கிரிசாந்தி கொலை வழக்கில் ஆஜராவதற்காக யாழ் வருவதற்கு பாதுகாப்பு படையினரிடம் அனுமதி பெறமாட்டேன் என்றார். இன்று யாரின் அனுமதியுடன் இவர்கள் யாழ் வந்துள்ளார்கள்?.

> "எல்லோரும் ஏதோ ஒரு வகையில் ஆயுதம் வைத்திருக்கின்றனர். தமிழர் விடுதலைக் கூட்டணியினர் பாதுகாப்புப் படையினரின் பாதுகாப்பில் தான் தங்கியுள்ளனர். தளபதி அமிர்தலிங்கத்தின் மகன் காண்டீபன் தலைமையில் ரீ.என்.ஏ. என்ற இயக்கம் கட்டப்பட்டது. அது தோல்வியில் முடிவடைந்தது. எட்டாப்பழம் புளிக்கும் என்று சொல்கிறார்களோ தெரியாது. 1989ம் ஆண்டுத் தேர்தலில் புலிகள் ஜனநாயக வழியில் தமக்கு நம்பிக்கையில்லை. அதையும் மீறி தேர்தலில் போட்டியிடுபவர்கள் தேசத்துரோகிகளாகக் கருதப்பட்டு அவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். அதையும் மீறித்தான் கூட்டணி 1989லும், 1994லும் தேர்தலில் போட்டியிட்டது. 1998ம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலிலும், அது தான் நடந்தது. புலிகள் இப்போதும் அதைத் தான் சொல்கிறார்கள். புலிகளுக்குப் பயப்படாத கூட்டணி ஈ.பி.டி.பிக்கு பயப்படுவதாகக் கூறுவது சுயலாபப் பிரச்சாரம்."

**3. ஒரு சுமுகமான தேர்தல் நடப்பதற்கான சூழ்நிலை இங்கு நிலவுகிறது என்று நீங்கள் கருதுகிறீர்களா?**

இன்று இங்கு இருக்கிற சூழலுக்கேற்ற



டக்ளஸ்

வகையில் தான் இத்தேர்தல் இருக்க முடியும்.

**4. இந்தத் தேர்தலில் தமிழ் கட்சிகள் பங்குகொள்வது வடக்கில் நிலைமைகள் சுமுகமாக உள்ளன என்ற அரசாங்கத்தின் நிலைப்பாட்டை உறுதிப்படுத்துவதாக அமையும் என்று பேசப்படுகிறதே. இது பற்றி என்ன சொல்கிறீர்கள்?**

இலங்கைத் தேர்தல் சட்டத்தின் படி 25 மாவட்டங்களிலும் தேர்தல் நடத்த வேண்டும். இந்த கேள்வி திசை திருப்பும் நோக்குடன் கேட்கப்படும் கேள்வி போலுள்ளது. சரிநிகருக்குச் சட்டம் தெரியாதா?

**5. வடக்கு கிழக்கு மாகாண சபைகட்கான தேர்தல் கடந்த 10 ஆண்டுகளாக நிலைமை சரியில்லை என்ற காணத்திற்காக நடாத்தப்படாமல் இருந்து வருகிறதே. இப்போது நிலைமை பாராளுமன்ற தேர்தல் விடயத்தில் மட்டும் எப்படி மாறிவிட்டது என்று கூற முடியும்?**

எம்மைப் பொறுத்த மட்டில் வட கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். வடகிழக்கில் அரசியல் நிர்வாகம் அவசியம். அதைக்கொண்டு வருவதாயின் தேர்தல் அவசியம். ஜனாதிபதித் தேர்தல், உள்ளூராட்சித் தேர்தல் நடத்தலாம் என்றால் ஏன் வட கிழக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தக்கூடாது.

**6. இந்தத் தேர்தலில் ஆயுதமேந்திய அரசியல் கட்சிகளும் ஆயுதம் ஏந்தாக் கட்சிகளும் பங்கேற்கின்றனவே. இந்த நிலைமை கட்சிகளிடையே ஒரு சமமற்ற நிலையை உருவாக்காதா? இது பற்றி என்ன சொல்கிறீர்கள்?**

எல்லோரும் ஏதோ ஒரு வகையில் ஆயுதம் வைத்திருக்கின்றனர். தமிழர் விடுதலைக் கூட்டணியினர் பாதுகாப்புப் படையினரின் பாதுகாப்பில் தான் தங்கியுள்ளனர். தளபதி அமிர்தலிங்கத்தின் மகன் காண்டீபன் தலைமையில் ரீ.என்.ஏ. என்ற இயக்கம் கட்டப்பட்டது. அது தோல்வியில் முடிவடைந்தது. எட்டாப்பழம் புளிக்கும் என்று சொல்கிறார்களோ தெரியாது. 1989ம் ஆண்டுத் தேர்தலில் புலிகள் ஜனநாயக வழியில் தமக்கு நம்பிக்கையில்லை. அதையும் மீறி தேர்தலில் போட்டியிடுபவர்கள் தேசத்துரோகிகளாகக் கருதப்பட்டு அவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். அதையும் மீறித்தான் கூட்டணி 1989லும், 1994லும் தேர்தலில் போட்டியிட்டது. 1998ம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலிலும், அது தான் நடந்தது. புலிகள் இப்போதும் அதைத் தான் சொல்கிறார்கள். புலிகளுக்குப் பயப்படாத கூட்டணி ஈ.பி.டி.பிக்கு பயப்படுவதாகக் கூறுவது சுயலாபப் பிரச்சாரம்.

**7. இங்கே பலமான சண்டைகள் நடந்து கொண்டிருக்கும் ஒரு சூழலில். தேர்தல் வேலைகளில் ஈடுபடுவதால் உங்களுக்கு சிக்கல்கள் எதுவும் இல்லையா?**

சிக்கல் உள்ளது. ஆபத்து இல்லாமல் வெற்றி இல்லை. மக்களின் நலனைப் பாதுகாக்க வேண்டுமென்றால் நாம் ஆபத்துக்களை எதிர்கொள்ளத்தான் வேண்டும்.

**8. பொதுமக்களது ஆதரவு அல்லது பங்களிப்பு எந்த அளவில் இருக்கிறது?**

கணிசமானளவு இருக்கும். மக்கள். விரும்புகிறார்கள். மூன்று வகையான அரசியல் நோக்கத்தை இங்கே பார்க்கலாம். ஒன்று ஆக்க அரசியல் மற்றையது அழிவு. இன்னொன்று சுயலாப அரசியல். இதில் மக்கள் ஆக்கத்தை நோக்கிப் போவதையே கூடுதலாக விரும்புகிறார்கள்.

**9. விடுதலைப்புலிகள் இது தொடர்பாக என்ன நிலைப்பாட்டை எடுத்துள்ளார்கள் எடுப்பார்கள் என்று கருதுகிறர்கள்? இது உங்கள் செயல்பாட்டை பாதிப்பதாக இல்லையா?**

அதைப்பற்றி எமக்கு அக்கறையில்லை. நாம் அரசியல் கட்சி. புலிகள் தமிழ் பேசும் மக்களின் நலனை முன்நிறுத்தித்தான் தமது நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

நன்றி - நூலகத்திட்டம்




### தமிழ் இனி 2000 மாநாடு

# அடுத்த நூற்றாண்டை எதிர் கொள்ளுவதற்கான ஒரு தொடக்கம்!

சரிநிகரும் காலச்சுவடு அறக்கட்டளையும் இணைந்து நடத்திய உலகத் தமிழ் இலக்கிய அரங்கான தமிழ் - இனி 2000, விமரிசையாகவும், வெற்றிகரமாகவும் செப்டெம்பர் மாதம் முதல் மூன்று திகதிகளில் சென்னையில் நடைபெற்றது. தமிழகம், ஈழம், மலேசியா, சிங்கப்பூர், கனடா, ஜேர்மனி, நோர்வே, அவுஸ்திரேலியா போன்ற இடங்களிலிருந்து இருநூறுக்கும் அதிகமான எழுத்தாளர்கள், கலைஞர்கள், புலமையாளர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் கலந்து கொண்டனர். இவர்களோடு ஆயிரக் கணக்கானோர் பார்வையாளர்களாகக் கலந்து கொண்டனர். கைலாசபதி அரங்கு, புதுமைப்பித்தன் அரங்கு ஆகிய இரண்டு அரங்குகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. இரண்டு அரங்குகளிலும் மொத்தமாக 45 அமர்வுகள் இடம்பெற்றன.


பெரும் இலக்கிய விழாவாக இடம்பெற்ற தமிழ் - இனி 2000 புதிய நூற்றாண்டில் தமிழ் இலக்கியமும் கலைகளும் எடுக்கவிருக்கும் புது வீச்சைக் குறியிட்டுக் காட்டியது.

முதல்நாள் இடம்பெற்ற துவக்க விழாவை வரவேற்புரையுடன் சேரன் ஆரம்பித்து வைத்தார். எம்.ஏ.நுஃமான் தலைமையேற்ற துவக்கவிழாவில் கா. சிவத்தம்பி சிறப்புரை ஆற்றினார். தமிழ் இலக்கியம் இந்த நூற்றாண்டில் எதிர்கொள்ளவேண்டிய சவால்களைப் பற்றித்தெளிவாகவும், ஆழமாகவும், தனது கருத்துக்களை முன்வைத்த சிவத்தம்பி, தமிழ் இனி 2000 இன் நோக்கங்களையும், தேவைகளையும் வலியுறுத்தினார். மற்றொரு சிறப்புரையை மலையாளத் திரைப்பட நெறியாளர் அடூர் கோபாலகிருஷ்ணன் வழங்கினார். சிலப்பதிகாரம், தொல்காப்பியம் என்பனவற்றின் பின்னணியில் தமிழ் மொழி - மலையாள உறவுகளைப் பற்றிக் குறிப்பிட்ட அடூர் கோபாலகிருஷ்ணனின் உரை நறுக்காகவும், மனதில் பதியும் படியும் இருந்தது.


கா. சிவத்தம்பி



செ. யோகராசா, சேரன், ஜெயசங்கர்


(இடது) அடூர் சுந்தராசாமி, மனுஷ்யபுத்திரன்

சுந்தர ராமசாமி, பார்வதி கந்தசாமி (கனடா) ஜி.அரவிந்தன் (சிங்கப்பூர்), அப்பணாமி (ஆசிரியர் ஆறாம் திணை) ஆகியோரும் உரையாற்றினர். கவிஞர் மனுஷ்ய புத்திரனுடைய நன்றியுரையுடன் துவக்க விழா குறித்த நேரத்துக்கு முடிவடைந்தது.

துவக்க விழாவை அடுத்து உடனடியாகவே ஆய்வு அமர்வுகள் ஆரம்பமாகின. நவீன கவிதை, மார்க்சிய இலக்கியம், எதிர்ப்பு இலக்கியம், வாய்மொழி இலக்கியம், சிறுகதை இலக்கியம் ஆகிய துறைகளில் அமர்வுகள் இடம்பெற்றன.

மாலையில் புகலிட வாழ்வும் இலக்கியமும் எனும் தலைப்பில் ந. அசீந்திரன் நெறிப்படுத்திய கலந்துரையாடல் ஒன்று அரங்கிற்கு வெளியே நிகழ்ந்தது. கைலாசபதி அரங்கில் நிகழ்ந்திருக்க வேண்டிய இந்த அமர்வு 'புலம்பெயர்ந்து' வெளியே இடம்பெறுகிறது என்று குறிப்பிட்டார் ந. சுசீந்திரன். ஏளாரமானோர் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். பார்வதி கந்தசாமி (கனடா). பாரதிதாசன் (ஜேர்மனி), கண்ணன், மணி சுப்பராயன் (ஜேர்மனி) நட்சத்திரன் செவ்விந்தியன் (அவுஸ்திரேலியா) போன்றோர் கலந்துகொண்டனர்.

இரவு எட்டு மணிக்குப் புல் வெளியில் கருஞ்சுழி ஆறுமுகத்தின் 'தூங்கிகள்' எனும் நாடகம் இடம்பெற்றது.

இரண்டாம் நாள் அமர்வுகள் காலை 9.30 மணியிலிருந்து இரவு எட்டுமணிவரை இடம்பெற்றன. ஜி.அரவிந்தன், சுஜாதா, எம்.ஏ.நுஃமான், நந்தினி சேவியர். கந்தையா சிறிகணேசன், சி. ஜெயசங்கர், தொ. பரமசிவன், ஆ.இரா.வேங்கடாசலபதி, சு.வில்வரத்தினம், ரெ.கார்த்திகேசு, வீ.அரசு, வி. சபாபதி, நாஞ்சில் நாடன், எம்.ஐ.எம்.ஜபார் போன்ற பலர் கட்டுரை சமர்பித்தனர். இலக்கியமும் இணையமும், தமிழ்த் தேசிய இலக்கியம், திராவிட இலக்கியம், மார்க்சியமும் இலக்கியமும் ஆகிய அமர்வுகளில் சுவையான ஆனால், சூடான விவாதங்கள் இடம்பெற்றன. அமர்வுகளின் முடிவில் கூத்துப்பட்டறை வழங்கிய ந. முத்துசாமியின் தென்னாலிராமன் எனும் நாடகம் இடம்பெற்றது.

மூன்றாம் நாள் அமர்வுகளில் பங்கேற்றவர்களில் அம்பை, சித்திரலேகா, அம்மன்கிளி முருகதாஸ், பிரேம் ரமேஷ், கொ.றொ.கொன்ஸ்ரன்ரைன், ஞா. ஸ்டீபன், ந.சரவணன் ஆகியோர் அடங்குவர். நடிகர் நாசர், வாஸந்தி, சிவசங்கரி, போன்றோரும் கருத்துரைகள் வழங்க வந்திருந்தனர். மூன்றாம் நாள் அமர்வுகளில் முக்கியமாகக் கவனத்தை ஈர்த்தவை பெண்ணிய அமர்வுகளாகும். அ. மங்கை, ஔவை. வ. கீதா, பாமா, மாலதி, சூரியகுமாரி, ரேவதி ஆகிய தமிழக, ஈழம் பெண்ணியவாதிகளுடன் வேறும் ஏராளமானோர் அமர்வுகளில் கலந்து கொண்டனர். நிகழ்த்திக்காட்டுதல், கவிதை வாசிப்பு என்பவற்றோடு துவங்கிய பெண்ணிய அமர்வுகள் அனைவரதும் கவனத்தை ஈர்த்தன.

தமிழ் இனி 2000 விழாவை ஒட்டிக் "கண்ணுக்குள் வெளி" என்ற தலைப்பில் தமிழ் கடையாளம் தொடர்பான ஒவியக்கண்காட்சி ஒன்றை தா. சனாதானனும், பா. அகிலனும் கைலாபதி அரங்கில் ஒழுங்கு செய்திருந்தனர். எஸ்.தனபால், பி.வி.ஜானகிராமன், ஏ.பி.சந்தானராஜ், கே.எம்.ஆதிமூலம், வித்யாசங்கர் ஸ்தபதி, ஜி.ராமன், ஆர்.வி.பாஸ்கரன், டி.தட்சணாமூர்த்தி, ஏ.விஸ்வம், ஜி.சந்துரு, ட்ராஸ்கி மருது, கே.முரளிதரன், ராம பழனியப்பன், எம்.நடேஸ், மரியா அந்தோனிராஜ், செல்லையா, எஸ்.மைக்கல் இருதயராஜ், டி.எபனேசர் சுந்தர்சிங் ஆகிய தமிழக ஓவியர்களதும் ரி.சனாதனன் ஆர்.வைதேகி, எம்.நிலாந்தன் ஆகிய ஈழ ஓவியர்களதும் படைப்புக்கள் இடம்பெற்றிருந்தன. கண்காட்சியை

⇨19

### ஒரு எதிர்ப்புக்குரல்!

தமிழ் இனி 2000 அரங்கின் முதல் நாள் காலை ' தமிழ் இனி 2000 என்ற கும்பமேளா' என்ற தலைப்பில் ஒரு துண்டுப்பிரசுரம் விநியோகிக்கப்பட்டது. தமிழ் இனி 2000 இலக்கிய அரங்கு ஒரு 'பார்ப்பனியச் சதி' என்ற தோரணையில் ஏராளமான தகவல் பிழைகளுடனும் தனிநபர் தாக்குதல்களுடனும், பிழையான புரிதல்களுடனும் வெளியிடப்பட்டிருந்த இத்துண்டுப்பிரசுரம் நிறப்பிரிகை சார்பில் வெளியிடப்பட்டிருந்தது.

இத்துண்டுப்பிரசுரத்தின் முழுப்'பிரதி'யையும் வாசகர்கள் www.aaramthinai.com இணையத்தளத்தில் அல்லது நிறப்பிரிகை செப்.2000 இதழில் பார்க்க முடியும்.

எவ்வாறாயினும் இப்பிரசுரம் அம்மாநாட்டில் கலந்து கொண்ட பேராளர்களிடையேயும் சரி, பார்வையாளர்களிடையேயும் சரி பெரிய தாக்கம் எதனையும் ஏற்படுத்தவில்லை.

# தமிழினி 2000 மாநாட்டு தீர்மானங்கள்

**தமிழினி மாநாட்டின் இறுதி நாளன்று மாநாட்டு ஒருங்கிணைப்பாளர்களால் தயாரிக்கப்பட்ட அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது. அவ்வறிக்கையை முழுமையாக இங்கே தருகிறோம்.**

**ஆர்**

**தீர்மானம் ஒன்று**

இலங்கைத் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் மலையக மக்களும் கடந்த பல தசாப்தங்களாகத் தமது அரசியல் உரிமைக்காகவும் வாழ்வுரிமைகட்காகவும் நடத்தி வரும் போராட்டத்தின் நியாயத்தன்மையானது எல்லாவித அரசியல் கருத்து வேறுபாடுகளுக்கும் அப்பால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும். அவர்களது இந்த உரிமைகளுக்கான கோரிக்கைகள் நியாயப்பூர்வமான முறையில் அணுகப்பட்டு அவர்களின் அபிலாசைகள் பூர்த்தி செய்யப்படும் வகையிலான ஒரு அரசியல் தீர்வு உடனடியாகக் காணப்பட வேண்டும்.

அங்கு வெடித்துள்ள சிவில் யுத்தம் காரணமாக நாளுக்கு நாள் உயிர் அழிவும் சொத்தழிவும் அதிகரித்து வருவதையும், நோயும் வறுமையும் நிச்சயமற்ற எதிர்காலமும் கொண்ட ஒரு சந்ததி அங்கு உருவாகி வருவதையும் கவனத்தில் கொண்டு அதனை தடுத்து நிறுத்துவதற்கான உடனடியான தீர்வு ஒன்றைக் காணுமாறு நாங்கள் வலியுறுத்துகின்றோம்.

**தீர்மானம் இரண்டு**

இலங்கையின் சிவில் யுத்தம் காரணமாக உள்நாட்டிலும் இந்தியாவிலும் பிற வெளிநாடுகளிலும் தஞ்சம் புகுந்து அகதிகளாக வாழும் இலங்கையைச் சேர்ந்த அகதிகளுக்கு ஐ.நா. சபையில் அங்கீகரிக்கப்பட்ட அகதிகளுக்குரிய சகல உரிமைகளும் அவர்கள் வாழும் நாடுகளின் அரசாங்கங்களால் வழங்கப்பட வேண்டும்.

அகதிகள் குறித்த ஐக்கிய நாடுகள் சபையின் உடன்பாட்டில் (1951) இந்தியா கையெழுத்திட வேண்டும் எனவும், இந்தியாவில் வாழும் ஈழத் தமிழ் அகதிகளை சிறப்பு முகாம்களில் அடைப்பதைக் கைவிட்டு அவர்களுக்கு உரிய உரிமைகளை வழங்க வேண்டுமெனவும் நாங்கள் கோருகிறோம்.

இந்தியா ஐ.நா.வின் உடன்பாட்டில் கையெழுத்திடாத போதிலும் ஐ.நா.வின் அகதிகளுக்கான உயர் ஆணையத்தின் (U.N.H.C.R) நிர்வாகக் குழுவில் அங்கம் வகிக்கிறது. இந்தியாவில் அனுமதி பெறாமல் நுழையும் அகதி ஒருவரை ஐந்து ஆண்டுகள் வரை சிறையில் அடைக்க வெளிநாட்டவர் சட்டம் (1946) வழி வகுக்கிறது. இது மாற்றப்பட வேண்டும். சித்திரவதை மற்றும் குரூரமான தண்டனைகளுக்கு எதிரான ஐ.நா.வின் உடன்படிக்கையில் இந்தியா 1997ல் கையெழுத்திட்டுள்ளது. இந்த உடன்படிக்கையின் பிரிவு 3ன்படி இதில் கையொப்பமிட்ட நாடுகள் அகதி ஒருவரை அவர் விருப்பமின்றித் திருப்பி அனுப்ப முடியாது. ஆனால், இந்த விதியும் இந்தியாவால் மீறப்படுகிறது. அதுமட்டுமன்றி U.N.H.C.R பிரதிநிதிகள் அகதிகளை நேரடியாக அணுகுவதையும் இந்தியா தடுத்து வருகிறது. இது போன்ற தடைகளும் நீக்கப்பட வேண்டுமெனக் கோருகிறோம்.

**தீர்மானம் மூன்று**

மரண தண்டனை முறையை முற்றாகக் கைவிடும்படி இந்திய மற்றும் இலங்கை அரசுகளை நாங்கள் வற்புறுத்துகின்றோம். போராளிக் குழுக்களும் மரண தண்டனை விதிப்பதை நிறுத்தும்படி கேட்டுக் கொள்கிறோம்.

உலகெங்கும் 108 நாடுகள் மரண தண்டனை விதிப்பதைக் கைவிட்டுள்ளன. இந்தப் புத்தாயிரமாவது ஆண்டில் மரண தண்டனையை உலக நாடுகள் அனைத்தும் ஒழித்துவிட வேண்டுமென ஐ.நா. சபையும் வேண்டுகோள் விடுத்துள்ளது. குற்றங்களைத் தடுக்கக்கூடியதாக மரண தண்டனை செயல்படவில்லை என்பதை 1988 மற்றும் 1996 ஆகிய ஆண்டுகளில் ஐ.நா. நடத்திய ஆய்வுகள் தெளிவாக்குகின்றன. இந்த ஆண்டில் இதுவரை இந்தியாவில் எவரும் தூக்கில் ஏற்றப்படவில்லை. இது தொடர்பாக மனித உரிமை அமைப்பினரும் அறிவுஜீவிகளும் விடுத்த கோரிக்கைகளை இந்திய அரசு மதித்து வருவது கண்டு இந்திய அரசை நாங்கள் பாராட்டுகிறோம். விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஆயுத குழுக்கள் முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்ள மரண தண்டனை விதித்து வருகின்றன. இந்த ஜனநாயக விரோதப் போக்கினைக் கைவிடுமாறு ஆயுதக் குழுக்களையும் நாங்கள் வலியுறுத்துகிறோம்.

**தீர்மானம் நான்கு**

தமிழ் வழி கல்விக்காகத் தமிழக அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகளை நாங்கள் வரவேற்கிறோம். இதில் நீதிமன்றங்கள் தலையிடாதபடி அரசியல் அமைப்புச் சட்ட பாதுகாப்பினைப் பெறுவதற்கான முயற்சிகளைத் தமிழக அரசும் மத்திய அரசும் மேற்கொள்ள வேண்டுமென வற்புறுத்துகிறோம். இதுமட்டுமன்றி மருத்துவம், பொறியியல் உள்ளிட்ட அனைத்து உயர்கல்வியும் தமிழ் வழியில் கொண்டு வரப்பட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்கு அவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப மருத்துவம் / பொறியியல் போன்ற உயர்கல்வியில் விகிதாச்சார ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும். பெரும் வணிக நிறுவனங்களாக செயல்படும் தனியார் கல்விக் கூடங்கள் தேர்ச்சி விகிதத்தை உயர்த்தி காண்பிக்கும் பொருட்டு + 2 பாடங்களை இரு ஆண்டுகளிலும் நடத்துதல், காப்பியடிக்க அனுமதித்தல் போன்ற வழிமுறைகளை கையாளுகின்றனர். ஆசிரியர்களும் தங்களிடமுள்ள தவறான மதிப்பீட்டின் காரணமாக ஆங்கில வழியிலுள்ள விடைத்தாள்களுக்கு கூடுதல் மதிப்பெண்களையும், தமிழ் வழியிலுள்ள விடைத்தாள்களுக்கு குறைவான மதிப்பெண்களையும் போடுகின்றனர். பெரும்பாலான தமிழ் வழிப் பள்ளிகளில் போதிய ஆசிரியர், போதிய கண்காணிப்பின்றி மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர். ஏழை மாணவர்கள் தனிப்பயிற்சி (டியுசன்) பெறுவதும் சாத்தியமில்லை. இதனால் மருத்துவம் / பொறியியல் போன்ற உயர்கல்வியில் இவர்களுக்குப் போதிய பிரதிநிதித்துவம் கிடைப்பதில்லை. 1995-96 ஆம் ஆண்டில் பொறியியல் கல்லூரிகளில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களில் ஆங்கில வழியில் படித்த மாணவர்கள் 77 சதவீதம். தமிழ் வழியில் பயின்றவர்கள் 23 சதவீதம். ஆனால், மேல்நிலைக் கல்வியில் தமிழ் வழியில் பயில்பவர்கள் 80.7 சதவீதம். ஆங்கில வழியில் படிப்பவர்கள் 19.3 சதவீதம் மட்டுமே. சுமார் 81 சதவீத இடங்கள் பெற வேண்டிய தமிழ்வழிக்கல்வி மாணவர்கள் 23 சதவீதம் மட்டும்தான் பெறமுடிந்துள்ளது. இந்த ஏற்றத்தாழ்வு நீங்க இடைக்கால ஏற்பாடாக தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்கு அவர்களது எண்ணிக்கைக்கு ஏற்ப விகிதாச்சார ஒதுக்கீடு மருத்துவம், பொறியியல் படிப்புகளில் வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்துகிறோம்.

**தீர்மானம் ஐந்து**

இன்று உலகின் பல நாடுகளிலும் பிரசுரிக்கப்படும் தமிழ் நூல்களையும் இதழ்களையும் தமிழகத்தில் பெற இருந்து வரும் நடைமுறைச் சிக்கல்களை நீக்க அரசு உத்தரவு பிறப்பிக்க வேண்டும். இந்தியாவிற்கு வெளியே பிரசுரிக்கப்படும் தமிழ் நூல்களை அரசு நூலகத்துறை தனி நிதி ஒதுக்கி வாங்க வேண்டும்.

நன்றி - நூலகத்திட்டம்



## 19வது பெண்கள் சந்திப்பு (பிரான்ஸ்):

# பெண்நிலையும் சுதந்திரமான கருத்துப் பரிமாற்றமும் வளர்ச்சியைநோக்கி...

ஐய்ரோப்பாவின் பெண்கள் சந்திப்பு இவ்வருடம் 29,30 யூலை மாதத்தில் பிரான்சில் நடைபெற்றது. பத்தாண்டுகளுக்கு முன்பாக ஜெர்மனியில் முதன்முதலாக பெண்கள் வட்டத்தினால் தேவிகா மற்றும் ஆர்வமுள்ள பெண்களால் ஆரம்பிக்கப்பட்டது. இறுதியாக நடைபெற்ற நிகழ்வு மேற்கூறிய தினங்களில் 19வது தொடராக மலர்ந்தது. "பெண்கள் தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளவும், விழிப்புணர்வை தம்மிடையே வளர்த்துக் கொள்ளவும்" என இச்சந்திப்புக்கள் அமைகின்றன.

இங்கு நடைபெறும் கலந்துரையாடல்களில் எல்லாப் பெண்களும் கலந்துரையாடக் கூடியவாறு அமைவதால் சந்திப்புக்களின் இறுதியில் தோழியர் தமக்கொரு புத்துணர்ச்சி கிடைத்ததாக் கூறுகின்றனர். ஆண்களுக்கும், பெண்களுக்குமாக நடைபெறும் நிகழ்வுகளில் பொதுவாகவே ஆண்கள் தம் கருத்தைச் சொல்லத் தயங்க மாட்டார். ஆனால் பெண் தயக்கமின்றிப் பேசுவதற்கு இன்னும் பழக்கப்பட்டிருக்கவில்லை என்றே சொல்லலாம். ஆண் என்கிற பொது எதிரியின் முன்னால் ஆணாதிக்க கூறுகளை பகிரங்கமாக எதிர்ப்பதற்கு பெண்கள் வளர்க்கப்பட்ட வேண்டும். விழிப்புணர்வு கொண்ட பெண்ணியம் ஆணாதிக்க கூறுகளை கண்டறிதல், அனுபவங்களைப் பகிர்தல் பெண்ணிய எழுத்துக்கள், கலைத்திறமைகள் இவைகளை வென்றெடுக்கவே பெண்கள் சந்திப்புக்கள் நடைபெற்று வருகிறது.

இவைகள் அய்ரோப்பா ரீதியாக நடாத்தப்பட வேண்டிய தேவைகளில் சில ஆங்காங்கு வாழும் பெண்களும் இச்சந்திப்புக்களில் பங்கெடுக்க வேண்டும். பொருளாதார வசதியின்மை, தனியாக பயணம் செய்வதற்கான சுதந்திரம் இன்மை, எத்தனை பெண்களுக்குத் தான் சாத்தியம்? அய்ரோப்பாவில் ஏதோ பெண்கள் அளவுக்கதிகமாக சுதந்திரத்தை அனுபவித்துக் கொண்டு ஆண்களை நசுக்கிக் கொண்டிருப்பதாய் கூச்சல் எல்லாத் திசைகளிலுமே கேட்கிறது. இதன் அர்த்தமே சுதந்திரம் உனக்கு அனுமதிக்கப்படவில்லை என்ற உள் அர்த்தம் கொண்டது தான்.

ஜெர்மனின் பல பாகங்களிலும், சுவிஸ்லாந்தில் இதுவரை 2 தடவைகளும், பிரான்சில் முதல் தடவையாகவும் இச்சந்திப்பு நடைபெற்றது. வந்திருந்த தோழிகளின் சுய அறிமுகத்துடன் ஆரம்பமாகிய நிகழ்ச்சிகளில் முதலாவதாக "முற்போக்கு பேசும் ஆண்களும், பெண்ணியமும்" என்ற தலைப்பில் சுவிஸ் ரஞ்சி பேசினார். முற்போக்கு என்று சொல்லிக் கொண்டு பெண் அவயங்களைப் வர்ணிப்பதும், பெண் கலவிக்காக, கூட்டுக் கலவிக்காகவே தவித்துக் கொண்டிருக்கிறாள். அதில் அவளே விருப்பம் கொண்டிருக்கிறாள். கூட்டுக்கலவி பெண்ணுக்கு விருப்பமானது. அதற்கு அவளை வழிக்கு கொண்டு வருவதில் போதும் போதும் என்றிருக்கிறது போன்ற மோசமான விண்ணப்பங்கள், பின் நவீனத்துவம் என்ற பெயரில் எப்படியும் எழுதலாம், பெண் இப்படித்தான் நினைப்பாள் என்று ஆண் எழுத்துக்கள் கூறுவது ஆண் ஆதிக்க சிந்தனையின் பாற்பட்டவையே. பாலியலை வலிந்து தம் ஆக்கங்களில் புகுத்துவதான சிந்தனைகளை பற்றி அவர் காரசாரமாகக் கண்டித்தார். தொடர்ந்த கலந்துரையாடலில் இவ்வெழுத்துக்கள் கண்டிக்கப்பட வேண்டும், மேற்குறித்த கருத்துக்கள் உள்வாங்கியிருக்கும் ஆக்கங்களை பிரசுரிப்பதும் தவறே என்பது பலருடைய அபிப்பிராயங்களாக இருந்தது.

அடுத்த நிகழ்வாக 'குடும்பம் (சீனநாவல்) ஓர் பார்வை' என்ற தலைப்பில் பிரான்சைச் சேர்ந்த ஜெபா உரை நிகழ்த்தினார். குடும்பத்துக்கென்று ஒரு தலைமைப் பாத்திரம் இருப்பது (இது ஆணாகவே இருப்பது), அவர் அக்குடும்பத்தின் கட்டுமானங்களைத் தொடர்ந்து காப்பாற்றுவது குடும்ப அங்கத்தவர்கள் பற்றி அவர் எடுக்கும் முடிவுகள் இறுதியானவை. சீனாவில் இவ்விறுக்கமான குடும்ப அமைப்பு முறை, குடும்ப அங்கத்தவர்களை எவ்வாறு பாதிக்கிறது. அதனால் அங்கு நிகழும் குழப்பங்கள், அக்குடும்பத்தின் இளைய ஆண் இக்குடும்ப அரசியலுக்கெதிராக கலகம் செய்வது, இறுதியில் குடும்பத்தலைவனே குடும்ப அமைப்பின் இறுக்கங்களை புரிந்துகொள்வதுக்கு தன் நிலையில் இருந்து மாறுபடுவது நாவலின் இறுதியில் குடும்பத் தலைவனே ஒரு இணக்கத்துக்கு வருவது ஆகியவைகள் இந்நாவலைப் பற்றிய ஒரு விளக்கமான பார்வையாக ஜெபாவினுடைய உரை அமைந்திருந்தது. இந்நாவல் தொடர்பான விவாதத்தில் ஆசியக் கலாசாரங்களில் குடும்பம் காப்பாற்றப்படுதலும் (உலகளாவிய நிலையும் இதுதான்) அதன் இறுக்கங்களால் பாதிப்புறும் மனித உரிமைகளும், குடும்ப பொறுப்புகளை சுமக்கவேண்டிய பொறுப்பு பெண்களையே சார்ந்திருப்பதும், ஆனால், தீர்மானம் முடிவு எடுக்கவேண்டிய அதிகாரம் ஒரு ஆணுடையதே. இவ்வாறான குடும்ப செயற்பாடுகள் நாடுகள், இனங்கள், என்ற வகையில் வேறுபாடாக தெரியப்பட்டாலும் அவை மொத்தத்தில் ஒரே மாதியானவையே என்ற பல கருத்துக்கள் அங்கு பேசப்பட்டன.

அடுத்த நிகழ்வாக ஜெர்மனியிலிருந்து வந்திருந்த மல்லிகா, பெண்களும் குறைந்த கூலியும், என்ற தலைப்பில் பேசியபோது கட்டுநாயக்கா வர்த்தக வலயத்தில் வேலைசெய்கிற பெண்கள் நிலைமை பற்றிய விளக்கினார். இவர்களுக்காக எந்த தொழிற்சங்கமும், இயங்க அனுமதிக்கப்படாததோடு, இவர்களுடைய இயற்கையான தேவைகளைக் கூட நிர்வாகம் கட்டுப்படுத்துகிறது. சிறுநீர் கழிக்கப் போகும் நேரம் உற்பத்தியைக் குறைக்கும் காலமாக நிர்வாகத்தால் மிகுந்த கண்காணிப்புக்கு உள்ளாக்கப்படுகிறது. ஆண்களுக்கு வழங்கப்படுவதை விட பெண்களுக்கு குறைவான சம்பளம் கொடுத்து அவர்கள் உழைப்பு சுரண்டப்படுகின்றது. வேலை செய்யும் பெண்களின் பிரச்சினைகளை, அவலங்களை வெளியிடும் பத்திரிகைகள், எழுதப்பட்டிருக்கும் கட்டுரைகள் தொடர்பாக ஆராய்ந்திருந்தார் மல்லிகா.

தொடர்ந்த அடுத்த நிகழ்வான, மார்க்சியப் பார்வையில் பெண்ணியம் என்ற தலைப்பில் ஜெர்மனியில் இருந்து வந்திருந்த நிருபா, ஒரு கனமான விடயத்தைத் தான் எடுத்திருந்ததால் முதலில் தான் ஆயத்தப் படுத்திக் கொண்டு வந்திருந்த கட்டுரையை வாசித்து பின்னர் கலந்துரையாடல் செய்யலாம் என்றார். முன்னைய தாய்வழி முன்னிலை, பின்னர் ஆணுடைய பௌதிக ரீதியான உடல்வலிமை முன்னெடுக்கப்பட்ட பின் பெண்ணின் பின்னடைவுகள், தொழிற்புரட்சியின் பின்னர் பெண்களுக்குக் கிடைத்த வேலைகள், கல்விச் சுதந்திரம் பொருளாதார நன்மை, விடுதலை ஆகியவைகள் தொடர்பாக ஆராய்ந்திருந்தது கட்டுரை.

இதன் இறுதியில் மார்க்சியம் வர்க்க வேறுபாட்டை முன்னிறுத்திய அளவுக்கு பால் வேறுபாட்டின் சமமின்மை பற்றிய கேள்விகள் ஏன் எழுப்பப்படவில்லை அல்லது பெண்ணியம் பற்றிய புரிதல்கள் அங்கு இருக்கவில்லையா போன்றவைகளை உள்ளடக்கியதான நீண்ட கலந்துரையாடல் இடம் பெற்றது.

அடுத்ததாக, பத்துவருடங்களாக "சக்தி" ஓர் மீள்பார்வை" என்னும் தலைப்பில் தேவா தன் கருத்துக்களை முன் வைத்தார். பெண்கள் எழுதுவதை ஊக்குவிப்பதற்காக, ஆண்களே ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் தமிழ் பத்திரிகை உலகில் "சக்தி" பெண் சஞ்சிகை தமிழர் புலம் பெயர்ந்துள்ள நாடுகளில் ஒன்றான நோர்வேயில் இருந்து தயாநிதியின் உழைப்பால் வெளிவந்து கொண்டிருக்கிறது. பெண் எழுத்துக்களுக்கு களம் அமைத்து தருவதில் பெரும் பணியாற்றி வரும் இவ்விதழ் ஒழுங்காக காலம் தவறாது வெளிவர முடியாமைக்கு எழுதுகிற பெண்கள் மிகக் குறைவாய் இருப்பதும் ஒரு காரணமாகும். எனினும், தரமான காத்திரமான இதழாக சக்தி பரிணமித்திருக்கிறது. இவர்கள் பெண் எழுத்தாளர்களின் கதைகளை மட்டும் தெரிவு செய்து "புது உலகம் எமை நோக்கி" என்னும் தொகுப்பினை சென்ற பெண்கள் சந்திப்பில் வெளியிட்டனர். சக்தியின் முயற்சிகளில் இது ஒன்று என்றார். இவ்விடயம் தொடர்பாக பேசிய சுவிஸ் ரஞ்சி இச்சஞ்சிகை தொடர்ந்து வெளிவர பெண் எழுத்தாளர்களின் ஒத்துழைப்பு தேவை எனவும், இப்பத்து வருடகாலத்தில் 23 இதழ்கள் வெளியிடப்பட்டுள்ளன எனவும் குறிப்பிட்டார். இவர் சக்தியின் ஒத்துழைப்பாளர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.



இரண்டாம் நாள் நிகழ்வுகளில் முதலாவதாக "தலித் பெண்ணியம்" பற்றி இந்தியாவிலிருந்து இச்சந்திப்புக்கென வருகை தந்திருந்த சிவகாமி மிக விரிவான உரையாற்றினார். உடல் உழைப்பை இழிவானதாக ஆக்கி, அவைகளைச் செய்வோர் இழிசனங்கள் என்றும் கருதப்பட்டு, உயர்சாதியால் மத அடிப்படையிலும், திட்டமிட்டும் நசுக்கப்பட்ட மக்களிலே ஒரு பகுதியான தலித் பெண்கள், பெண் என்பதால் ஆணுக்கும் அடிமையாய், அதாவது அடிமையாய் வாழ்ந்த வாழும், ஆணுக்கும், கீழ் அடிமையாய் வாழும் நிலை தொடர்பாகவும் இப்பெண்ணுகளுக்கு இன்னும் கல்வியறிவு மறுக்கப்படுவதோடு, இந்தியாவில் கட்டாய கல்வி கொண்டு வரப்படாததற்கு முழுமுதற்காரணியாய் இருப்பது சாதியை தக்க வைத்துக் கொள்ளும் தந்திரமே எனவும், தானும் ஒரு தலித் பெண் என்பதால் தான் முகம் கொடுத்த பிரச்சினைகளையும், அவர் வெளியிடும் "கோடாங்கி" சஞ்சிகை பற்றியும் கூறினார். இவருடைய உரை தலித் போராட்டத்தின் வேர்களை, கிளைகளை, அதன் உயிர்ப்புக்களை விரித்துக் கூறியது.

இதன் பின் விஜி சிவகாமியின் "குறுக்குவெட்டு நாவல்" பற்றி விமர்சித்தார். திருமண பந்தத்தில் உள்ளோர் அதனை மீறிவேறு உறவுகளை தேடிக் கொண்டதும், அக்குடும்பத்தில் பிள்ளைகள் உள்ளார்கள் என்ற பொறுப்புணர்வு ஆணுக்கும், பெண்ணுக்கும் இருப்பதால் பல உணர்வுச் சிக்கலுக்கிடையிலான போராட்டம், இருவருக்கிடையில் ஏதோ ஒரு சமரசம் உண்டாகிறது. ஒரு குடும்பத்தின் சமகால சிக்கல்களை விபரிக்கும் இந்நாவலை அன்று சமூகமளித்திருந்த யாவரும் வாசித்திருந்தால் அன்றைய கலந்துரையாடல் சுவாரசியமானதாயிருந்திருக்கும். இந்நாவல் சம்பந்தமாய் பதிலளித்துப் பேசிய சிவகாமி, இந்நாவலில் வரும் பாத்திரங்கள், குடும்பம் புனிதமானது என்று நம்பப்படும் கோட்பாட்டை விலக்கி தாம் எடுத்துக் கொள்ளும் வாழ்க்கை இது தான். ஒழுக்கம் போன்ற இன்னும் பிடிகளுக்குள் மனிதனை நெருக்கினாலும், இவைகளை மீறிய வாழ்க்கை பெண்ணுக்கும், ஆணுக்கும் விரிந்து கிடக்கிறது. மேலும் இந்நாவலை விமர்சனக் கண்ணோட்டத்தை வைத்துக் கொண்டு வாசிக்காமல் முழுதையும் வாசித்தப்பின் விமர்சனம் வைப்பது ஆரோக்கியமானது என்றார்.

இதன் பின்னர் மலேசிய தமிழ்ப்பெண்களின் பிரச்சினைகள் என்ற தலைப்பில் சுபா (ஜெர்மனி) பேசினார். மலேசியாவின் ரப்பர் தோட்டங்களுக்கு வேலைக்காக கொண்டு வரப்பட்ட இந்திய தொழிலாளப் பெண்கள் வாழ்நிலை பற்றியும், மட்டரக மது வகைகளை குடிப்பதனால் அக்குடும்பங்களின் பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்பட்டிருத்தல் பயனீட்டாளர் சங்கம் இவர்கள் விடயத்தில் மேற்கொள்ளும் வேலைத்திட்டங்கள் பற்றியும் அவர் விரிவான உரையாற்றினார்.

இறுதியான நிகழ்ச்சியாக "ஊடாக" என்ற குறும் படம் காண்பிக்கப்பட்டது. சிவகாமியின் தாயாரிப்பில் உருவாக்கப்பட்டிருந்த இப்படத்தை பற்றிய விபரங்களை அவரே அங்கு விளக்கினார். கலையார்வத்தை முன்னிறுத்தியிருந்த இப்படம் பல சினிமா பிரபலங்களின் உதவியோடு எடுக்கப்பட்டிருந்தது.

நிகழ்வுகள் முடிந்த பின்னர் கலந்துகொண்டோர், இன்னும் தொடர்ந்து கலந்துரையாடல்களில் ஆவலோடு இருக்கிறோம் என்பதுபோல் தம் இருக்கைகளிலே அமர்ந்திருந்தது இச்சந்திப்பின் வளர்ச்சியை வெளிப்படுத்திக் காட்டுவதாக அமைந்திருந்தது. வேறு சந்திப்புக்கள் போல்லாது இப் பெண்கள் சந்திப்புக்கள், அங்கு கலந்து கொள்வோர் யாவரும் தம் கருத்துக்களை சுதந்திரமாக எவ்விதத் தடையின்றி முன் வைப்பதும் கருத்துக்கள் வைக்கப்படும் போது அவைகளை இடைமறித்து வாதங்களைக் குழப்பாமலும், விடயத்தை வேறு திசைக்குத் திருப்பாலும் உள்ள ஒரு சுமுகமான நிலையும் கலந்துராயடலுக்கு ஒதுக்கப்பட்ட கால அவகாசங்களையும் மீறி அவைகள் நடைபெறும்போது, இது அவசியம் தான் என்ற புரிந்துணர்தல் இப்பெண்களிடையே அறியப்பட்டு அதற்கு உதவியாய் இருப்பதும், இப்பெண்கள் சந்திப்புக்களின் ஆரோக்கியமான அம்சமாகும்.

- தேவா

---

உடல் உழைப்பை இழிவானதாக ஆக்கி, அவற்றைச் செய்வோர் இழிசனங்கள்
என்றும் கருதப்பட்டு,
உயர்சாதியால் மத அடிப்படையிலும் திட்டமிட்டும் நசுக்கப்பட்ட மக்களிலே ஒரு பகுதியான தலித் பெண்கள்,
பெண் என்பதால் ஆணுக்கும் அடிமையாய் அதாவது அடிமையாய் வாழ்ந்த வாழும், ஆணுக்கும் கீழ் அடிமையாய் வாழும் நிலை தொடர்பாகவும்
இப்பெண்ணுகளுக்கு இன்றும் கல்வியறிவு மறுக்கப்படுவதோடு,
இந்தியாவில் கட்டாய கல்வி கொண்டு வரப்படாததற்கு முழுமுதற்காரணியாய் இருப்பது
சாதியை தக்கவைத்துக் கொள்ளும் தந்திரமே!

நன்றி - நூலகத்திட்டம்



தி டுதிப்பென்று வருவாரென்று இவன் எதிர்பார்க்கவில்லை. உம்மாவுக்கும் ஆச்சர்யம் தான் மூத்தப்பா நம்ப முடியாதவராய் கண்களை இடுக்கியபடி சாய்மனைக் கதிரையில் ஆவென்றிருந்தார். "ஆங் அஹமது ஐயா, நான் தான் கருணாரட்ண, "ஓவ் ஸ்ரேஷன் மாஸ்ரர், எப்படிங் சுகமா?" அவர் குசலம் விசாரித்-ததும், பளிச்சென்று சிரித்ததும், உறைக்க-வில்லை. அவரைக்கண்டதில் அப்படியொரு அதிர்ச்சி. "வாங்க' என்ற உம்மாவின் குரலில் அதீத பரிவும் அன்பும் நெகிழ்வதை அவதானித்தான்.

இவன் கருணாரட்ணவை விழித்தபடி நின்றான். மனிதர் எப்படி மாறிப் போய்-விட்டார். மூப்பும் மரணமும் காலங்களை வென்றபடி - தன்பாட்டிற்கு ஓடிக்கொண்டு-தானிருக்கின்றன. மூப்பும், நரையும் மேவிய கருணாரட்ணவைப் பார்க்கும் போது இனம்புரியாத அச்சம் மனசில் ஊறிப்-பரவுகின்றது. முதுமையின் ஆக்கிரமிப்பு, திண்மையுள்ள எந்தவொரு இளமையும் எதிர்த்திடவியலா கடுமவஸ்தை, இவனையும் அக்கணத்தில் தொற்றிக் கொண்டது. தன் மிருதுவான முகத்தில் சுருக்கங்கள் விழுவதான பிரேமை. கருகருவென்ற முகத்தில் தாடியும் படியப்படிய வாரிவிடப்-பட்டு, கண்ணாடி முன் நின்று அழகுபார்க்கும் கேசமும் திடீரென வெண்பஞ்சு மேகமாய் காற்றிலாடி திக்கொன்றாய் பறப்பதான உணர்வு. விரிந்த நெஞ்சின் திண்மையும், புஜங்களின் குறுகுறுப்பும் ஒடுங்கிப் போய், மூன்றாவது காலொன்றின் துணையுடன் நிதானித்து நடப்பதான தளர்வு. என்ன-வாயிற்று இவனுக்கு. இப்படிப் பேயறைந்-தவன் போல் நிற்கிறானே! உம்மாவின் பார்வையில் அச்சம் விரவியது. சுதாகரித்துக் கொண்டான் கருணாரட்ண. ஓலைப்பாயில் அமர்ந்தபடி சிங்களப் பிரதேசத்திற்கேயுரிய - பண்டங்களைப் பகுத்து - உம்மாவின் கையில் கொடுத்தபடி இருந்தார். சாபிர் தம்பி இந்தாங்க ஒங்களுக்கு' என்றபடி ஒரு பெட்டியை நீட்டினார். இவன் கலைகளை ஆராதிப்பவன் என்ற வகையில் மரத்தினால் செதுக்கப்பட்ட ஓவியமொன்றைக் கொணர்ந்திருந்தார். பல தடவை நன்றி கூறிக்கொண்டான். இருமகளிர் நீர்க்குடமேந்திச் செல்லும் அற்புதமான கலைவண்ணம். முலையின் முனைவு தொடக்கம் அதரங்களில் தேங்கி நின்ற இளஞ்சிரிப்பு வரை நுணுக்கமாகச் செதுக்கப்பட்ட, சிற்பியின் புத்திசாலித்தனத்தை மெச்சிக் கொண்டான்.

கருணாரட்ணவின் காலத்தில் தான் இவன் ஊருக்குள் சீராக ரெயில் ஓடியது. பிளாட்பாரத்தில் இவனினதும், இவனையொத்த வாண்டுகளினதும் வாழ்க்கை ஓரளவு சரிவின்றி ஓடிக் கொண்டிருந்தது. மனசுக்குள் தூர்ந்து கிடக்கும் ரெயில்வே நினைவுகள், இந்த முதியவரால் கிளறப்பட்டு விட்டது. வறுமையும், பிணியும் மிகுந்த அவலத்தனமான சில்வண்டுப் பருவத்தின் காயங்களும், அதனை மீறி நிற்கும், சமூகப்-பிணைப்பும், இந்தச் சிங்களக் கிழவரின் வருகையால் மனக்குளத்தில் எகிறிவந்து மிதக்கத் தொடங்கின.

குடும்பத்தில் இவன் இரண்டாவது மூத்தவன், தண்டச்சோறுண்டு, இந்திரியம் புடைக்க, கடலைவிற்கும் அயலூர் காரியை இழுத்துக்கொண்டுபோய், அவள் ஊரிலேயே குடும்பம் நடாத்துவதாக பின்னாளில் தெரிந்துகொண்டான். கழுதையாகப் பிறந்தாலும், மூத்ததாய் பிறக்கக் கூடாதென்பது இவனளவில் மெய்த்துப் போயிற்று. வாப்பாவுக்கோ நிரந்தர ஜீவனோபாயமில்லை. கூலிக்கென அங்குமிங்கும், ஆலாய்ப் பறந்தார். அடுக்கடுக்காக தாம்பத்யத்தில் காட்டிய அக்கறையை ஒரு தொழிலில் காட்டியிருந்தால் எட்டுப் பிள்ளைகளுக்குப் பதிலாக பெயர் சொல்லிக் கொள்ளும்படி தலைநிமிர்ந்து நின்றிருக்கலாம். அவருடைய கனவு யாழ்ப்பாணத்து பாணிச்சுருட்டும், கட்டித்-தயிரும், பழம் சோறும், அதப்பிக் கொள்ள வெற்றிலையும், தொட்டுக்கொள்ள உம்மாவுமாகக் கழிந்து போயிற்று. இதைத்தவிர வேறொரு கனவும் அவருக்குள் விரிந்திருக்காது. ஒரு நாள் கருவாக்கேணிக்கு முருங்கைக்காயும், கருவாடும் விற்கப்போனவர் கண்கள் தோண்டப்பட்டு கைகள் கட்டப்பட்டு, இரண்டு நாட்களின் பின் ஒரு சிங்களப் பொலிஸ்காரனால் கண்டெடுத்து வாசலில் கிடத்தும்வரை - அவர் கனவு இப்படித்தான் மலர்ந்திருக்கும் - வால் முறுக்கும் அந்த வயதில் காய்த்துலர்ந்த கருவாடென சைக்கிளில் ஏறிச்சென்ற வாப்பா ஒரு கொத்துக்காற்றூதி கொழுத்துக் கிடப்பதை இவன் பிரமிப்புடனும், மிகுந்த அச்சத்துடனும், பார்த்து நின்றான். உம்மா மயக்கம் போட்டு சரிந்தவள், இத்தாவிலிருந்து மூன்று நாட்களின் பின் கண் திறந்தாள். மறுநாள் இவன் தலையில் ஏறிய அப்பச்சட்டி, பிளாட்பாரத்தில் இவனைத் தள்ளிற்று.

பனிவிசிறும் காலம், முருங்கைப்பூக்கள், முற்றம் முசிய - சோளகப்பொரியாய் சொரிந்து கிடக்கும், ஆடாதோடை பதிமருந்தின் ஔடதக் கமறல் நாசியில் கமறும் வெள்ளி நிலாவின் குளிர்ந்த சிரிப்பில் ஊரே கிறங்கிக் கிடக்கும். சூரியன் கதிர்வீசா - வைகரையில் இவன் அப்பப்பெட்டியுடன் வெளியேறுவான். வாசலில் உம்மா வந்து நிற்பா. தலை குனிந்து இவனுக்கு ஒரு இச் தருகையில், இவன் கழுத்தில் அவள்



விழிநீர் கரிக்கும். மயிர்கள் சிலிர்த்து நெஞ்சு புடைக்கும். இவன் தேயும் வரை படிக்கட்டில் வெறித்து நிற்பாள். அவள் விழிகளின் ஈரமே இவன் பிடரியைக் கவ்வியபடி பின் தொடரும்.

இந்தக் கருணாரட்ண தான் அன்றைய ஸ்ரேஷன் மாஸ்ரர். ரெயில் வண்டியில் கடலை வியாபாரம் பீடி, சிகரெட், டொபி விற்போர், கஞ்சியும், டீயும் விற்போர் அப்பம், இடியப்பம், பிட்டு விற்போர் என - ஓர் உணவுச் சாலையே நடமாடித் திரியும். பத்து நிமிஷம் உதயதேவி தரித்து நிற்கும் கூவித்திரியும் பொடியன்களும், பெட்டைகளுமாக ரெயில் பெட்டிகள் திணறும், "ஆ. அப்பம் பாலப்பம், அம்மா எடுங்க, ஐயா திண்டு பார்த்து காசி தாங்க." அவரவர் தொனியில் கத்துவர். கண்ணகி கிராமத்திலிருந்து கோமதி வண்டப்பம் கொண்டு வருவாள். அவள் கூவிவிற்கும் அழகே தனியழகு. வண்டப்பம் வண்டப்பம் என அவள் கூவிக்கொண்டு வருவாள். தயிர் விற்கும் குத்துாஸ் காக்கா அவளருகில்

# ஸ்ரேஷன்

மெல்ல வந்து ஆ. என்டப்பம் என்டப்பம் என சத்தம் வைப்பார். கோமதிக்கு நெஞ்சில் தேசிப்பழ அளவில் மொட்டுவிரியத் தொடங்கிய வயது. சற்று எடுப்பாக இருப்பதால் குத்தூஸிக்கு அவளில் ஒரு கண்.

ரெயில் புறப்பட்டுச் சென்ற பின்பும் பிளாட்பாரம் கொப்பிலிருந்து தேனீக்களை கலைத்து விட்டது போல் இரைச்சலில் இருக்கும். அடுத்த ரெயில் வரும்வரை அரட்டைகள் நீளும். ஸ்ரேஷன் மாஸ்ரர் கோமதியைக் கூப்பிடுவார். "என்ன கோமதி உன்டப்பம் நல்ல இனிப்போ. இஞ்ச ஒண்டு தாருங் திண்டு பாப்பம்" பொடிவைத்து அவர் பேசுகையில் மூக்கின் கீழ் மச்சம் விழுந்த பையன்கள் களுக்கென சிரிப்பர்.

அவளுக்கோ இதுவெல்லாம் அத்துப்படி. வியாபாரத்திலும் விண்ணி. "ஓம் ஸேர் அம்மா சீனி போட்டுத்தான் சுட்டவ. இந்தாங்க. கணக்குல எழுதட்டா, கைக்காசா" என்பாளே கருணாரட்ணவின் முகத்திலிருந்த சிக்னலின் மினுமினுப்பு நூர்ந்து விடும். பின்னாளில் இந்தக் கோமதி ஊருக்குள் நெஞ்சு நிறைய குண்டுடன், சீருடையணிந்து யமஹா பைக்கில் வந்து இறங்கியபோது இவன் பிரமித்துபோய் உறைந்து போனான். அவள் முகத்தை ஏறிடப் பயமாக இருந்தது. அந்த இறுக்கம் எப்படி இவளில் தொற்றிக் கொண்டது.

அக்காலத்திற்கென ஒரு ஐஸ்வர்யம் இருந்தது. தமிழர் முஸ்லிம் எனப் பாகுபாடு காட்டாத காலம். பொடியன்களுடன் காக்காமாரும் சேர்ந்து போராடித்திரிந்த காலம். காக்காமாரின் வீடுகளில், வீரர்கள் துவக்கை சாத்திவிட்டு நித்திரை செய்த காலம். ஊருக்குள் வண்ணானும் மருத்துவிச்சியும் குடில்போட்டு சேவை புரிந்த காலம். நாசிவன்தீவிலும், கிரான் குளத்திலும் - காவடியும், திருவிழாவும் பார்க்கச் சென்ற காக்கமார், கோயில் முற்றத்தில் உறங்கியெழுந்து, வெயிலேறிச் சரிய - சாவகாசமாக வீடேகிய காலமது.

அந்தக் காலத்தை சபித்த முனிவன் யாரென யோசிக்கையில் மர்மங்கள் விரிகின்றன. அதைச் சிறைப்பிடித்த கொடியவன் மூட்டிய தீயில் எரிந்து போன மானசீக உறவுகளின் பிரலாபம் காற்றில் அலைவதான பிரேமை இவனை நெடுநாளாகவே தொற்றிக் கொண்டு வதைக்கிறது. சரித்திரங்களும், வரலாறுகளும், இவன் வளர்ச்சியுடன் திடீரென முற்றுப்பெற்றதைப் போல் சகலதும் ஒரு திருப்பத்தில் வந்து ஸ்தம்பித்து விட்டது.

துயரங்களின் ஒட்டுமொத்த சரிதங்களை சுமந்தபடி - வரலாற்று நதி தன்பாட்டில் ஓடிக் கொண்டிருக்கின்றது. இவனுடன் ரெயில்வேயில், விளையாடி வியாபாரம் செய்தவர்களை ஆயுதம் தூக்க வைத்ததும் இந்த வரலாறுதான். அந்த ஆயுதங்களால் அவர்களுடன் பிரியமான மனதுடன் உறவாடியவர்களைத் துன்புறுத்தும்படி தூண்டிய வரலாறு எது. யோசிக்கையில் எல்லாமே குழம்பிக் கொண்டு வந்தது இவனுக்கு. நினைவுகள் நெக்குருகி மயங்குகின்றன.

கருணாரட்ண மக்கிப்போன கூரையை வெறித்தபடி மூத்தப்பாவின் சளப்பலில் ஐக்கியமாகியிருந்தார். உம்மா காய்ச்சி வைத்த குரக்கன் கூழ் அவர் முன் ஆறிப்போய் உறைந்திருந்தது. தம்பி ஸ்ரேஷன்வரை போய்வருமா" என்றார். கூழைக்குடியுங்கோ சேர் போவம் என்று விட்டு இவன் உடைமாற்றத் தொடங்கினான்.

ஜே ஜேவென சனங்கள் வழிந்த ரெயில்வே ஸ்ரேஷன் ஆவென்று வெறிச்சோடிக் கிடந்தது. ஒன்றிரெண்டு நாய்கள் பிளாட்பாரத்தில் படுத்துக் கிடந்தன. இவர்களின் சிலமங்கண்டு ஒரு நொண்டி நாயைத் தவிர, மற்றெல்லாம் சடுதியாக எழுந்து முறைத்து விட்டு அப்பால் சென்றன. மாடுகளின் தங்குமிடமாய் 'கென்ரீன்' இருந்தது. எந்தச் சாதனங்களுமற்று 'சிக்னல்றூம்' வயர்களை மட்டும் துருத்தியபடி பரிதாபமாகத் தெரிந்தது. ஸ்ரேஷன் மாஸ்டரின் அறையிலிருந்த தகவல் கருவிகளும் டெலிபோனும் டிக்கற் ட்றக்கும் காணாமல் போயிருந்தன. மொத்தத்தில் தண்டவாளங்களற்ற ரெயில்பாதையின் தடம் மட்டும் வியாபித்திருந்தது.

பயணிகள் தங்குமிடத்தில் ஒரு பைத்தியக்காரனின் சொத்துக்கள் இறைந்து கிடந்தன. அவன் எந்நேரமும் திரும்பி வரலாம் என்னுமாப்போல் கதவு உடைக்கப்பட்டு படுக்கையாகக் கிடந்தன. ஜன்னல்கள் மிகுந்த சிரமத்துடன் கழற்றப்பட்டிருந்தன. மேற்கூரையின் முன்

நன்றி - நூலகத்திட்டம்



பகுதி பெயர்த்தெடுக்கப்பட்டிருந்தது. நீர்த்தாங்கி வெடிப்பு விழ ஆரம்பித்து விட்டது. ஸ்ரோர் ரூமிலிருந்து இரும்புத்-தளபாடங்கள், காகிதாதிகள், எதுவுமின்றி ஆவென்று கிடந்தது. கருணாரட்ண ஒரு-வார்த்தையும் பேசவில்லை. அவர் முகம் இறுகிப் போயிருந்தது. நெஞ்சின்வலி, முகத்தில் விழுந்து அவர் விழிகளில் இறங்கி கோடிடுவதை இவன் அவதானித்தான். அந்தக்காலத்து ஸ்ரேஷனில் நின்றபடி - ஏகாந்தமாய், மன உளைச்சலுடன் சுற்று-முற்றும் பார்த்தபடி நின்றான். ஸ்ரேஷனின் முன் அடைத்து நின்ற வேப்ப மரத்தில் வௌவாக் கூடுகள் தொங்கின. காற்றிலாடும் அக்கூடுகளின் நர்த்தனம் இவனுக்கு மிகுந்த அச்சத்தைத் தந்தது. பழுதுபார்க்கவென தரித்து நின்ற ரெயில் பெட்டிகளிற் சிலதில் இராணுவம் முகாமிட்டிருந்தது. அந்தப் பெட்டிகள் நிற்கும் தண்டவாளங்கள் மட்டுமே காப்பாற்றப்பட்டிருந்தன.

நீர்த்தாங்கியின் வலதுபுறத்தில் ஒரு காட்டு மாமரம் கொத்துக் கொத்தாய் காய்த்துக் கிடக்கும் அக்காலம். இப்போது மனித சஞ்சாரமற்று பட்டு விடுவேன் என பயங்காட்டியபடி - உம்மென்றிருந்தது. வாண்டுப்பருவத்தில் கள்ளன் பொலிஸ் விளையாட தோப்புக்குள் இதுவொன்றுதான் தோதான மரம். புளிமாங்காயும் உப்புக்கல்லும் சேர்த்து நாவூறத்தின்ற பொன்னந்திகள் இவன் முன் பளிச்சிட்டன. நா நீரில் மிதந்தது. பிட்டுக்காரி சரஸா மரம் ஏறுவதில் வலுகெட்டி. சரசரவென ஏறுவாள். கட்டைப் பாவாடையும், சட்டையும் அணிந்து வரும் அவளில், சிக்னல் ராஹலாமிக்கு ஒரு ஈர்ப்பு இருந்தது. இவளை குவார்ட்டசுக்கு கூப்பிடுவதும், கதைப்பதுமாக இருந்தார். அவர் ஏன் சதா பிட்டு தின்னுறார். உடம்பு கட்டியாயிடுமே என்று குத்தூஸ் காக்கா நக்கலடிப்பார். சரஸா கொப்பிலிருந்தபடி கந்துகளை பலங்கொண்ட மட்டும் உசுப்புவாள். மாங்காய் பொல பொலவென உதிர்ந்து சிதறும். அண்ணாந்தபடி இவன் கத்துவான். ஏய் சரஸா உன்ட அதுதெரியுதுடி மூடிக்க. இவன் தலையை குறிவைத்து அவள் எறியும் மாம்பிஞ்சு மட்டும் அதிகப்புளிப்பில்லாமல் இருக்கும். "சீ வளிசல் உள்ளுக்க எல்லாம் போட்டிருக்கன்டா, இனி ஒரு நாய்க்கும் பழம் பறிச்சித் தரமாட்டான். கொல்லென்ற சிரிப்பினிடையேயும் அவள் பொய்கோபத்தின் சௌந்தர்ய அழகுடனும், எத்தனை அந்திகள் போயிற்று.

கருணாரட்ண மலசலகூடம் வரை எட்டிப்பார்த்து விட்டு வந்தார். நீர்தாங்கியின் நிலவறை உடைக்கப்பட்டு, அதற்குள் பொருத்தியிருந்த பம்செட்டை, இராணுவம் எடுத்துச் சென்ற தகவலை இவன் தெரியப்-படுத்தினான். மோட்டார் ரூமில் பெண்களின் உள்ளாடையும், உடைந்த கண்ணாடி வளையல்களும் சிதறிக் கிடந்தன. சுவர் முசிய குருதியின் சீந்தல். இவனுக்கு சர்வாங்கமும் ஒடுங்கிற்று. கருணாரட்ணவோ, தான் அவமானப்பட்டு சிறுத்துவிட்ட குற்ற உணர்வில் திணறிக் கொண்டிருந்தார். அழியாத சப்பாத்துத் தடங்களில் அவர் விழிகள் கிடந்து துடித்தன. இவன் இதுவெல்லாம் சகஜம் என்பதாய் சுவர்களை அலசத் தொடங்கினான்.

கரித்துண்டும், கள்ளிப்பாலும் கொண்டு சுவர்களில் கிறுக்கிய கிறுக்கல்கள் இன்னும் மனசின் ஆழத்தில் கோணல் பக்கங்களாக உறைந்திருக்கின்றன. இவன் பிரமிப்புடன் அந்த கிறுக்கல்களைப் பார்த்தபடி நடந்தான். "சரசு ராஹலாமி காதல் ஒழிக", "கமலினி, அக்பர்" பாலப்பமும் கடலைப் பருப்பும் தொடர்பை நிறுத்து". "ஆயிஷா நீ நைஸா ரயிலப்போல கைரிய்யா நீ மரத்துப்பக்கம் வாரியா"

இவனுக்கு சிரிப்பு முட்டிக்கொண்டு வந்தது. இவனும் புஹாரியும் சேர்ந்து எழுதிய சில கிறுக்கல்களும் சுவரில் அப்படியே, சற்றுநிறம் மங்கி அழியாமல் துலங்கின. தனது பெயர் முதல் தடவையாக பத்திரிகையில் வந்ததைப்போன்ற ஆனந்தப் பரவசம் பால்யத்தின் கிறுக்கல்களில் புளகித்துப் போனான்.

கென்ரீன் நடாத்திய சரளா அக்காவையும் ஸ்ரேஷன் மாஸ்ரரையும் இணைந்து இவன் எழுதிய வாசகங்களும் புறச்சுவரில் நிறம் மங்கித் தெரிந்தன. "குறும்பட்டியின் வலிமையை மனதார மெச்சிக் கொண்டான். மாம்பிஞ்சினால் அவை அழிக்கப்பட்டாலும் கூர்ந்து பார்க்கும் ஒருவரால் அதை முழுமையாகப் படித்து விடலாம். கருணாரட்னா இப்போது அதைப்பார்த்து விடுவாரோ என்ற சங்கடம் திடீரென இவனைக் கவ்விக் கொண்டது.

இவன் கடைசியாக ரெயிலேறிய நாள் நினைவின் நுனியில் துறுத்தியது. 83ம் ஆண்டின் துவக்கத்தில் கொழும்புக்கு போகவென சாச்சாவுடன் இந்த ஸ்ரேசனுக்கு வந்தது தான் நினைவில் நிற்கிறது. அப்போது ஓட்டோக்கள் அதிகம் ஊருக்குள் வாராத காலம். ஒன்றிரண்டு வாடகைக்கார்கள். ரெயில்வே வளாகத்தில் தவமிருக்கும் இவன் கடைசியாக ஏறிய ரஜனி ரயிலின் சனக் கும்பலும், சிக்குபுக்கும் இன்னும் மூச்சில் முட்டுகிறது. அப்போது கருணாரட்ண இருபது வருஷங்களுக்குப் பின் இந்தக் கிராமத்தை விட்டும் ஒய்வு பெற்றுச் சென்று விட்டார். இவனும் வியாபாரத்திற்கு முழுக்குப் போட்டு விட்டு படிப்பதில் ஆர்வமாகிய வயது.

வெலிக்கந்தையில் ரயிலுக்கு குண்டுவைத்து, ஏதுமறியா சனங்களின் இனிமையான கனவுகளையும், உயிர்களையும் தகர்த்த போது இவனால் தொடர்ந்தும் ரயிலைப் பார்க்க முடியவில்லை.

பின்னர் காகித ஆலைக்கருகில் ஓடிவந்த ரெயிலை மரம் தறித்துத் தடுத்து ஏதுமறியா தமிழர்களை இந்தியப்படை சுட்டுப் பொசுக்கிய போது, அந்தப்புகையின் கமறலில் ஒருவாரம் ஆகாரம் ஏதுமின்றி இவன் மயங்கிக் கிடந்ததும் இந்த ரெயிலால் தான். அதற்குப் பின் ரெயில்களின் சிக்குபுக்கு சங்கீதத்தை வெறுக்கத் தொடங்கிற்று மனது. இதற்குபின் ஊருக்குள் ரெயிலே ஓடவில்லை. ஸ்ரேஷனை மூடிவிட்டு ஊழியர்கள் தத்தம் கிராமங்களுக்குச் சென்று விட்டனர். அவர்களின் படி மாதாமாதம் போய்க்-கொண்டுதானிருந்தது.

இந்த ரெயில்வேயின் ஒவ்வொரு தூணிலும், சுவரிலும் இளமைக்காலத்து இனிய நினைவுகள் உறிஞ்சப்பட்டு, உறைந்திருக்கின்றன. முடிவுறாத் துயரங்களும் இவனளவில் பொய்த்துப் போகவில்லை. சிந்தனையின் இடைவிடாத சங்கிலிகளை கோர்த்தபடி காலங்கள் கடந்து விட்டன. எதிலும் சிக்கிக் கொள்ளாமல் ஒவ்வொரு ஸ்தலத்திலும் உராய்ந்தபடி நினைவுப் பெருவெளியில் கணீரென்ற ஓசையெழுப்பியபடி அவை நீள்கின்றன. இறைக்க இறைக்க ஊறும் எண்ணெய்க்குதமென அதன் ஊற்றுக்கள் கனக்கிறது. ஊற்றுக்களின் அடர்த்தியும் வீச்சமும் அச்சம் தரும் வீர்யத்துடன் பீறிட்டெழுகின்றன. இந்த வேட்கை இனி ஓய்வதற்கில்லை.

தம்பி போவமா என்ற கருணாரட்ணவின் குரல் தேய்ந்திருந்தது. தளர்வாக நடைபோடும் அவரின் நிழலுக்கப்பால் தன் கால்களை எட்டி வைத்து நடக்கத் தொடங்கினான். மனசில் பலநூறு ரயில்களின் சிக்குபுக்கு இடைவிடாது ஒலித்துக் கொண்டிருந்தன.

# இந்தியாவின் வியட்நாம்

இலங்கைப் பிரச்சினையில் இந்தியாவின் (அரசியல்) தலையீடு பல பரிமாணங்களோடும், பரிணாமங்களோடும் அவ்வப்போது ஏற்பட்டு வருவது நமக்குத் தெரிந்தது தானே. கருணாநிதியின் பிறந்த நாள் பேச்சு - அது தான் அந்த செக்கோஸ்லாவாக்கியாப் பாணிப் பிரிவினை - பலத்த எதிர்ப்பலைகளை தமிழகத்தில் உண்டு பண்ணியிருப்பதை இங்கு கிடைக்கும் சஞ்சிகைகளைக் கொண்டு அறிய முடிகிறது. இந்தியா டுடே அட்டைப்படம் போட்டு சிறப்புச் செய்தி வெளியிட்டிருந்தது. வாசந்தியும் காட்ட சாட்டமாக எழுதியிருக்கிறார். எல்லாம் நீ வாசித்திருப்பாய். அதெல்லாம் அரசியலுக்குள் அரசியல். கதைக்குள் கதை மாதிரி!

இந்த இந்தியத் தலையீடு என்றவுடன் எமக்கு உடனே இந்திய அமைதி காக்கும் படை - (IPKF) தான் ஞாபகத்துக்கு வரும். அதிலும் எனக்கு "Yes I.D no problem, no I.D yes problem" என்ற பிரபலமான கூற்றும், எங்கள் வீட்டு வீதியால் ரோந்து வரும் சில அழகான ஜவானிகளும், திடீரென்று பல இடங்களில் முளைத்த ஜப்பான் மின்சாதனங்கள் விற்கும் கடைகளும் தான் ஞாபகத்திற்கு வரும். ஆனால் உனக்கு அவர்கள் வல்லுறவுப் படுத்திய பெண்களும், அவர்களால் அநியாயமாகக் கொல்லப்பட்ட இளைஞர்களும், அவர்களோடு கூட்டாளித்தனம் பண்ணிய உள்ளூர்ப் போராளிகளின் அட்டகாசங்களும் என ஒரு துன்பியல் வரலாறு ஞாபகத்திற்கு வரும். அவர்களையெல்லாம் கண்டால் நீ காறியுமிழ்வாய். எனது பிரதேசம் இந்தியப் படையின் அடாவடித்தனங்கள் குறைந்த ஓர் ஊராக இருந்ததென்று அது பற்றி கதை வருகிற போது அடிக்கடி நான் சொல்லிக் கொள்வதுண்டு. எனக்கு நினைவிலிருக்கிற ஒரு பெரிய சம்பவம் எதுவென்றால் ஒரு வானொலிப் பெட்டியின் விலை இரண்டு கடைகளுக்கிடையே வித்தியாசப்பட்டதால் ஆத்திரமுற்ற ஓர் அமைதி காத்த வீரன் நகர வீதியில் கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் செய்து பல பேரைக் கொன்றது தான்.

இந்த ஞாபகங்கள் ஒரு புறமிருக்க இந்தியப்படை குறித்த பேச்சு மீண்டும் எழுவதும் விழுவதுமாக இருக்கிறது. அப்போது பலமாக எதிர்த்த பௌத்த அமைப்புக்கள் கூட இந்தியப் படையை வரவேற்கத் துணிந்திருப்பது சர்வதேச புகழ் பெற்ற அப்படையினரின் அடாவடித்தனங்களால்தான். பௌத்த அமைப்புக்களுக்கு இப்போது, வடகிழக்கிலுள்ள மக்களுக்கு நல்ல அடிபோடுகிற இராணுவந்தான் தேவை! இங்கு இப்படியிருக்க அங்கு பல இராணுவ அதிகாரிகள், ராஜதந்திரிகள் தங்கள் பழைய ஞாபகங்களை பேட்டிகளாக, கட்டுரைகளாக மீட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதில் ஒரு கட்டுரை இந்தியாவின் வியட்நாம் என்ற தலைப்பிலானது. John Taylor என்ற கேர்னல் எழுதியிருக்கிறார். அவரை One of the first officers assigned to IPKF என அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள்.

அநேக விமர்சகர்கள் இலங்கைத் தீவில் இந்தியப் படையின் பங்களிப்புப் பற்றிக் கூறும் போது அதனை இந்தியாவின் வியட்நாம் என்று அடையாளமிடுகிறார்கள். புலிகளின் பிரச்சாரம் ஊட்டப்பட்ட இலங்கைத் தமிழர்கள் உலகின் நான்காவது பெரிய இராணுவத்தை மூக்குடைபடச் செய்தார்கள் என்று குறிப்பிடும் இவர் உண்மைக்குப் புறம்பாக வேறெதுவும் இருக்க முடியாது என்ற சிறு தலைப்பில் சில விடயங்களைச் சொல்கிறார். அவற்றில் சிலதை வாசித்துப் பார்.

IPKF வெற்றிகரமாகவே புலித்தலைமைகளின் செயற்பாடுகளை நிறுத்தியதோடு, யாழ் தீபகற்பத்தில் அவர்களின் ஸ்திரத் தன்மையையும் குலைத்தது. இதனால் அவர்கள் அங்குள்ள காடுகளுக்குச் செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். புலிகள் யாழ்ப்பாணத்தை தங்கள் கட்டுக்குள் கொண்டு வந்த பின்னர் இப்போது தான் முதற்தடவையாக நாங்கள் ஆனையிறவுப் பாதையைத் திறந்தோம். (வடக்கிலிருந்த ஒரே சிங்களவர் ஆனையிறவு முகாமிலிருந்த இராணுவத்தினர் தான் என முன்னர் ஒரு இடத்தில் இவர் குறிப்பிடுகிறார்) நீண்ட காலத்தின் பின்னர் கிழக்கு, தெற்கு மேற்கிலிருந்தெல்லாம் பொருட்கள் வர அப்பாதை திறப்பு ஏதுவாக இருந்தது.

இருந்த போதும் IPKF நடவடிக்கைகள் பூரண வெற்றியாக அமையவில்லை. அவர்களால் பல்வேறு தமிழ்க் குழுக்களை ஒன்றிணைக்க முடியவில்லை. அதற்கான பிரதான காரணம் புலிகளின் சமரசத் தன்மையற்ற போக்கே. அவர்கள் கிடைத்தால் எல்லாம் இல்லாவிட்டால் ஒன்றுமில்லை என்ற போக்கில் இருந்தார்கள்.

இராணுவம் தொடர்பான அறிவுடைய எவரும், இலங்கை போன்ற நாட்டில் ஓர் இராணுவம் வெற்றி பெற வேண்டுமானால் அவர்களிடம் மிக நுட்பமான புலனாய்வுத் திறனும், திட்டமிடல், செயற்பாட்டுச் சுதந்திரமும் இருக்க வேண்டும் என்று சொல்லுவர். இதெல்லாம் எங்களிடம் பலவீனமானதாகவே இருந்தது. நாங்கள் மேற்கொள்ளும் எந்த இராணுவ நடவடிக்கையும் இதனால் பலவீனப்பட்டே போயுள்ளது. இதை அண்மைய கார்கில் கமிட்டி அறிக்கை கூடச் சுட்டிக் காட்டியுள்ளது.:

ஆயுத அமைப்புகள் மீது புலிகள் கொண்டிருந்த ஆதிக்கத்தை நாங்கள் அறிந்திருந்தோம் தான். ஆனால் அவர்களின் புதுப் புதுத் தந்திரோபாயங்கள், தகவலாதாரத் திறன், மக்களிடையே அவர்களுக்கிருந்த செல்வாக்கு இவற்றை விட முக்கியமாக அவர்களின் திறன் மிகு புலனாய்வுத் தொடர்பலைகள் என்பவை எங்களுக்குத் தெரியாத விடயங்களாகவே இருந்தன.

இவற்றிற்கு இரண்டு சிறிய உதாரணங்கள் தருகிறேன். எப்போதெல்லாம் ஓர் இராணுவக் குழு ரோந்துக்காக முகாமிலிருந்து புறப்படுகிறதோ அப்போது அருகிலுள்ள கோயில் அல்லது தேவாலயத்தில் மணி ஒலிக்கத் தொடங்கும். அந்த மணியின் எண்ணிக்கை அந்த ரோந்துக் குழுவில் எத்தனை பேர் உள்ளார்கள் என்பதைச் சுட்டி நிற்கும். உதாரணமாக குழுவில் ஆறு இராணுவத்தினர் இருந்தார்களென்றால் மணி ஆறு முறை அடித்து ஓயும். இதெல்லாவற்றையும் பின்னர் தான் நாங்கள் தெரிந்து கொண்டோம்:

ரோந்து செல்லும் இராணுவம் பற்றி தகவல் சொல்ல அவர்கள் இன்னொரு முறையையும் கையாண்டார்கள். ரோந்து செல்லும் வழியில் ஒரு சிறுவனோ அல்லது சிறுமியோ அந்த வீதியின் எல்லை வரை ஓடிச் செல்வர். பிறகு அந்த எல்லையில் நிற்கிற ஒருவர் இராணுவம் ரோந்து வருகிறதென்று புரிந்து கொண்டு அங்கிருந்து சைக்கிளில் இன்னொரு எல்லை வரை போவார். அங்கிருந்து இன்னொருவரென மாறி மாறிக் கடைசியில் தகவல் உரிய இடத்திற்குப் போய்ச் சேர்ந்துவிடும். இப்படிப் பரிமாறுபவர்களுக்கு தங்கள் தங்கள் எல்லை மட்டும் தான் தெரிந்திருக்கும். அதன் முடிவிடம் எங்கேயென்பது அவர்களில் யாருக்கும் தெரிந்திருக்காது.

இப்படிச் சில விடயங்களைச் சொல்லும் அவர் இந்திய உளவுப் பிரிவு பற்றியும் சொல்கிறார். றோவை ராஜீவ் காந்தி மிகவும் நம்பிக் கொண்டிருந்தார். அவர்கள் சொல்வதெல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டிருந்தார். எந்தளவுக்கென்றால் அவர்கள் அவரிடம் இன்னும் 72 மணித்தியாலயத்திற்குள் பிரபாகரனைப் பிடித்து விடுவோம் என்று சொல்லியிருந்தார்களாம். இதையெல்லாம் குறிப்பிடுகிற கட்டுரையாளர் இதனை புலனாய்வுத் துறைப் பலவீனம் என்கிறார். அத்துடன் அவர் இலங்கை போன்ற நாட்டில் தலையீடு செய்யும் ஒரு நாடு ஆகக் குறைந்தது ஒரு 'மினி சுப்பர் பவராக' - அணுவாயுத வல்லமையோடு, அரசியல் பொருளாதார வல்லமையோடு இருக்க வேண்டும். இதெல்லாம் அப்போது இந்தியாவிடம் பூரணம் பெற்றதாக இருக்கவில்லை என்கிறார்.

இன்னொரு இடத்தில் எங்களிடம் ஒழுங்கான திட்ட வரைபடங்களோ ஏன் ஒழுங்கான சமையல் பாத்திரங்களோ இருக்கவில்லை என்று மிகவும் வருத்தப்படுகிறார். அவற்றைத் தான் இங்கு ஒவ்வொருவரின் வீடுகளிலிருந்தும் புடுங்கி எடுத்தார்களே என்கிறாயா?

அது சரி, அவரின் இந்தக் கட்டுரையின் தொனி விழுந்தும் மீசையில் மண் ஒட்டாத கதையாக இருந்தாலும், அவர்கள் அதாவது இந்திய இராணுவம் மீண்டும் ஒரு சந்தர்ப்பத்திற்காக காத்துக் கிடக்கிற மாதிரியும் தெரிகிறது. அப்போது இன்ன இன்ன விடயங்கள் இல்லை. இப்போது அவை இருக்கிறது. அணு வல்லமை, அரசியல் வல்லமை பெற்று விட்டோம். இப்போது அனுப்பிப் பாருங்கள் காட்டுகிறோம் எங்கள் வேலையை என்கிறார்களா?

அமைதி காக்கிற படைக்கு இதெல்லாம் எதற்கு என்கிறாயா? அது சரி தான். அப்போதும் அவர்கள் IPKF ஆகத் தான் வருவார்கள். ஆனால் அதற்கு அர்த்தம் வேறு மாதிரி இருக்கும். இந்த அர்த்தம் அவர்கள் மேற்கூறிய எந்த அம்சங்களும் அற்று வந்த போதே இருந்தது. அவற்றுடன் வந்து விட்டால் என்னாவது? அதுதான் எல்லோரும் சொன்னார்களே. Indian Peace Killing Force என்று. அதைத் தான் சொல்கிறேன்.

நன்றி - நூலகத்திட்டம்



உலகும் அதனது வரலாறும் அந்நியப்பட்ட நிலையில் பெண்களும். இப்படி நோக்குவது சரியா என்பதற்கு அப்பால் வரலாற்றில் பெண்களது உணர்வுகள் மதிக்கப்படுவதற்கோ வெளியிடப்படுவதற்கோ அங்கீகரிக்கப்படாத சூழ்நிலையே இங்கு நிலவுகிறது. இந்நிலையில் ஆண்டாண்டு காலமாக திட்டமிட்டே மறைக்கப்பட்டு வந்த, வரும் பெண்களின் உணர்வுகள் யாருக்கும் தெரியாமலேயே சவக்குழியில் இடப்படுதலுடன் ஆண்களினால் சொல்லப்படும் உணர்வு நிலைகளே பெண்களுடைய உணர்வாக நிறுவும் போக்கே தொடர்ந்து வருகிறது. உண்மையிலேயே பெண்ணுடைய உணர்வும் இதுவே என பெண்களே நம்பும் நிலைக்கும் இந்நிறுவல்கள் இட்டு வந்துள்ளன.

இவற்றிற்கு அப்பால் பல பெண்கள் பெரும் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் தங்களை, தங்களது உணர்வுகளை வெளிக் கொணர்வதற்கு முயன்றார்கள். இப்போதும் முயல்கிறார்கள். அந்த வகையில் பெண் என்ற நிலையில் இருந்து போராளிகள் என்ற மாற்றத்திற்கு உட்பட்டிருக்கும் பெண்கள் பற்றியும், அவர்களது உணர்வுகள் பற்றியும் அவர்களின் கவிதைகள் உங்களோடு பேசுகின்றன.

அண்மையில் வெளியிடப்பட்டிருக்கும் ஆனையிறவு என்ற கவிதைத் தொகுதியில் அவர்கள் கவிதை மொழியில் பேசுகின்றார்கள். இந்தத் தொகுதியில் வெளிவந்திருக்கும் பெண்களின் கவிதைகள் எவ்வளவு தூரம் பெண் என்ற உணர்வு நிலையில் இருந்து எழுதப்பட்டுள்ளன என்பதனை வாசகர்களாகிய உங்கள் தீர்மானித்துக்கு விட்டுவிடுகிறோம்.

பொதுவாகவே பெண்கள் மீது சுமத்தப்பட்டுள்ள இரட்டைச் சுமைக்கு மேலாக அவர்கள் மீது திணிக்கப்பட்டுள்ள ஒரு ஆக்கிரமிப்பு யுத்தம். அந்த யுத்தச் சூழலில் பெண்ணும் அதன் போக்கில் போராளிப் பெண்ணுமாக அவர்களின் மன உணர்வுகள். ஒரு ஆக்கிரமிப்பு, இன அழிப்பு யுத்தத்தில் சிக்கி இருக்கும் அவர்களுடைய நிலை, அதே போல் ஆக்கிரமிப்பின் சின்னமான ஒரு பலமான இராணுவ தளத்தினை அழித்த போராளிகள், அதில் மரணித்தவர்களின் உணர்வுகள், அதிலிருந்து உயிருடன் மீண்டவர்கள், இன்னும் ஒரு சராசரி தமிழ் பெண்ணின் உணர்வுகள் எனப் பல தளங்களில் உருவாகியிருக்கும் கவிதைகளை நீங்கள் இத்தொகுப்பில் காணலாம்.

இதில் வரும் கவிதைகள் வேறு எந்த நோக்கத்திற்காகவும் இங்கு பிரசுரிக்கப்படவில்லை. எமது நோக்கம் பெண்களின் வெளிப்பாட்டு சுதந்திரத்தினை அங்கீகரிக்கும் அதே வேளை அதனை வளர்த்தெடுக்கவும் முயல்வதே.

ஆ.ர்

## எழுதாத கவிதை

எழுதுங்களேன்
நான் எழுதாது செல்லும்
என் கவிதையை
எழுதுங்களேன்!

ஏராளம்

ஏராளம் எண்ணங்களை
எழுத
எழுந்து வர முடியவில்லை.
எல்லையில் என் துப்பாக்கி
எழுந்து நிற்பதால்
எழுந்து வர என்னால் முடியவில்லை.
எனவே
எழுதாத என் கவிதையை
எழுதுங்களேன்!

சீறும் துப்பாக்கியின் பின்னால்
என் உடல்
சின்ன பின்னப்பட்டுப் போகலாம்
ஆனால்,
என் உணர்வுகள் சிதையாது.
உங்களைச் சிந்திக்க வைக்கும்.

அப்போது
எழுதாத என் கவிதையை
எழுதுங்களேன்.

மீட்கப்பட்ட எம் மண்ணில்
எங்கள் கல்றைகள் கட்டப்பட்டால்
அவை உங்கள்
கண்ணீர் அஞ்சலிக்காகவோ
அன்றேல் மலர்வளைய
மரியாதைக்காக்கவோ அல்ல.
எம்மண்ணின்
மறுவாழ்வுக்கு
உங்கள் மனவுறுதி
மகுடம் சூட்ட வேண்டும்
என்பதற்காகவே.

எனவே
எழுதாத
என் கவிதையை
எழுதுங்களேன்.

அர்த்தமுள்ள
என் மரணத்தின் பின்
அங்கீகரிக்கப்பட்ட
தமிழீழத்தில்
நிச்சயம் நீங்கள்
உலா வருவீர்கள்.

அப்போ
எழுதாத என் கவிதை
உங்கள் முன்
எழுந்து நிற்கும்.
என்னைத் தெரிந்தவர்கள்
புரிந்தவர்கள்
அரவணைத்தவர்கள்
அன்பு காட்டியவர்கள்
அத்தனை பேரும்
எழுதாது எழுந்து நிற்கும்
என் கவிதைக்குள்
பாருங்கள்.

அங்கே நான் மட்டுமல்ல
என்னுடன்
அத்தனை மாவீரர்களும்
சந்தோசமாய்
உங்களைப் பார்த்து
புன்னகை பூப்போம்.

**கப்டன் வானதி**

ஆனையிறவு இராணுவ முகாம் தாக்குதலில் 15.07.91ல் வீரச்சாவடைந்த கப்டன் வானதி எழுதிய இறுதிக்கவிதை இது.

## அசுரத்தின் அழிவு

ஒரு நிமிடம் கூடத் தாமதிக்காது
வந்து சேர்ந்தது அந்தச் செய்தி!
அந்தக் கணத்தில் அது ஒரு
பேரற்புதமாயிற்று எனக்குள்!
இருள் ஒழுகிப்போக
ஒளி என்னுள் முளைந்தது!
ஓராயிரம் மணிகளின் ஓசைகள்
துல்லியமாய் எனக்குள் கேட்டன!

கரடு முரடான
நினைக்கின்ற வேளைகளில்
நெஞ்சகத்தை எரிகின்ற
நினைவுக்கட்டிகள் சுக்குநூறாகின!

முட்களில் நடந்த நாட்களின் காயங்கள்
ஆறிப்போயின!

இறந்தகாலத்தில் ஏறிமிதித்த
தீயின் சுவாலை அணைந்தது!

அமைதியான காற்றில்
இனிமை பிறந்து ஒலித்தது!
பூமிக்கடியில் புதைக்கப்பட்ட என்
உறவுகளின் குரல் மேலெழுந்தது!
அன்றைக்கு புதையுண்டது மனிதம்:
இன்றைக்கு சிதைவுற்றது அசுரம்!

வெட்டப்பட்டு விழுத்தப்பட்ட மரக்குற்றிபோல
அது ஜடமாய்க் கிடக்கிறது!
பிரமாண்டமான அதன் முகத்தில்
அழுகிய சதைகளின் நாற்றம்!

காற்று சுற்றிச் சுழன்று
முகத்தினருகே முத்தமிட வருகிறது!
கூட்டிலிருந்து விழுந்த சிறுகுஞ்சுக்குருவியாய்
மனது தவித்தது!
அசுரம் அழிந்தென்ற உண்மையில்
இதயம் இறுமாந்தது!

சூரியதேவனைப் பார்த்து கரங்கள் குவிந்தன!
சூரியதேவன் சுட்டுகின்ற திசையில்
பயணிப்பதற்காக பாதங்கள் எழுந்தன!

**ஆதிலட்சுமி சிவகுமார்**

## கால இடைவெளிக்குள்

நிலவெறித்த பொழுதிலும்
நிலவொழித்த இருளிலும்
வெண்துகள் குவியல்கள்
சிரித்திருந்த தாய் நிலம்,
கரிப்பு மணிகளின்
தூய விளைநிலம்:
பகைவன் குகையாய்
பரந்து கொண்டது.

வாசலில் விரித்திருந்தது
நிலம் விழுங்கி
எம் உயிர்ப்பூக்கள் பல விழுங்கி
பசித்திருந்தது.

கவிதைகளாய் வானதி: கஸ்தூரியும்
கனவுகளாய் தமயந்தி: திலகாவும்
நூற்றுக்கணக்கில்
நெருப்பணிந்த நிலவுகளும்
உயிர்களைந்து போனபின்னும்
எமது நிலம் எமக்கில்லை.

ஆனையிறவு
ஆசையாத இறவாம்
சொல்லியது சிங்களம்.
இந்த விசப்பற்களின்
துணிவில்தான்
'சூரியக்கதிர்' நாகம்
சுழன்றாடியது
விசமூட்டி விசமூட்டி
உறவுகளை புதைத்து.
'ஓயாத அலை மூன்றாய்'
ஊழி எழுந்தது.
தலைவன் அசைவில்
விசப்பல் எகிறி
வீழ்ந்துகுலைந்தது:
எம் வாசலும் திறந்தது
ஆயிரமாயிரம் வீரரின் மூச்சுக்
காற்றினில் அசையுது
அழகாய் எம் கொடி!

**தமிழவள**

## விடுதலைச் சிறகுகளின் காற்றில்....

'அலை' உரசிய வீச்சில்
உயிர்த்தது
உணர்வின் உணர்கொம்புகள்.

கனத்துக் கிடக்கும் அவர்களின்
இதய மையத்துள்
தாழமுக்கங்கள்
கணத்துக்கு கணம் வேறாகின.

அலையுயர்த்திய நுனியில் பாய்ந்த படகுகள்
கடல்களைத் தாண்டி
கரையேறிய விநாடியில்
நிகழ்வுலகை வழிகளிற்குள் இடுக்கி
அவர்கள் தேடிய தடயங்கள்
புலப்படாத நிஜங்களாகின.....

வாழ்வுப் படிம அத்திவாரங்களின்
வேர்களை
கறையான்கள் அரித்திருந்தன
எஞ்சியவைகளில் அவர்களின் ரேகைகள்....

உருவேறிய மனங்களின்
தாண்டவங்கள் அரங்கேறத்
துடித்தன.

உப்புக் காற்றைத்தழுவிய சாலை
ஆக்கிரமிப்புச் சின்னங்களை தாங்கிய பூமி
உலகறிய கூவும் பிரச்சார விளைநிலம்.

வெறித்தனத்தின் உச்சம் சிதற வழித்திருந்தது....

வரைபட மையங்களில்
உப்புமேனியின் உயிர் வாழ்விற்காய்
எல்லைகள் அகன்று கொண்டதால்
பிடிமானங்களற்று ஏதிலிகளானதன்
நினைவுக் கீற்றுக்கள்
தாண்டவங்களின் விழிகளை
தீக்கிரையாக்கின.

இரும்புப் பாதங்களின்
கனத்த பதிவுகளைத் தாங்கிய பூமி
விடுதலைச் சிறகுகள்
விசிறிய காற்றில் சிவந்து போனது.
வெண்நுரைக்குவியலும்
வாசல் திறவு கோலும் என்றும்
அவர்களிற்குரியதென்று
செங்கொடி சாட்சி சொல்கிறது.

**அலையிசை**

## ஒரு போர்ப்பாடல்

துயில் இழந்த இரவுகளில்
மனதின் மெல்லிய சுவர்களில்
அறைகின்றன
அந்த ஞாபகங்கள்.
புற்கள் கருகி
கந்தக நெடி சுமந்த
காற்றின் வெம்மையில்
நினைவுருகி எரிகின்றன.

தீ நாக்குகள் மேலெழ
புகையடர்ந்து கிடக்கின்றது
எதிரியின்குகை.
ஒரு வசந்தத்தின்
வருகைக்காய்
ஆனையிறவின் வாசலில்
வீழ்ந்த புயல்களே!

நேற்று இந் நீண்டதூரம்
விழிசுமந்த கனவுடனும்
காற்றின் பாடலுடனும்
கையசைத்து வந்தீர்.
வெற்றி எமக்கேயென
உரத்துக் கூவினீர்.
இன்றும்
உம் போர்ப்பாடல் கேட்கிறது.
தரையதிர வந்தவர்கள்
வதைபடும் காலம் வந்தென
காதில் அது சொன்னது.

**சுதாமதி**

## "கரிப்புமணி" நிலம் கைவந்து சேர்ந்தது!

எனதும் எனது தோழிகளதும்
உதிரம் படர்ந்து கிடந்தது அத்தரையில்.
கட்டைக்காட்டு முற்பற்றைகளில்
சிதறிக்கிடந்தன தசைத்துணுக்குகள்.
மூச்சிறுக்கிக் கிடந்த ஆனையிறவுக்குச்
சுவாமளிக்க
எம் வீரர்களின் உடல் தாண்டி வந்தவர்களை
இழுத்துப் பிடித்து நாம் நடத்திய கடும் சமரில்
காயமுற்றுக் கிடந்தேன் நான்.

இரத்தம் பெருகி இறந்து விடுவேன் போலும்.
முதற்கள அனுபவத்தின் பக்குமின்மையால்
உடல் பதறிற்று.
அம்மாவை ஒரு முறை நினைத்துக் கொண்டேன்.

o o

ஒன்பது ஆண்டுகள் ஓடி மறைந்தன.
அன்று தொலைத் தொடர்புக் கருவியை
முறைப்படி இயக்கத் தெரியாதவள்
அணியொன்றின் தலைவியாய் நிமிர்ந்துள்ளேன்.

தரையறங்கும் கடற்கலங்களில்
எதிரிகளின் தொகை பார்த்து
'சயனைட்'குப்பிகை வாயில் பொருத்தியவள்
தலைதெறிக்க ஓடும் பகைவர்களுக்காய்
பாவப்படுகின்றேன்.

உடல்களின் எத்தனை தழும்புகள்
விரல்கள் போதவில்லை எனக்கு.

எம்மை ஓய்திருக்க விடாது
சிங்களம் நடத்திய படையெடுப்பு
ஓயாத அலைகள் வரை
ஓடச் செய்தது.
நாட்கணக்காய்: மாதக்கணக்காய்
குளிப்பு முழுக்கு எண்ணெய் தண்ணியின்றி
துப்பாக்கியுடன் வாழ்ந்த எனது வாழ்க்கை
நிலை உயர்த்தியது.

காற்றின் வாடையறிந்து
பகையிருக்கும் திசைபாய
வல்லமையளித்தான்
எம்மை அவிப்பதாய் நினைத்து
மூண்டெரிய விட்டுள்ளான்.
என் உதிரம் பரவிய நிலத்தில்
குவிந்து கிடக்கின்றன பகையுடல்கள்.

இப்போது என் தலைவனை
நினைத்து நிமிர்கின்றேன்.

'சயங் கொண்டோர்'களே வாருங்கள்!
களங்களில் கையகப்படுத்திய
புதிய போர்க்கருவிகளுடன்
முன்னேறிக் கொண்டிருக்கும்
எனது அணியையும் வந்து பாருங்கள்!
ஆகாயக் கடல் வெளியில்
முன்னுரை தொடக்கி
'ஓயாத அலை மூன்றி'ல்
வெற்றியுடன் நகரும்
எமது கதையையும்
பாட வாருங்களேன்.

**அம்புலி**

வெளிச்சம் வெளியீடு

சரிநிகர் இதழ் - 201, செப் 15 - செப் 22, 2000 

# மனமும் மனதின் பாடலும்

**- கவிதைத் தொகுதி**

'எமது மண்ணுக்கு' என்று 'மனமும் மனதின் பாடலும்' என்ற தனது கவிதை நூலை தமிழீழ மண்ணுக்குச் சமர்ப்பித்து அம்மண்ணின் மக்களின் விடுதலை ஒன்றையே நோக்காகக் கொண்டு வெளிவந்துள்ளது. முல்லைக் கமலின் கவிதை நூல்! அது பற்றி "உங்களுக்குள் வருகிற நானும் - எனதும்" என்ற ஆசிரியர் முன்னுரையில் அவர் பின்வருமாறு கூறுகிறார்.



"ஈழத்தமிழன் என்ற அடையாளத்தோடு உங்கள் முன் நிமிர்கிறேன்- வேறு எந்தவிதமான அடைமொழிகளும் எனக்கு வேண்டியதில்லை. எனது சுயத்தோடும் சுதந்திரத்தோடும் எனது நிலத்தையும் மொழியையும் நான் காதல் [illegible]

'எனது' மனமும் மனதின் பாடலும் எனது நிலத்தில் இருக்கிறது. பூகம்பத்திலிருந்து பூக்கத் தெரிந்த எங்களிடம் யாரும் பூக்களுக்கு விலைபேச வேண்டாம். தியாயங்களுக்கு நாங்கள் கற்றுக் கொடுத்தது போல் தியாகம் வேறு யாரிடமும் கற்றதில்லை. நான் எனது மண்ணை ஓர் அழகிய கவிதையாகவே காணுகின்றேன்.

"தாய்க்குத்தன் கனவெல்லாம் தனது குழந்தையின் வாழ்வில் இருப்பது போல எங்கள் இனத்திற்கு எமது நிலத்தில் இருக்கிறது. "யோனி வாயிலில் காத்திருக்கும் மருத்துவச்சியாக" உலகத் தமிழினமே தமழீழத்திற்காகக் காத்திருக்கிறது. என்னால் பாடாதிருக்க முடியாத போதெல்லாம் நான் பாடுகிறேன். நான் உணர்கிறேன்" என்று அவர் கூறும் போது இவ்வரிகளில் கவிதை உள்ளிழைவது போலவே விடுதலை வேட்கையும் அதன் தேவையும் வெளிக் கொணரப்படுகிறது.

முல்லைக்கமல் பற்றி இந் நூலுக்கு முன்னுரை வழங்கிய இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் பின்வருமாறு கூறுகிறார்.

"முல்லைக்கமல் வன்னி மண்ணின் ஒரு புதிய கவிஞன் தன்முன்னே விரிந்து கிடக்கும் போது மூத்த முந்தைய கவிஞர்களையும் அவர் தம் கவிதை ஆளுமைகளையும் அறியும் ஆர்வம் உள்ளவன். அவர்களின் உழைப்பின் மீதும் கனவுகளின் மீதும் காதல் கொண்டவன். அவர்களின் வழித்தடத்தில் நடக்க விரும்பினாலும், தன்னளவில் புதிய அடையாளங்களைப் பதிக்க விரும்புபவன்.. சமகாலத்துச் சூழலை உள்வாங்கிக் கொண்டு புதிய வீச்சுக்களை, உச்சங்களை தொட்டுவிடும் ஆர்வமும் கூடவே இவனுக்கு இருப்பதாகப்படுகிறது. அந்த எழுச்சி தான் முல்லைக்கமலை "முள்ளந் தண்டு நிமிர்த்திப் பாடுவேன்" எனச் சொல்ல வைக்கிறது.

முல்லைக்கமல் தன்வேட்கை பற்றிக் கூறும் போது "பூகம்பத்திலிருந்தும் பூக்கத் தெரிந்தவர்கள் நாங்கள்" என்று கூறுவதும் திருச்செந்திநாதன் மேற்கோள் காட்டும் "முள்ளந்தண்டு நிமிர்த்திப் பாடுவேன்" என்னும் கமலின் கவிதைவரிகளுமே இக்கவிதை நூலின் உயிர்த்துவமாக உள்ளோடுகின்றன.

இதுகாலவரை நமது இலக்கிய சிலாகிப்புகளில் வன்னிப் படைப்பாளிகள் பற்றி எதுவும் அதிகம் பேசப்படுவதில்லை. ஒருவித இருண்மையே அவர்கள் பற்றி நிலவிற்று. இல்லை, அவர்கள் பற்றி எம்போன்ற விமர்சகர்கள் இருட்டடிப்புச் செய்தனர் என்றும், குற்றஞ் சாட்டப்பட்டது. ஆனால், இன்று அங்கிருந்து அடுத்தடுத்து வெளிவரும் கவிதைத் தொகுதிகள் அந்த இலக்கிய இருட்டடிப்பை உடைத்தெறியும் ஒளி எறியங்களாக வந்த வண்ணமிருக்கின்றன. ஆரம்பத்தில் வன்னிப் புதிய பரம்பரையுள் கருணாகரன் ஒருவரையே தெரிந்து வைத்திருந்த நாம் இப்போது அமரதாஸ், முல்லைக்கமல், சித்தார்த்தன், [illegible], விவேக் என்றும், இன்னும் 'ஆனையிறவு' என்னும் கவிதை நூலின் வருகையோடு கஸ்தூரி, தமிழ்மாறன், அநாமிகன், அம்புலி, மயிலை ராஜன், மா. ஆதவன், ப. தயாளன், கே.பி.றெஜி என்று இன்னும் பல போராளிக் கவிஞர்களையும் அறியும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

> "ஈழத்தமிழன் என்ற அடையாளத்தோடு உங்கள் முன் நிமிர்கிறேன் - வேறு எந்தவிதமான அடைமொழிகளும் எனக்கு வேண்டியதில்லை. எனது சுயத்தோடும் சுதந்திரத்தோடும் எனது நிலத்தையும் மொழியையும் நான் காதல் செய்கிறேன்."

இவர்களின் கவிதைகள் எல்லாம் முல்லைக்கமல் கூறும் 'முள்ளந்தண்டு நிமிர்த்திய நிலத்தின்' பாடல்களே. முல்லைக்கமலின் 'மனமும் மனதின் பாடலும்' தொகுப்பில் உள்ள ஒவ்வொரு கவிதையும் "ஓர் ஒற்றைத் துயர் பொழுதின்" மீட்டல்களாக துன்பஞ் சுமந்து திரிவனவாக வன்னி மண்ணின் வெறுமையையும் அவலத்தையும் "காற்றள்ளித் தூற்ற" வருகின்றன.

'பஞ்சமிகள் பற்றிய பயம்' என்ற கவிதை வன்னி நிலப்பரப்பில் நிலவும் அவலத்தையும் வெறுமையையும் 'ஆவிகள் நடமாட்டத்தை' நம்பவைக்கும் ஓர் திகிலையும் உருவாக்குகிறது. (Ancient mariner) கவிதையில் வரும் ஒரு பீதிதோய்ந்த விவரணை மிக அழகுற இங்கு காட்டப்படுகிறது.

அதேநேரத்தில் இத்தகைய சூழலில் தான் இன்னொன்றும் நடைபெறுகிறது. இச்சூழலுக்கு எதிர்மாறானது. அதுதான் "சூரியனை நமக்குப் பரிசாகத்தர", "சிலுவை சுமந்த மைந்தர்கள்" நடாத்தும் கலந்துரையாடல் 'மனமும் மனதின் பாடலும்' என்ற கவிதை இதை அழகுற காட்சிப்படுத்துகிறது.

'நானும் அவர்களும் வானத்திற்கு<br>வெளியேயும்<br>புரட்சியின் இரகசிய அடுக்குகள் பற்றி<br>அளவளாவி இருந்தோம்....

ஏவல் பேய்களின் கூரை புடுங்கல்<br>குறித்து நகைத்தோம்.'

இவ்வாறு முல்லைக்கமல் தனது ஒவ்வொரு ஆக்கங்களிலும் அவலத்தையும், அதற்கெதிராக அவற்றை இல்லாதொழிக்க முயலும் வீர அர்ப்பணிப்புகளையும் தரிசிக்க வைக்கிறார்.

அதே நேரம், இந்த வீர அர்ப்பணிப்புக்கும் தேச விடுதலைக்கும் எதிராக இயங்கும் 'மக்களையும்' அவர் கோடி காட்டியே செல்கிறார்.

"உலகை இடித்த வார்த்தைகள்" என்ற கவிதையில்

இப்போதெல்லாம் மனிதர்கள்<br>இனிமையைத் தொலைத்தனர்<br>கானலடித்த தலைகளில்<br>விறைத்துப் போன வார்த்தைகள்<br>இருந்தன....

மாரிக் காலமொன்றில்<br>வயிறு பிளக்கப் பாடிய<br>தவளையைப் போலவும்<br>அவர்கள் பாடினர்' என்று

அவர்களைப் பற்றிச் சொல்லிப் போகிறார்.

இக்கவிதைகளில் இருந்து ஓர் வித்தியாசமான கவிதையாக "நோவெடுத்த மனக்குகை" நிற்கிறது.

'காற்றள்ளித் தூற்றிய<br>தூசிப்படலத்தில் இம்மியொன்று<br>காற்றில் தாவி மண்ணில் விழுந்து<br>அதிர்கிறது.<br>அணுவொன்றின் ஆர்ப்பாட்டமில்லாத<br>வாழ்வு

இம்மிக்குள் இயல் என்று தொடங்கும் இக்கவிதை தூல சூக்குமவாழ்வியக்கத்தை இனிதே சொல்லிச் செல்கிறது.

யாழ்ப்பாணத்தில் ஆரம்பத்தில் களைகட்டிய கவிதைப்போக்கு மட்டக்களப்பில் பெரிதாகப் பிரவகித்து இப்போ வன்னி நோக்கி குவிமுகம் கொண்டு வருகிறதா?

**- மு.பொ.**

# சிலுவையில் தொங்கும் சாத்தான் பிரச்சினையைக் கிளப்புமா?

**– அமரந்தா**

உலக மொழிகளிலிருந்தோ அல்லது ஆங்கிலத்திலிருந்தோ நம் மொழியில் மொழிபெயர்ப்புச் செய்யும் பணியில் ஈடுபட்டிருப்பவர்கள் ஒரு சிலர்தான். அந்த ஒரு சிலரில் அமரந்தாவும் ஒருவர். பெண்ணியம் தொடர்பான கருத்துக்களில் அதிகம் ஈடுபாடு காட்டி வருபவர். லத்தீன் அமெரிக்க இலக்கியங்களை தமிழில் மொழிபெயர்த்ததன் மூலம் தனித்துவத்துடன் திகழ்கிறார்.

**அமரந்தா என்ற பெயர். 'வித்தியாசமாக அதிகம் கேள்விப்படாத பெயராக இருக்கிறதே.....**

"லத்தீன் அமெரிக்காவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய நாவல் 'காப்ரியல் கார்சியா மார்க்வெஸ்'சின் 'ஒரு நூறு வருடத் தனிமை' என்ற நாவல். இது 1982ஆம் ஆண்டின் நோபல் பரிசைப் பெற்றது. அந்த நாவலில் அதிகம் பேசாத ஒரு பெண் கதாபாத்திரத்தின் பெயர்தான் அமரந்தா. அதற்கு முன்னால் என் நிஜமான பெயர் விசாலாட்சி."

**உங்களின் இந்த மொழிபெயர்ப்பு முயற்சிகளுக்குத் தூண்டுகோலாக அமைந்தவை எவை?**

"அலகாபாத் பல்கலைக்கழத்தில் நான் ஆங்கில இலக்கியத்தில் இளங்கலை பட்டப்படிப்பைப் படித்துக்கொண்டே தில்லியில் கல்வியியல் துறையில் வேலை பார்த்து வந்த நேரம். 1982ல் தான் பயனுள்ள தீவிர கருத்துகளை உள்ளடக்கிய சிறுகதைகளைத் தாங்கி வெளிவந்து கொண்டிருந்த 'படிகள்', 'இலக்கு', 'ஞானரதம்' போன்ற இலக்கியத் தரம் வாய்ந்த பத்திரிகைகளை நான் பார்க்க நேர்ந்தது. அதன் விளைவே, தீவிரமான கருத்துக்களை உள்ளடக்கிய லத்தீன் அமெரிக்கக் கதைகளை ஆங்கிலத்திலிருந்து, தமிழில் மொழிபெயர்க்கத் தொடங்கினேன்."

**நீங்கள் சொல்ல நினைத்த கருத்துகளை நேரிடையாக உங்கள் படைப்புகளின் மூலமாகவே வெளிப்படுத்தி இருக்கலாமே?**



"இந்தியாவின் 200 ஆண்டு கால காலனி ஆட்சியின் வரலாற்றைப் பாடநூல்களில் மீண்டும் மீண்டும் படித்துக் கொண்டிருக்கும் தமிழ் கூறும் நல்லுலகம், தென் அமெரிக்காவில் குறுகிய காலமாக இருந்தாலும் நிஜமாக நடந்த சுதந்திரப் போராட்டங்களையும் தெரிந்து கொள்ள வேண்டும். அப்படித் தெரிய வைப்பது என் கடமை. அதைத்தான் செய்து கொண்டிருக்கிறேன். தற்போது நிலவும் அரசியல் சூழ்நிலைகளை உள்வாங்கி என்னுடைய படைப்புகளில் சொல்லக்கூடிய அளவுக்கு, நேரிடையான அனுபவங்கள் எனக்குப் போதுமான அளவுக்கு ஏற்படவும் இல்லை."

**நீங்கள் முதலில் மொழிபெயர்ப்பு செய்த சிறுகதை எது? அதை யார் வெளியிட்டார்கள்?**

"மார்க்வெஸ்ஸின் No One writes to the colonel சிறுகதைத் தொகுப்பிலிருந்து Tuesday siesta என்ற சிறுகதையை 'ஒரு செவ்வாய் பகல் தூக்கம்' என்னும் தலைப்பில் 1982ல் மொழிபெயர்த்தேன். அது 83ல் 'படிகள்' இதழில் வெளிவந்தது.

**மொழிபெயர்ப்புக்கு உகந்த கதைகளை எத்தகைய ஊடகத்தின் மூலம் தேர்ந்தெடுத்தீர்கள்?**

"ஆங்கிலம் தவிர, அன்னிய மொழிகள் எதுவும் எனக்குத் தெரியாது. நான் மொழி பெயர்க்கும் மூலக்கதைகள் [illegible] இருப்பவை. என்னுடைய முதல் சிறுகதை வெளிவந்த உடனேயே நண்பர்களும், உறவினர்களும் என்னைப் பெரிதும் ஊக்கப்படுத்தினார்கள். நண்பர் ஒருவரின் மூலம், 'கியூபா'விலிருந்து வெளிவரும் ஆங்கில செய்திப் பத்திரிகையான, 'கிரான்மா' (Granma) கிடைத்தது. ஒன்று, இரண்டு அல்ல கிட்டத்தட்ட இரண்டு வருட சேகரிப்பு! வாரத்திற்கு ஒருமுறை இலக்கிய இணைப்புடன் வருவதுதான் 'கிரான்மா' பத்திரிகையின் விசேஷம்.

அந்த இணைப்புகளில் வெளிவந்தவைகளில் பத்து சிறுகதைகளைத் தேர்ந்தெடுத்து நான் மொழி பெயர்த்தேன். என்னுடைய இந்த மொழிபெயர்ப்புச் சிறுகதைகளை, 'நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்' நிறுவனத்தினர், அன்று செவ்வாய்க்கிழமை - அதை நான் எப்படி மறக்க முடியும்?' என்னும் தலைப்பில் சிறுகதைத் தொகுப்பாக வெளியிட்டனர்.

இதைத் தவிர 'மீட்சி', 'சிதைவு' , 'ஆய்வு', '1/4', 'ங்' போன்ற இலக்கியப் பத்திரிகைகளிலும் என்னுடைய மொழிபெயர்ப்புச் சிறுகதைகள் வெளிவந்துள்ளன. 'ங்' வெளியிட்ட லத்தீன் அமெரிக்கச் சிறுகதைத் தொகுதியில் என்னுடைய 'லிமோன் துறைமுகம்', 'பனியும் நெருப்பும்' சிறுகதைகள் இடம்பெற்றன. கோணங்கியின் 'கல் குதிரை' இதழ் வெளியிட்ட உலகச் சிறுகதைகளின் தொகுப்பில், 'கைதி', 'சாவும் அமைதியும்' ஆகிய இரண்டு சிறுகதைகள் வெளிவந்தது. பொதியவெற்பவனின் 'பறை'யில் 'சந்திப்பு' வெளியானது. 'கிரணம்' பத்திரிகையில் ஜெர்மன் திரைப்படத் தயாரிப்பாளர் வெர்னர் ஹெர்ஸாக்கின் பேட்டி வந்திருக்கிறது.

சே குவாராவின் 'பொலிவிய நாட்குறிப்பு' மற்றும் 'நிழல்களின் உரையாடல்' (Mothers And Shadows - by MARTA TRABA) நாவல் இந்த இரண்டையும் தாமரைச் செல்வி பதிப்பகம் 97ஆம் ஆண்டு முறையே நவம்பர், டிசம்பர் மாதங்களில் வெளியிட்டது.

**எந்த ஒரு படைப்பும். பாமரனையும் சென்றடைவதில்தானே அந்தப் படைப்பின் நோக்கம் முழுமை அடைந்ததாகக் கொள்ளப்படும். நீங்கள் சொல்லும் இலக்கியப் பத்திரிகைகளை எல்லோரும் படித்திருக்க வாய்ப்பில்லையே? அவர்கள் பெரும்பாலும் படிக்கும் வெகுஜனப் பத்திரிகைகளில் நீங்களும் எழுதலாமே?**

"நாங்கள் எழுதுவதைக் குறைக்காமல், மாற்றாமல் அப்படியே வெளியிடுவதற்கு வெகுஜனப் பத்திரிகைகளிலும் சரி, அதை நடத்துபவர்களின் மனதிலும் சரி, இடம் எங்கே இருக்கிறது? கொடுப்பதை முழுமையாகப் போடுவதற்கு அவர்களுக்கும் விருப்பமில்லை. அவர்களின் 'கமர்ஷியல்' கத்தரிக்கொலுக்கு எங்கள் படைப்புகள் இரையாவதில் எங்களுக்கும் உடன்பாடில்லை. நால்ல விஷயங்களைத் தேடித்தான் போக வேண்டும். அப்படி தேடலுடன் வரும் குப்பன், சுப்பன்களுக்காகத்தான் நாங்கள் எழுதுகிறோம். நல்ல படைப்புகளை வெளியிடும் அளவுக்கு வெகுஜனப் பத்திரிகைகளின் தரம் உயர

⇨18

நன்றி - நூலகத்திட்டம்



# மாபியா உலக மயமாக்கலில் தேசத்துரோகி பணப்பரிசும் விரருக்கான வரவேற்பும்

போலந்தின் முன்னைநாள் இராணுவ உயர் அதிகாரியாகக் கடமையாற்றியவரும் அக்காலப்பகுதியில் (1972 தொடக்கம் 1981 இடைப்பட்ட காலத்தில்) சோவியத் ரஷ்யா தலைமையிலான வார்சே உடன்படிக்கை நாடுகள் (Warsaw pact alliance) அமைப்பின் 35,000க்கு மேற்பட்ட அதியுயர் இரகசியக் குறிப்புகளை அமெரிக்க சி.ஐ.ஏவிற்கு வழங்கியவருமான கொலோனியல் குலுன்ஸ்கி (Colonel Kuklunski) தாய் நாட்டிற்குத் திரும்பிய போது போலந்தின் புதிய ராஜாக்கள் தங்களது துரோக நண்பனுக்கு வீரனுக்குரிய வரவேற்பை வழங்கினார்கள்.

குலுன்ஸ்கியின் துரோகம் முன்னை நாள் கம்யூனிச ஆட்சியாளருக்கு தெரிய வந்த போது இவர் மேற்கு நாடுகளுக்கு தனது குடும்பத்தவருடன் தப்பியோடினார்.

இதன் பின்னர் நடைபெற்ற வழக்கில் இவரது தேசத்துரோகக் குற்றத்திற்காக அன்றைய போலந்து நீதிமன்றத்தால் மரண தண்டனை வழங்கப்பட்டதுடன் அவரது சொத்துக்கள் யாவும் பறிமுதல் செய்யப்பட்டன.

ஆனால், அதன் பின்னர் நடந்தவை தான் எமது கூரிய அவதானிப்பிற்கு உரியது.

போலந்தின் கம்யூனிசக் கட்டமைப்பு 1989இல் கட்சியின் தலைமையைக் கைப்பற்றிய திரிபுவாத முதலாளித்துவ துரோகிகளால் முற்றாகக் கலைக்கப்பட்ட போதும் மேற்படி துரோகியின் மீதான தண்டனை தொடர்ந்து இருந்து வந்தது.

ஆனால், புதிய ஆட்சியாளர்களும், ஏகாதிபத்தியத்தின் நண்பர்களுமான போலந்தின் மக்களைச் சூறையாடும் இன்றைய முதலாளிகளுக்கு தங்கள் நண்பனின் தண்டனை நெஞ்சை நெருடியதால் போலும் 1995இல் குலுன்ஸ்கி மீதான தண்டனை நீக்கப்பட்டு 1997இல் அவை முற்றுமுழுதாக அழித்தெழுதப்பட்டு தேசத்துரோகி மாபியாக்கும்பல்களால் தானைத் தலைவனாக ஆக்கப்பட்டான்.

இதன் பின்னர் நடந்தவை தான் இன்றும் மோசமான கறைபடிந்த வரலாறாகும். நாட்டைக் காட்டிக் கொடுத்த துரோகிக்கு தண்டனை நீக்கப்பட்டதுடன் மூன்று இலட்சத்திற்கு மேற்பட்ட டொலர்கள் ($ 366,000) நஷ்டஈடாக வழங்கப்பட்ட கொடுமை நடந்தேறியது. ஆனால், இத்தொகை உண்மையில், 1.27 மில்லியன் (பத்து இலட்சத்திற்கு மேல்) என்பது ரொய்ட்டரின் செய்தியின் ஊடாக வெளிப்பட்டது.

இதிலிருந்து எமக்குத் தெளிவாகப் புரிவது என்ன?

உலக சோசலிச கட்டுமானத்தை உடைத்தெறிந்து முதலாளித்துவ ஜனநாயகத்தை மீட்டு எடுத்ததாகப் பீற்றுவதெல்லாம் மோசடியே.

இன்றைய உலக மயமாக்கல் என்பது தான் என்ன? உண்மையில் ஏகாதிபத்தியம் மாபியாவாக வடிவமெடுத்துள்ளது என்று சொல்லலாமா?

ஏன் இன்றைய சோவியத் ரஷ்யாவில் கூட 1/5 பங்கு பொருளாதாரம் மாபியாக்களால் கட்டுப்படுத்தப்படுகின்றதல்லவா? ரஷ்யாவின் முன்னைநாள் அதிபர் ஜெல்ஸ்டினும் அவரது மகளும், உறவினர்களும், ஊழலில் ஈடுபட்டதும், அதிலிருந்து தம்மைப் பாதுகாக்க புட்டினைப் பதவிக்குக் கொண்டு வந்ததும் இதன் தொடர்ச்சியல்லவா?

ஏன் தேசவிடுதலைப் போராட்டங்கள் கூட இன்று மாபியாத் தலைமைகளால் கைப்பற்றப்பட்ட கேவலத்தை இன்று நாம் நேரடியாகக் காணவில்லையா?

எனவே உலக மக்கள் தங்களின் விடுதலைக்காவும், உலக மாபியாக் கும்பலை அழித்தொழிப்பதற்காகவும் வீறுகொண்டு எழ வேண்டிய காலம் நெருங்கி வந்து கொண்டிருக்கின்றது.

-தேசபக்தன்

# சங்கிலியன் படையிடமிருந்து ஒரு பிரசுரம்

புலிகளின் இன்னொரு முகமாகக் கருதப்படும் சங்கிலியன் படை பொதுத் தேர்தல் தொடர்பாக யாழ்ப்பாணத்தில் துண்டுப்பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

புலிகள் எங்களுக்குத் தான் பச்சைக் கொடி காட்டியிருக்கிறார்கள் என்று கூறிக் கொண்டு தேர்தலில் இறங்கியவர்களை இப்பிரசுரம் நெருக்கடிக்குள் தள்ளி விட்டிருக்கிறது. அப்பிரசுரத்திலிருந்து சில பகுதிகள் கீழே தரப்படுகின்றன.

'இப்போது தொடரும் மக்களின் இடம்பெயர்வின் போதோ, சொந்தபந்தங்களை இழந்து நிர்க்கதியான போதோ, உண்ண உணவின்றி தவித்த போதோ திரும்பிக்கூட பார்க்காத சில பிரகிருதிகள் மீண்டும் இன்று உங்களிடம் கையேந்தி வந்து நிற்கின்றன. மழைத்தூறலுக்கு முளைக்கும் காளான்களைப் போல இன்று உங்களிற்கு குடை பிடித்து நிற்கும் இவர்கள் யார்?

தேச விடுதலைக்குப் புறப்பட்டு பின்னர் ஜனநாயக வழிக்கு மீண்டுவிட்டதாகக் கூறிக்கொள்ளும் இந்த தேச விரோத ஆயுதக் கும்பல்களை முதலில் முழுமையாக அம்பலப்படுத்துவோம். அவசரகாலச்சட்டத்திற்கு ஆதரவாக கையுயர்த்தி கோடிக்கணக்கில் பணத்தினைப் பெற்றுக் கொள்ளும் இவர்கள் இன்று அதே அவசரகாலச் சட்டத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நீலிக்கண்ணீர் வடித்து சாக்கடை அரசியல் நடாத்திக்கொண்டிருக்கின்றார்கள்.

இந்நிலையில் மீண்டும் ஒரு பொதுத்தேர்தலிற்கு முகங் கொடுக்கும் சந்தப்பம் உங்களை எதிர்நோக்கியுள்ளது. கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது சந்திரிக்கா அம்மையாரின் கைக்கூலிகளாக கள்ளவாக்குப் போட்டு யாழ்ப்பாணத்தில் வெற்றிக்கொடி நாட்டியதாக கூறிக்கொண்டவர்கள் மீண்டும் நாக்கைத் தொங்கப் போட்டவாறே உங்களிடம் மீண்டு வருகிறார்கள். இக்கும்பல்களிற்கு சில அரச அலுவலர்களும், ஊழல் பெருச்சாளிகளும், மற்றும் சில அமைப்புகளும் பக்கபலமாக செயற்பட்டு வருகின்றமை எமக்கு கவலையை அளிக்கின்றது.

அர்ப்பணிப்புகளிடையே வெற்றித் திசையை நோக்கி வீறுநடை போட்டுக் கொண்டிருக்கும் எமது விடுதலைப் போரை தளர்வுறச் செய்யும் இப்புல்லுருவிகளின் நடவடிக்கைகளை நாம் மன்னிக்கத் தயாரில்லை. இத்தேசத்துரோகக் கும்பல்கள் மீதும் அதற்கு துணைபோவோர் மீதும் கடுமையான தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்ள நாம் முடிவெடுத்துள்ளோம். இத்தாக்குதலின் போது பொதுமக்களாகிய நீங்களும் இடையில் சிக்குண்டு போகக்கூடாது என்பதில் நாம் மிகவும் கவனமாக உள்ளோம்.

இத்தேச விரோதக்கும்பல்களை நாம் முற்றாக நிராகரிப்பதுடன், அற்ப சலுகைகளை வழங்கி அவர்கள் வீசும் வலைக்குள் நாங்கள் சிக்கிக் கொள்ளாது தவிர்ப்பதன் மூலம் அநாவசியமான உயிரிழப்புகளையும் தவிர்த்துக் கொள்வோம் என திடசங்கற்பம் எடுத்துக் கொள்வோம்.'

# சார்க் எழுத்தாளர் மாநாடு - 2000

முதலாவது சார்க் (SAARC) எழுத்தாளர் மாநாடு கடந்த ஏப்ரல் 28,29,30ஆம் திகதிகளில் புதுடில்லியில் நடைபெற்றது. டில்லியில் இயங்கும் தனியார் நிறுவனமான நுண்கலை, இலக்கிய அக்கடமி (Academy of Fine Arts and Literature) இந்திய வெளியுறவு அமைச்சு, யுனெஸ்கோ நிறுவனம் ஆகியவற்றின் அனுசரணையுடன் இதனை ஏற்பாடு செய்திருந்தது. இலங்கை உட்பட சார்க் நாடுகளைச் சேர்ந்த ஐம்பதுக்கு அதிகமான எழுத்தாளர்கள், கவிஞர்கள், இலக்கிய ஆய்வாளர்கள் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர். மாநாட்டின் இறுதியில் சார்க் எழுத்தாளர்களின் புதுடில்லிப் பிரகடனம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு வெளியிடப்பட்டது.

ஆண்டு தோறும் சார்க் எழுத்தாளர் மாநாடுகள் நடத்துவதென்றும், தேர்ந்தெடுக்கப்படும் படைப்பாளிகளுக்கு சார்க் விருது வழங்கி கௌரவிப்பது என்றும் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

இம்மாநாட்டின் தொடர் நடவடிக்கைகளாக,

1. சார்க் எழுத்தாளர் மாநாட்டுக்கான நிரந்தரச் செயலகம் ஒன்று நுண்கலை இலக்கிய அக்கடமியில் நிறுவப்பட்டுள்ளது.

2. மாதாந்த சார்க் எழுத்தாளர் செய்திமடல் ஒன்றுவெளிவர உள்ளது.

3. சார்க் படைப்பாளிகளின் சிறுகதை, கவிதைகள் ஆங்கிலத்திலும் பிற சார்க் மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு தொகுதிகளாக வெளிவர உள்ளன.

சார்க் எழுத்தாளர் செய்திமடலிலும், தொகுப்பு நூல்களிலும் தங்கள் படைப்புகளும் இடம்பெற வேண்டும் என விரும்பும் ஈழத்து எழுத்தாளர்கள் தங்கள் சிறந்த படைப்புகள் எனக் கருதுபவற்றையும் அவற்றின் ஆங்கில மொழி பெயர்ப்புகளையும் பின்வரும் ஏதாவது ஒரு விலாசத்துக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

1. எம். ஏ. நுஃமான்,
தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்,
பேராதனை.

2. சைமன் நவகத்தேகம,
B-3/12,D செய்சா தொடர்மாடி,
மொறட்டுவ.

# இலண்டனில் ஈழத் தமிழ் எழுத்தாளர்களின் நூல் கண்காட்சி

ஈழத் தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் நோக்குடன் ஈழத் தமிழ் எழுத்தாளர்களின் நூற்கண்காட்சி ஒன்றை இலண்டனில் நடத்துவதற்கு ஏற்பாடாகி வருகின்றது.

ஈழத்து எழுத்தாளர்களின் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் அவர்கள் தங்கள் ஆக்கங்களின் ஐந்து பிரதிகளை எமக்கு அனுப்பி உதவினால் அவற்றை கண்காட்சியில் வைத்து அறிமுகம் செய்யப்படும்.

நூல் கண்காட்சி நடைபெறும் இடம் காலம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்நூற்கண்காட்சியை வெற்றிகரமாக நடத்துவதற்கு சகல தமிழ் எழுத்தாளர்களின் பூரண ஆதரவையும், ஒத்துழைப்பையும் அளிக்குமாறு பணிவுடன் வேண்டப்படுகின்றனர்.

ஆக்கங்களை அனுப்ப வேண்டிய முகவரி:

Mr. R. Mahendran (Mulli Amudan)
Exhibition Organaisiers
Eelam Tamil Writers Exhibition Committee
34 Redriffe Road,
Plaistow
London E13 0JK
Tel:020 8586 7783

# சிலுவையில் தொங்கும்.....

வேண்டுமே தவிர, 'எப்படியாவது எங்கள் படைப்புகள் வந்தால் சரி...' என்று எங்களால் தாழ்ந்து போக முடியாது."



**பிரச்சினைக்குரிய போராட்டக் கருத்துக்களை கொண்ட படைப்புகளை மொழிபெயர்ப்பு செய்வதில் ஆபத்து குறைவு. அதன் மூலத்தைக் காட்டித் தப்பித்துக் கொள்ளலாம். இதைப் போன்ற சௌகரியங்கள் மொழிபெயர்ப்பில் இருக்கிறது இல்லையா?**

"அப்படியெல்லாம் தீர்மானமாகச் சொல்லி விட முடியாது. ஆபத்தில்லாமல் எதுவுமில்லை. பின் விளைவுகளின் தன்மையில் வேண்டுமானால் மாறுபாடுகள் இருக்கலாம். அதற்காக விளைவுகளே ஏற்படாது என்று சொல்வதற்கில்லை. மொழிபெயர்க்கத் தேர்ந்தெடுக்கு[illegible] விஷயம் என் மனதுக்கு உகந்ததாக இரு[illegible] வேண்டும் என்பதுதான் முக்கியம்."

**பாரதியார், தன்னுடைய சொந்தக் கருத்துக்களைத் திரௌபதியின் கூற்றாகப் பாஞ்சாலி சபதத்தில் சொல்லி இருப்பது போல, எந்தப் படைப்பிலாவது உங்களின் குறுக்கீடு (Interpretation) இருந்திருக்கிறதா?**

"மகாபாரதம் வாய் வழிக்கதை. நான் மொழிபெயர்ப்பது வெவ்வேறு நாடுகளின் அரசியல் இலக்கியம் (Political Literature). இன்னும் சொல்லப் போனால், அது மூலக் கதாசிரியர்களின் Idiological Statement. அதற்கு 100 வீதம் உண்மையாக என்னுடைய மொழிபெயர்ப்பு இருக்க வேண்டும் என்று முயற்சிப்பேன். ஸ்பானிஷ் மொழியை யாராவது சொல்லித் தந்தால், கற்றுக் கொள்ள மிகவும் ஆவலாக இருக்கிறேன்."

**'படைப்பாளியின் தனிப்பட்ட வாழ்க்கை, பழக்க வழக்கங்களோடு அவனுடைய படைப்பு சொல்லும் கருத்துகள் முரண்பட்டிருக்கலாம். படைப்பையும், படைப்பாளியையும் ஒப்பீடு செய்யக்கூடாது' என்பது ஒரு சிலரின் கருத்து. 'வார்த்தைக்கும், வாழ்க்கைக்கும் இடைவெளி ஏற்படாமல் பார்த்துக்கொள்பவனே படைப்பாளி' என்பது ஒரு சிலரின் கருத்து. இதில் நீங்கள் எந்தப் பக்கம்?**

"ஒரு தனி மனிதன், மனிதத் தன்மையை இழக்காத வரைதான், அவனுடைய திறமைகளைக் கணக்கில் எடுத்துக் 'கொள்ள வேண்டும்."

**சிறந்த படைப்புக்கான அடிப்படை எது?**

"படைப்பாளி வாழ்ந்து கொண்டிருக்கும் காலத்தின் சமூக பிரதிபலிப்பு மட்டுமே படைப்பின் நோக்கமாக இருக்கக்கூடாது. மாறாக, அதிலிருந்து விடுபடவும், மேன்மைப்படுத்தவும், அல்லது 'இதை விட சிறந்த வழி என்ன?' என்று மக்களைச் சிந்திக்க வைப்பதும் தான் சிறந்த படைப்புக்கான அடிப்படையாக நான் நினைக்கிறேன்."

**தற்போது தாங்கள் மொழிபெயர்த்துக் கொண்டிருக்கும் படைப்பு எந்த மொழியைச் சேர்ந்தது?**

"கூ-வா-த்யாங்கோ'வின் கென்ய நாவல் 'டெவில் ஆன் தி கிராஸ்' (Devil on the cross). காலனி ஆட்சியிலிருந்து மகத்தான வீர மிக்க ஆயுதப் போராட்டத்தின் மூலம் சுதந்திரம் அடைந்த கென்யா, தரகு முதலாளிய ஆளும் வர்க்கத்தின் தலைமையில் சீரழிந்து போன வரலாற்றைச் சொல்கிறது இந்நாவல். 'சிலுவையில் தொங்கும் சாத்தான்' என்னும் தலைப்பில் இதை மொழி பெயர்த்து வருகிறேன்.


1963லிருந்து 79 வரை இடைப்பட்ட 16 ஆண்டுகளில் கென்யா, ஏகாதிபத்தியத்தின் பிடியில் பட்டபாட்டை இந்தப் புத்தகத்தின் முன்னுரை சொல்லும். கென்ய சுதந்திரப் போராட்ட வரலாற்றை உள்வாங்காமல், இந்தக் கதைக்குள் நுழைய முடியாது என்பதைக் கருத்தில் கொண்டே 25 பக்கங்களுக்கு, மிகவும் சிரமப்பட்டு சுருக்கி இந்த வரலாற்றை எழுதி இருக்கிறேன்."

**- நன்றி ஆறாம்திணை**

○

நன்றி - நூலகத்திட்டம்






# பாதிப்புக்கு உட்படுத்தியவர்களை அம்பலப்படுத்துங்கள்!

கடந்த சில மாதங்களாக தங்கள் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பெண்கள் சிறுமிகளுக்கெதிரான வன்முறை தொடர்பான கட்டுரைகளையும், செய்திகளையும் நாம் அக்கறையுடன் கவனித்து வருகிறோம். இவ்விடயங்களையிட்டு சமூகம் அக்கறைப்படல் வேண்டும் என்பதில் நீங்கள் காட்டும் உறுதியை வரவேற்கின்றோம்.

ஆனால், பெண்களுக்கெதிரான வன்முறை, அவர்களுக்கு ஏற்படும் பாதிப்புக் குறித்து சட்ட உதவி புரிந்தும் ஏனைய வகையிலும் செயற்படும் பெண்கள் நிறுவனம் என்ற வகையில், பெண்களுக்கெதிரான குற்றச்செயல்கள் பற்றிய உண்மைச் செய்திகளைப் பத்திரிகைகள் வெளியிடும் முறை பற்றி எமது கருத்துக்களைக் கூற விரும்புகின்றோம். உண்மைத் தகவல்களை உடனுக்குடன் வெளியிடுவது முக்கியமானது. ஆனால், அத்தகவல்கள் தனியொருவரையோ, அவர்களது எதிர்காலத்தையோ பாதிக்காத வண்ணம் இருக்க வேண்டியது மிக முக்கியம்.

குறிப்பாக வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்ட பெண்களையும், துஷ்பிரயோகத்துக்கு உள்ளான சிறுமியரையும், "களங்கப்பட்டவள்" என்று பட்டம் சுமத்தும் எமது சமூகத்தில், பெண்களுக்கோ சிறுமியருக்கோ தெரியாமல் அவர்களது அனுமதி இல்லாமல் அவர்களது பெயரையும், ஊரையும் பிரசுரிப்பது எவ்வகையில் நியாயமாகும். குற்றத்துக்குள்ளான பெண் தனக்கிளைக்கப்பட்ட கொடுமைகளைத் தானே கூறி இவற்றைப் பத்திரிகையில் போடுங்கள் என்றால் அதனைப் பிரசுரிக்கலாம். ஏனெனில், அண்மையில் வெளியான தகவல்கள் சில பாதக விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன. தங்களைப் போல் சேவையையே நோக்கமாகக் கொண்டு செயல்படும் எமது நிறுவனம் இதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகின்றது.

அண்மையில் வெளிவந்த கட்டுரைகளாவன:

· "எங்களுடைய குழந்தைகளைக் காப்பாற்றுவது யார்?"

ஜுன் 22 - ஜுலை 5, எழுதியவர் - வி.ஜே.கே.

"கருகும் மொட்டுக்கள்"

ஜுன் - 8, ஜுன் 21 எழுதியவர் - நிராஜ் டேவிட்

"தந்தையால் குதறப்பட்ட ஒரு சிட்டுக்குருவியின் கதை"

பெப். 24 - மார்ச் 8, எழுதியவர் சுரஜினி நிராஜ் டேவிட்

"ஜிகாத் விடுதலைப் படை வழங்கிய தண்டனைகள்"

ஏப்ரல் - 6 , ஏப்ரல் 26 எழுதியவர் - நிராஜ் டேவிட்

"எங்களுடைய குழந்தைகளைக் காப்பாற்றுவது யார்" எனும் கட்டுரையில் பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களின் பெயரைக் கட்சிதமாகக் கூறிய கட்டுரையாளர் குற்றத்துக்குக் காரணமானவர்களது பெயரைக் குறிப்பிடாது தகப்பன், மச்சான், அத்தான் என எழுதியதன் காரணம் என்ன? நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு இலக்கத்தைக்கூட எழுதியுள்ள அவர், குற்றவாளிகளின் பெயர் போடாமலா வழக்குத் தாக்கல் செய்துள்ளார்கள் என்பதை அறியாமலா எழுதியுள்ளார்? இங்கு நாம் எழுப்பும் கேள்வி பாதிக்கப்பட்டோர் விபரத்தை அம்பலப்படுத்த வேண்டும் எனும் நோக்கில் இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளதா? அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர்களை வெளிக் கொணரும் நோக்கில் எழுதப்பட்டதா? என்பதே.

ஜுன் 8 - 21ல் வெளிவந்த "கருகும் மொட்டுக்கள்" கட்டுரையில் பாதிக்கப்பட்ட சிறுவர்களது படத்தைப் பிரசுரிப்பது எந்த விதத்தில் நியாயம்? தத்தம் பத்திரிகைகளில் உண்மைச் சம்பவங்கள் சூடான செய்திகளை வெளியிட வேண்டும் என்பது தான் அனைவரது விருப்பமும். ஆனால், பாதிக்கப்பட்டோரின் படங்களைப் பிரசுரித்திருக்கும் போது அவர்களது சம்மதத்துடன் செய்திருக்கிறீர்களா? இக்கட்டுரையில் கட்டம்போட்டு வெளியான செய்தியிலுள்ள சிறுமி பத்திரிகையை பலரும் அவளுக்குக் காட்டிய பிறகு நீதிமன்றத்துக்கு வரப் பயப்படுகின்றாள். காரணம் தம்மிடமுள்ள துன்பத்தை இங்குள்ள நிறுவனங்களும், ஏனையோரும் பத்திரிகைச் செய்தியாக்க விரும்புகிறார்களே தவிர தமக்கு உதவ யாரும் இல்லை என்ற எண்ணத்தாலேயாகும்.

பெண்களுக்கெதிரான வன்முறை கண்டிக்கப்பட வேண்டியது. அதை புரிவோர் தண்டிக்கப்பட வேண்டும். திருந்த வேண்டும் என்று கருதினால் குற்றவாளிகள் (குற்றம் சாட்டப்பட்டவரின்) பெயரைக் குறிப்பிடுங்கள். குற்றத்திற்குள்ளாகி உளம் சிதைந்திருப்பவரை நீங்களும் உளச்சிதைவுக்கு உள்ளாக்காதீர்கள். அத்துடன் பெண்களுடனும் சமூகத்துடனும் வேலை புரியும் எங்களிடம் தங்கள் பிரச்சினையைக் கூறி சட்ட உதவி பெற வரும் பெண்களும் சிறுவர்களும் இன்று தங்களைப் பற்றிய தகவல்களை வெளியிடத் தயங்குகிறார்கள். இதனால் எங்களுக்கும் அவர்களுக்கும் இடையிலான உறவு பாதிப்படைந்துள்ளது.

எனவே இனிவரும் காலங்களில் உரிய நடவடிக்கை எடுப்பீர்கள் என நம்புகின்றோம்.

சூரியா பெண்கள் அபிவிருத்தி
நிலையம்
மட்டக்களப்பு

## தப்பி ஓடும் இராணுவத்தினர் ...

துரிதமாக, அவசரக் கூட்டமாக மாவட்டச் செயலாளரின் குறுகிய அறிவித்தலின் பிரகாரம் நடாத்தப்பட்டது. பிரதேச செயலாளர் மூலம் சமுர்த்தி முகாமையாளர்களினூடாகச் சமுர்த்தி அதிகாரிகள் அழைக்கப்பட்டு, இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு உதவியளிக்குமாறு / ஆதரவளிக்குமாறு இராணுவ அதிகாரிகளின் பங்களிப்புடன் பிரதேசச் செயலாளர் அலுவலகத்தில் நடாத்தப்பட்ட அவசர கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இங்கு அக் குறிப்பிட்ட முகவரியில் தப்பியோடிய படையினர் இல்லாவிட்டால், அவர்கள் தங்கியுள்ள வேறு தரிப்பிடங்கள் குறித்துத் தகவல்களை இரகசியமாக அறியத் தருமாறு குறிப்பிட்டு இராணுவத் தொலைபேசி இலக்கங்கள் இந்தக் கூட்டத்தில் வழங்கப்பட்டன.

இதன்படி மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில், குருணாகல் மாவட்டத்தில் ஒரு நாள் மட்டும் தப்பியோடிய 178 பேரும், அனுராதபுரம் மாவட்டத்தில் 350 பேரும் கைது செய்யப்பட்டதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன. 18 மாவட்டங்களில், இவ்வாறான கைதுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இராணுவத்திலிருந்து தப்பியோடியுள்ள உயரதிகாரிகள் பலர் இலங்கையிலிருந்து வெளியேறி விடும். இந்தக் கைது நடவடிக்கைகளில் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த சிப்பாய்களே அகப்படுகின்றனர். இவர்களுக்கு விதிக்கப்படும் மோசமான தண்டனையாக, யுத்தம் நடைபெறும் பிரதேசங்களுக்கு மீண்டும் அனுப்பி வைக்கப்படுகின்றனர். இவ்வாறு அனுப்பப்படும் இராணுவத்தினர் யுத்தத்தில் உயிரிழக்கின்றனர். அல்லது அங்கவீனர்களாக ஆக வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

யுத்தத்திலிருந்து சிங்கள இளைஞர்கள் தப்பி வருவது ஏன்? இது மனிதாபிமானப் பிரச்சினை ஆகும். 1996ல் மோசமான / தீவிரமான யுத்தம் நடந்த முல்லைத்தீவுத் தாக்குதலின் பின்னரும், இவ்வாண்டு ஏப்ரல் மாதம் ஆனையிறவுப் படைத் தளத் தாக்குதலின் பின்னரும் இந்தத் தப்பியோடல்கள் அதிகரித்துள்ளன. இராணுவ மருத்துவமனையில், அங்கவீனமாகிச் சிகிச்சை பெறும் இளைஞர் ஒருவர், அரசாங்கமும், சிவில் சமூகமும் இராணுவத்தினருக்கெனச் சேர்க்கும் உணவுப் பொருட்களை, யுத்தத்தினால் பாதிக்கப்படும், பட்டினியால் வாடும் வடக்கு வாழ் மக்களுக்கு விநியோகிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார். இவ்வாறு யுத்தத்தின் குரூரம், அழுத்தம் என்பவற்றை போர்ச் சூழலில் இருந்து தப்பி வரும் இவர்கள் நன்கு அறிவர். வேலை இன்மையால் இராணுவத்தில் இணையும் சிங்கள இளைஞர்கள், போர்க் களத்தில் அனுபவிக்கும் மோசமான பாதிப்புக் காரணமாக மீண்டும் தங்கள் வீடுகளை, பிரதேசங்களை நோக்கி வருகின்றனர். அவர்கள் மீண்டும் போருக்குச் செல்ல விருப்பமின்மையாலேயே இவ்வாறு வருகின்றனர். இவர்களை மீண்டும் இராணுவத்தில் சேர்த்துக் கொள்வதால் பிரச்சினைகள் அதிகமாகின்றன. இவ்வாறு தப்பி வரும் இராணுவத்தினர், இன்று சிவில் சமூகத்திற்கு அச்சுறுத்தலாக உள்ள பாதாள உலகக் கோஷ்டியுடன் தொடர்பு கொண்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஊது குழல்கள்!

சரிநிகர் இதழ் 197ல் (மே - ஜுன் 07, 2000) மெல்லத் தமிழினி பத்தியில் ஊதுகுழல்கள் பற்றி எழுதிய அன்பர் என்னைப் பற்றியும் ஒரு குறிப்பு எழுதியுள்ளார். ரூபாவாஹினி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் பணிப்பாளர் சபைகளுக்கு நியமிக்கப்பட்டு அரசாங்கத்தின் ஊதுகுழல்களாகச் செயற்பட்டவர்களின் வரிசையிலிருந்து எனக்கு விலக்கு அளிக்கும் ஒரு நல்ல உள்நோக்கம் இப்பத்தி எழுதிய அன்பருக்கு இருந்திருக்கக் கூடும். அந்த நன்நோக்கத்தில் என்னைப் பற்றிய ஒரு பொய்யான தகவலை அவர் குறிப்பிட்டிருக்கிறார். அதையிட்டு நான் சந்தோசப்பட முடியாது. அந்தக் குறிப்பு இது தான். "கலாநிதி நுஃமான் அவர்கள் (ரூபாவாஹினிக் கூட்டுத்தாபனப் பணிப்பாளர் சபைக்கு) நியமிக்கப்பட்ட காலத்திலிருந்தே ஒருபோதும் தான் செயற்பட்டதில்லை என்று கூறுகிறார். உத்தியோகபூர்வமாக அவர் அப்பதவி ஏற்றுச் செயற்பட்டது கிடையாது என்கிறார்"

இந்தக் குறிப்பு எனக்கு ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் தந்தது. இந்தப் பத்தியை எழுதியவர் யார் என எனக்குத் தெரியாது. சிலவேளை அவரது கனவில் தோன்றி இதைக் கூறியிருக்கக்கூடும். மற்றும்படி நான் யாருக்கும் இப்படிக் கூறியதோ, அல்லது எங்காவது இப்படி எழுதியதோ இல்லை. இது முற்றிலும் பொய்யான தகவலாகும். உண்மை தெரிந்தவர்கள் என்னைப் பற்றிப் பிழையாகக் கருத இது வழிவகுக்கும் என்பதால் இக்கடிதத்தை எழுத நேர்ந்தது.

திருமதி செல்வி திருச்சந்திரனோடு நானும் சுமார் மூன்று ஆண்டு காலம் (செப்டம்பர் 1994 முதல் ஜுன் 1997 வரை) ரூபாவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையில் ஒரு உறுப்பினராகச் செயற்பட்டிருக்கிறேன். சில நீங்கலாகச் சபைக் கூட்டங்கள் எல்லாவற்றிலும் கலந்து கொண்டிருக்கிறேன். சரிநிகரின் குற்றக் கூண்டிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக உண்மையை மறைக்கவோ, மறுக்கவோ வேண்டிய தேவை எதுவும் எனக்கில்லை. நானும் ஒரு ஊதுகுழலாகச் செயற்பட்டேனா இல்லையா என்பது வேறு விடயம். சந்தர்ப்பம் கிடைக்கும்போது எனது ரூபாவாஹினி அனுபவம் பற்றிய நான் விரிவாக எழுதலாம். அப்போது அதுபற்றித் தெரிய வ்ரும்.

இலங்கைக் கலாசாரப் பேரவையின் இலக்கியக் குழு உறுப்பினராக இரண்டாவது முறையும் நியமிக்கப்பட்ட போது நான் அதை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை முன்பு ஒரு முறை சரிநிகரில் எழுதியிருந்தேன். மெல்லத்தமிழினி அன்பர் அதை ரூபாவாஹினியுடன் சேர்த்துக் குழப்பிக் கொண்டார் என்று தோன்றுகிறது. பத்தி எழுதும் அன்பர்கள் பத்திரிகையில் எழுத வாய்ப்புக் கிடைப்பதைப் பயன் படுத்திக் கொண்டு ஆராய்ந்து பாராமல் மனம் போன போக்கெல்லாம் எழுதக் கூடாது என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். தனிநபர்கள், நிறுவனங்கள் பற்றிச் சரிநிகரில் வெளிவரும் சமீபகால எழுத்துக்கள் சில மகிழ்ச்சி தருவன அல்ல.

எம்.ஏ.நுஃமான், பேராதனை.

## அடுத்த நூற்றாண்டின்.....

வெங்கட்சாமிநாதன் திறந்து வைத்தார்.

'கண்ணுக்குள் வெளி' என்ற சிறு ஓவியக் கைநூலும் வெளியிடப்பட்டது.

தமிழ் இனி அரங்குகளுக்கு வெளியே தமிழகத்தின் முக்கியமான நூல் வெளியீட்டு நிறுவனங்கள் நூல் விற்பனை நிலையங்களை அமைத்திருந்தன. லட்சக்கணக்கான ரூபாய்களுக்கு நூல்கள் விற்பனை செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. அலைகள் வெளியீட்டகம், விடியல், காலச்சுவடு பதிப்பகம், சாகித்திய அக்கடமி, உலகத் தமிழாராச்சி நிறுவனம், என்.சி.பீ.எச். ஆகியன கலந்துகொண்ட சில நிறுவனங்களாகும்.

தமிழக ஈழ நாடகக் கலைஞர்கள், நெறியாளர்கள் பங்கேற்ற சந்திப்பு ஒன்றும் இடம்பெற்றது. எதிர்காலத்தில் எவ்வாறு இணைந்து வேலைசெய்வது என்பது பற்றியும் ஆக்க பூர்வமான பரிமாற்றங்கள் பற்றியும் கலந்துரையாடல் இடம்பெற்றது. இது போலவே பெண்கள்/ பெண்ணியவாதிகளது ஒன்று கூடல் ஒன்றும் இடம்பெற்றது.

தமிழ் இனியில் கலந்து கொண்ட ஈழத்து எழுத்தாளர்கள் அவர்களது படைப்புலகம், பிரச்சினைகள் பற்றிய தகவல் திரைப்படம் ஒன்றை இயக்குநர் அருண்மொழி தயாரிக்கிறார். இவ்வாறான ஒரு முயற்சியில் நடிகர் ரவீந்தரும், (ஒரு தலை ராகம், ஏழாவது மனிதன்) ஈடுபட்டுள்ளார். தமிழ் இனிக்கு வந்துள்ள ஈழ எழுத்தாளர்களைப் படம் பிடிப்பதிலும் நேர்முகம் எடுப்பதிலும் இவர்கள் இருவரும் தீவிரமாகச் செயல்பட்டார்கள்.

தமிழ் இனி முடிந்த பிற்பாடு, சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கிய துறையில் போரும் இலக்கியமும் எனும் தலைப்பில் ஈழத்து எழுத்தாளர்களுடனான கலந்துரையாடல் ஒன்றை போராசியர் வீ. அரசு ஏற்பாடு செய்திருந்தனர். ஏராளமான பல்கலைக்கழக மாணவர்களும், பேராசிரியர்களும், தமிழகப் பத்திரிகையாளர்களும், கலந்துகொண்ட இந்த நிகழ்வை போராசிரியர் சிவத்தம்பி நெறிப்படுத்தினார். சு. வில்வரத்தினம், சாரல் நாடன், சுசீந்திரன், நந்தினி சேவியர், ரஞ்சகுமார், பார்வதி கந்தசாமி, செல்வம், பாரதிதாசன் ஆகியோர் உட்படப் பதினைந்து ஈழத்து எழுத்தாளர்கள் கருத்துரையாற்றினர். தொடர்ந்து இடம்பெற்ற கருத்தாடலில் பா. செயப்பிரகாசம், இன்குலாப், அறிவுமதி, துக்ளக் பத்திரிகையைச் சேர்ந்த சாவித்திரி, கண்ணன் ஆகியோர் பங்கேற்றனர்.

மொத்ததில் "தொடர்ந்தும் எழுதுவதற்கான ஒரு புத்துாக்கத்தைத் தமிழ் இனி வழங்கியிருக்கிறது" என்ற அம்பையின் கூற்றுப்பல எழுத்தாளர்களிடமும் எதிரொலித்தை அவதானிக்க முடிந்தது.

## திருத்தம்

200வது சரிநிகரில் வெளியான ரோஹினியின் நாவல் விமர்சனம் பற்றிய மொழிபெயர்ப்பில் அதன் தலைப்பு "அழகுற ஏதாவது செய்ய வேண்டும்" என்று இருப்பதற்கு பதில் "அழகுற ஏதாவது செய்வதற்கு" என்று திருத்தப்பட வேண்டும். தவறுக்கு வருந்துகிறேன்.

- மு.பொ.

நன்றி - நூலகத்திட்டம்

Registered as a Newspaper in Sri Lanka

# சரிநிகர்

வாரஇதழ்

"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"
-பாரதி

இல. 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட.
தொலைபேசி / தொலைமடல் : 814859, 815003, 815004.
மின்னஞ்சல்: sarini@sltnet.lk

## மூன்றாவது காலடி!

### ஒரு கோரிக்கை

சரிநிகரின் முதலாவது இதழ் வெளியாகிப் பத்து ஆண்டுகள் சென்று விட்டன. இந்த இதழுடன் சரிநிகர் புதிய காலகட்டம் ஒன்றுக்குள் அடி எடுத்து வைக்கிறது. இது எங்களுக்கு மூன்றாவது காலடி. இந்த மூன்றாவது காலடியில் சரிநிகர் வார இதழாக உங்களை வந்து சேர்கிறது.

கடந்த பத்து ஆண்டுகளில் நாம் சிந்தித்தவற்றையும் சாதித்தவற்றையும் திரும்பிப் பார்க்கின்ற போதும், இன்று எம்மைச் சூழ வெளியாகின்ற புதிய புதிய தமிழ்ச் செய்தித்தாள்களைப் பார்க்கின்ற போதும் இந்தப் பத்து ஆண்டுகளில் எத்தனை பேருக்குப் பாதை வகுத்துக்கொடுத்திருக்கிறோம் என்பதை மன நிறைவுடன் உணர முடிகின்றது.

பலவகைப்பட்ட அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளூடாக, ஒரு இருள் மண்டிய காலத்தில் இருளைச் சபித்து ஒதுக்காது ஒரு சிறு மெழுகுவர்த்தியையாவது ஏற்றிப் பேணுவோம் என்பதே எங்களுடைய உயிர் மூச்சாக இருந்தது. இந்த உயிர் மூச்சில் தான் சரிநிகரின் வீச்சும் இருந்தது.

இலங்கையில், தமிழில் மாற்றுப்பத்திரிகை என்ற புது அத்தியாயத்தை உருவாக்கிய சரிநிகர் கருத்துவெளிப்பாட்டுச் சுதந்திரம், பேச்சுச்சுதந்திரம், ஊடக சுதந்திரம், அஞ்சாமை ஆகிய முக்கியமான அடிப்படை உரிமைகளை மிகுந்த ஆபத்துக்களுக்கு மத்தியிலும் வலியுறுத்தி வந்துள்ளது.

இந்த உரிமைகள் வெறும் பட்டயங்களாக அலங்காரமாகச் சுவர்களில் தொங்க விடப்படுவதற்காக உருவானவை அல்ல. அவை எமது நாளாந்த வாழ்வில் எம்மோடு பிரிக்கப்பட முடியாமல் இணைக்கப்பட வேண்டியவை. எமது சமூக, அரசியல், பொருளாதார வாழ்வை நெறிப்படுத்துபவை அவை.

பெருநிதி நிறுவனங்களும் அரசுகளும் தொடர்பூடகங்களையும் செய்தித்தாள்களையும் தமது ஏகபோகமாக மாற்றி வருகின்ற ஒரு சூழலில் சுதந்திரமான, மாற்றுக்கருத்தாக அடிநிலை மக்களின் மனச்சாட்சியாக ஒலிக்கவும் ஒளிரவும் வேண்டிய கடப்பாடு முக்கியமானது.

கடந்த பத்து ஆண்டுகளில் இத்தகைய கடப்பாட்டுடன் வெளிவந்த தமிழ் இதழ்கள் சரிநிகரைத் தவிர வேறெதுவுமே இல்லை என்பது ஒரு நல்ல சேதி அல்ல. சரிநிகரின் இடத்தையும் இருப்பையும் விரிவு படுத்த வேண்டிய அவசியம் முன்னெப்போதும் இல்லாதவாறு இன்று உணரப்படுகின்றது. எனவே தான் சரிநிகர் வார இதழாகப் பரிணாமம் பெறுகிறது. இந்த இதழிலிருந்து சரிநிகர் பெருமளவுக்குச் சுயசார்பு நிலைக்கு மாறுகிறது. இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கம் (MIRJE) வழங்கி வருகின்ற நிறுவன ஆதரவு தொடர்ந்தும் சரிநிகருக்கு இருக்கும் எனினும் தயாரிப்பு, அச்சிடல், விநியோகம் ஆகிய சகல பிரிவுகளிலும் சரிநிகர் தனது சொந்தப் பொருளாதாரத்தில் தங்கி இருக்கும் நிலைமைக்கு மாற்றம் பெறுகிறது.

எங்களுக்கும் வாசகர்களாகிய உங்களுக்கும் இது ஒரு முக்கியமான திருப்பு முனை. உங்களுடைய தொடர்ந்த ஆதரவு எங்களுக்குத் தேவை. ஏராளமான சந்தாதாரர்கள் எமக்குத் தேவை. நாங்கள் உருவாக்கி இருக்கிற சரிநிகர் வளர்ச்சிக்கான நிதியத்துக்கு ஏராளமான நிதி தேவை.

பணபலம் உள்ளவர்கள் எங்களது முயற்சிக்குத் தாராளமாக உதவி வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறோம். ஒவ்வொரு வாசகரும் தம்மாலான உதவியைச் செய்யுமாறும் தமது நண்பர்களைச் சந்தாதாரர்களாகச் சேர்த்து உதவுமாறும் கோரிக்கை விடுக்கின்றோம்.

யுத்த அவலமும், அரச ஒடுக்குமுறையும் நெருக்கடி நிலைப்பயங்கரமும் தொடர்ச்சியாக எம்மைச் சூழ்ந்துள்ள நிலையில் சரிநிகரின் குரலுக்கு வளம் சேர்ப்பது உங்கள் அனைவரதும் கடப்பாடு ஆக வேண்டும். மாற்றுக்கருத்தின் மதிப்பை மதிப்போரின் குரலாகவும் ஒடுக்கப்படுகிற அனைத்து மக்களது குரலாகவும் சமூக, அரசியல், பண்பாட்டுத் தளங்களில் சரிநிகர் தொடர்ந்தும் உறுதியுடன் உழைக்கும் என்று கூறி வைத்து எமது மூன்றாவது காலடியுடன் இணைய வருமாறு அழைக்கின்றோம்.

## தொலைபேசி அழைப்பிற்குப் போத்தல் !

செப். 16, 17ம் திகதிகளில் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் யாழ். மாவட்ட ஈ. பி. டி. பி. காரியாலயத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஈ. பி. டி.பி. பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ரெலிகொம் நிறுவனத்தின் ஊழல்களைக் கண்டித்துப் பேசினர்.

இங்கு உரையாற்றிய யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ஜெகன், ரெலிகொம் பிராந்தியப் பொறியியலாளரை நோக்கி மன்னார் ஊடாகத் தொலைபேசி அழைப்புகள் வழங்கப்பட்டுக் கொண்டிருந்த வேளையில், உங்களுக்கு யார் யார் பணம் தந்தவர்கள், யார் யார் போத்தல் தந்தார்கள் என்ற பட்டியல் எம்மிடம் உள்ளது என்றார். அத்துடன் நான் ஒரு பாராளுமன்ற உறுப்பினர், நான் தொலைபேசி அழைப்புப் பெறுவதற்காகப் [illegible]னயிலுள்ள தொலைபேசிப் பா[illegible]ர்த்தனை நிலையத்துடன் தொடர்பு கொண்டபோது வையடா போனை என்று தூஷணத்தில் பதில் வந்தது. நான் ஒரு பாராளுமன்ற உறுப்பினர், எனக்கே இந்தக் கதி என்றால், சாதாரண மக்களின் நிலை என்ன என்றார்.

## மாணவிக்கு நியமனம்! ஆசிரியருக்கு இல்லை!

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்ட இரண்டாம் நாள் அமர்வின் போது, நெடுந்தீவுப் பிரதேச சபைத் தலைவர் ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டார், தொண்டர் ஆசிரியர் நியமனம் பற்றி.

ஒரு பாடசாலையில் பத்து ஆண்டுகளாகத் தொண்டர் ஆசிரியராகப் பணிபுரிந்து வரும் ஆசிரியருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை. அவரிடம் கல்வி பயின்ற மாணவி ஒருவருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இது என்ன நியாயம் ஐயா? என்றார் நெடுந்தீவுப் பிரதேச சபைத் தலைவர்.

நெடுந்தீவுப் பிரதேச சபைத் தலைவரும் ஒரு ஈ. பி. டி. பி. உறுப்பினர். அவரது தோழர்களால் தயாரிக்கப்பட்ட பட்டியலின் பிரகாரம் தான் ஸ்ரீதர் தியேட்டரில் வைத்து நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன என்பது இவருக்குத் தெரியாதா அல்லது இவர் சிபாரிசு செய்த யாராவது விடுபட்டு விட்டார்களா ?

## வவுனியாவில் விபத்து மரணம் இயற்கை மரணம் ஆகிவிட்டது!

வவுனியா பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் கிளிநொச்சியிலிருந்து இடம் பெயர்ந்து வாழ்ந்து வந்த சி. பெரியசாமி (47) என்பவர் கடந்த ஜுலை 21 அன்று பூந்தோட்டம் சந்திப்பகுதியில் வைத்து வவுனியா அரச பணிமனைக்குச் சொந்தமான நீர்தாங்கிவண்டி (பௌசர்) மோதி படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். இவர் ஜுலை 27 அன்று வவுனியா வைத்தியசாலையில் உயிர் இழந்து விட்டார். இதனால் இவரது மனைவியும், இரண்டு வயதுக் குழந்தை உட்பட ஆறு பிள்ளைகளும் முகாம் வாழ்க்கைக்குள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளனர். பெரியசாமி விபத்தினாலேயே உயிர் இழந்துள்ளார். ஆனால் இவர் இறந்த பின்னர். வழங்கப்பட்டிருக்கும் மரணச்சான்றிதழில் இயற்கை மரணம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கணவன் உயிரிழந்ததினால் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் இருக்கும் மனைவி இராசம்மா தனக்கும், பிள்ளைகளுக்கும் இழப்பீடாக நிவாரணம் கிடைக்கும் என நம்பியிருந்தார்.

ஆனால் கணவன் இறந்ததிற்காக வழங்கப்பட்ட மரணச் சான்றிதழிலோ இயற்கை மரணம் என குறிப்பிடப்பட்டுள்ளது. இதனைப் பார்த்த இராசம்மா கவலையும், அதிர்ச்சியும் அடைந்து தனக்கு நீதி கேட்டு மனுக்கொடுத்துள்ளார். வவுனியா அரச அதிபர், மனித உரிமை காரியாலயம், சுகாதாரப் பணிப்பாளர் ஆகியோரிடமே நீதி கேட்டு மனுக் கொடுத்துள்ளார். இதற்கிடையில் பெரியசாமியின் இறுதக் கிரிகையன்று தம்மை அடையாளம் காட்டாத, இனம் தெரியாதவர்கள் வந்து இராசம்மாவிடம் ஐயாயிரம் ரூபாவைக் கொடுத்து விட்டு இந்த மரணம் பற்றி மேலதிகமாக எதுவு[illegible] பேசவேண்டாமெனக் கூறி[illegible] சென்றுள்ளனர்.

ஆக, விபத்து மர[illegible] இயற்கை மரணமாக மாற்றப்பட்டிருக்கிறது. இதற்குப்பின்னால் உள்ள கரங்கள் எவை?

அப்பாவி இராசம்மாவுக்காக நீதியின் கதவுகள் திறக்குமா?

## மிதிவெடி அகற்றும் வெண்புறா!

வன்னி மற்றும் தென்மராட்சிப் பகுதியில் இராணுவத்தினரிடமிருந்து புலிகள் மீட்டெடுத்த பகுதிகளில் இதுவரை 45,000 மிதிவெடிகளைத் தாம் அகற்றியுள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

வெண்புறா என்ற பெயரில் மிதிவெடி அகற்றுவதற்காக அமைப்பு ஒன்றையும் புலிகள் அமைத்துள்ளனர்.

யுனிசெவ் நிறுவனத்தின் உதவியுடன் இந்த அமைப்புப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் மிதிவெடி அகற்றும் பணியிலீடுபட்டுள்ளது.

அத்துடன் மிதிவெடி விழிப்புணர்வுப் பிரச்சாரத்தையும் புலிகளின் குரல் வானொலி மூலம் புலிகள் செய்து வருகின்றனர்.

## மொறவெவவிலும் தாக்குதல் !

கடந்த செப்.9 திங்களன்று மொறவெவ பொலீஸ், தரைப்படை - கூட்டுப்படை முகாம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் மூன்று படையினர் கொல்லப்பட்டதுடன் ஆயுத தளபாடங்களும் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலின் போது பலர் படுகாயமடைந்துமுள்ளனர், விடுதலைப்புலிகள் தமது தரப்பில் மூன்று போராளிகள் வீரமரணமடைந்துள்ளதாகக் கூறியுள்ளனர். அத்துடன் 60 மில்லி மீற்றர் மோட்டார் ஒன்று, 60 மில்லி மீற்றர் எறிகணை 36, 60 மில்லி மீற்றர் பூஸ்ரர் 10, 40 மில்லி மீற்றர் பிஸ்ரல் ஒன்று, 40 மில்லி மீற்றர் எறிகணை 22 , ரி 56 ரம் மகசீன் இரண்டு, ஏ.கே.மகசீன் ஒன்பது, நடுத்தர ரவைகள் 1558, நடுத்தர ரவைகள் இணைப்பிகளுடன் 200, குண்டுகள் 17, படையினரின் சப்பாத்துக்கள் நான்கு சோடி, கிட் பாக் இரண்டு ஆகியவை விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளதாகப்புலிகள் தெரிவித்துள்ளனர். அத்துடன் ஏககாலத்தில் பன்குளம் விமானப்படைத் தளம் மீதும் விடுதலைப்புலிகள் மோட்டார், எறிகணைத்தாக்குதல்களை நடத்தியுள்ளனர். இதன் சேதவிபரங்கள் கூறப்படவில்லை.

ஆசிரியர்: பாலசுப்ரமணியம் வசந்தன், வெளியீட்டாசிரியர்: எஸ்.கே.விக்னேஸ்வரன், 19/4, 1/1, நாவல றோட், நுகேகொட. அச்சுப்பதிவு: நவமக, 66/4, தர்மராம றோட், இரத்மலானை. 13.09.2000